

தரமான உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்படும்

நியூரோன் பமபுகளை வாங்குங்கள்



# வார முரசொலி
VARAMURASOLI



Pump W th Standard Accessories

Select Newtone - Pumps



முரசு 3 ஒலி 131 ஞாயிற்றுக்கிழமை 30 - 04 - 1989 (சித்திரை 17) றம்ழான் 23 விலை ரூபா நான்கு


★ இரு பொலிஸார், ஒரு சிப்பாய், கிராமசேவகர் உட்பட ஐந்து பேர் கொலை

# நான்கு நாள் ஓய்வையடுத்து

# ஜே.வி.பி. மூன்று திடீர் தாக்குதல்

## புத்தளத்தில் உ. அ. அதிபர் அலுவலகமும் 4 வீடுகளும் குண்டினால் தகர்த்து எரிப்பு

நான்கு நாட்கள் இடைவெளிக்குப் பின்னர் ஜே. வி. பியினர் தென்பகுதியிலும், புத்தளம் மாவட்டத்திலும் நேற்று நடத்திய மூன்று தாக்குதல்களில் மொத்தம் ஐவர் கொல்லப்பட்டனர், இவர்களில் மூவர் பாதுகாப்புப் படையினர், உதவி அரச அதிபர் ஒருவரின் அலுவலகமும், மற்றும் தனியாரின் நான்கு வீடுகளும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதுடன், தீ மூட்டியும் கொளுத்தப்பட்டன. இந்தச் சம்பவங்களால் எட்டுப்பேர் காயமடைய நேர்ந்தது

நேற்றுக்காலை எட்டரை மணியளவில் மாத்தறை மாவட்டத்தில் கஞக்கெட்டியாவ என்ற இடத்தில் பொலிஸ் ஜீப் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு றிசர்வ் பொலிஸார் கொல்லப்பட்டனர் ஆறு பொலிஸார் படுகாயமடைந்தனர்.

ரக்போவ என்ற இடத்தில்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## கிட்டு கொழும்பு செல்லலாம் என்று பி.பி.ஸி. சொல்கிறது

கொழும்பில நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு, விடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ் மாவட்ட தளபதி கிட்டுவின கொழும்பு வருகை எதிர் பார்க்கப்படுவதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

அநேகமாக இவ்வார முற்பகுதியில் அவர் கொழும்பு செல்லலாம் என்றும், அதனைத் தொடர்ந்து பேச்சுக்கள் தொடரலாம் என்றும் அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது,

புலிகள் தரப்பில் மேலும் இருவர் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சிங் வருகையின் நோக்கத்தில் அரசுக்கு வித்தியாச பார்வை

பிரதமர் ராஜீவின் பிரதிநிதியாக இந்திய வெளியுறவுச் செயலர் திரு எஸ் கே. சிங் நாளை திங்கட்கிழமை கொழும்பு வருகின்றார். இவர் நான்கு நாட்கள் கொழும்பில் தங்கியிருந்து பேச்சுவார்த்தை நடத்திவிட்டு வியாழக்கிழமை புதுடில்லி திரும்புவார்

இந்தியப் படைகளை திருப்பி அழைப்பது பற்றியே இவர் பேசலாமென்று பொதுவாகக் கூறப்படுகின்றதாயினும், கொழும்பில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்களின் பெறுபேறுகளைநேரில் அறிவதே திரு. சிங்கின் திடீர் விஜயத்தின் நோக்கமென்று அரசு கருதுகிறது.

திரு. சிங் இந்தியப் பிரதமரின் விசேஷ செய்தியொன்றை ஜனாதிபதி பிரேமதாஸவிடம் கையளிப்பார். இருநாட்டு புதிய நட்புறவு ஒப்பந்தம் பற்றியும் இவர் பேசுவார்.

## ஜவான்கள் இருவர் மரணம்; பொதுமக்கள் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

நேற்றுமுன் தினம் மாலை கிளிநொச்சி 155-ம் கட்டையில் இந்திய அமைதிப்படையுடனான துப்பாக்கி மோதலொன்றைத் தொடர்ந்து பல பொதுமக்கள் பொல்லுகளாலும், குண்டாந்தடிகளாலும் தாக்கப்பட்டனர் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கருகாமையில், கடைகளிலிருந்தோரும் சுமார் இரண்டு மைல் தூரத்தில் வீடுகளிலிருந்தோரும் வாகனங்களில் கொண்டுவரப்பட்டுத் தாக்கப்பட்டனர்.

கடுமையான கை, கால், முறிவுகளோடும், காயங்களோடும் பின்வருவோர் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்தி

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு பேச்சுக்களில் அடுத்த புதனுக்கு முன்னர் முன்னேற்றம் இருக்காது?

இலங்கை அரசாங்க குழுவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சென்ற புதன்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்துவந்த கடந்த எழுபத்தியிரண்டு மணித்தியாலங்களாக, எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை என்றும், ஸ்தம்பித்த நிலையிலேயே அனைத்தும் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்றாம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் 'முன்னேற்றம்' எதனையும் தாங்கள் எதிர்பார்க்கவில்லை என்று அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர், வெளிநாட்டுச் செய்தி நிறுவனமொன்றுக்குத் தெரிவித்துள்ளார் திரு. அன்ரன் பாலசிங்கத்துக்கு உதவியாக எதிர்பார்க்கபட்டும் இருவரின் வருகையில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்குக் காரணமென்று கூறப்படுகின்றது

## இந்திய வெளியுறவு அமைச்சர் கவலை

## சிங்கப்பூரில் 9 இந்தியருக்கு பிரம்படியும் சிறைத்தண்டனையும்

சிங்கப்பூரில் குறிக்கப்பட்ட காலத்திற்குமேல் தங்கியிருந்த குற்றத்திற்காக ஒன்பது இந்தியர்களுக்கு சிறைத்தண்டனையும், பிரம்படியும் வழங்க சிங்கப்பூர் மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் திரு நட்வர் சிங் கவலை தெரிவித்துள்ளதுடன், இத்தீர்ப்பை எதிர்த்து இந்திய தூதுவராலயம் மேன்முறையீடு செய்யும் என்றும் தெரிவித்துள்ளார்

## வடகிழக்கில் 5000 பேருக்கு புதிதாக ஆசிரிய நியமனம்

இருபத்தி ஐயாயிரம் ஆசிரிய பயிலுனர்களை நியமிக்கும திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஐயாயிரம் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் உள்ள ஆசிரிய வெற்றிடங்களுக்கேற்ப இப்புதிய ஆசிரிய நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் முதல் கட்டமாக மாவட்டங்கள் தோறும் உள்ள ஆசிரிய வெற்றிடங்கள் பற்றிய பூரண விபரத்தை

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## கல்முனையிலும் சிவில் நிர்வாகத்தடை

விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகத்தடை கல்முனை மாவட்டத்திலும் அமுலுக்கு வந்துள்ளது வியாழன்,

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைகள் உத்தரவிட்ட இடமாற்றங்களை செல்லுபடியற்றதாக்கும் அரசாங்க சுற்றுநிருபம்

மாகாண சபைகளால் மேற்கொள்ளப்பட்ட பொது நிருவாகத்துறை ஊழியர்கள் அனைவரினதும இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளதாக அறியப்படுகின்றது இதுசம்பந்தமாக பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபை அமைச்சு சுற்றுநிருபமொன்றை தயாரித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது ஏப்பிரல் மாதம் இருபத்தியோராம் திகதியிடப்பட்ட இச் சுற்றுநிருபம் அடுத்த சில தினங்களில வெளியாகலாம் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது. இதனடிப்படையில் மாகாண கல்வி அமைச்சுக்களால் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்ட பல திடீர் இடமாற்றங்கள் செல்லுபடியற்றவையாகலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது கல்வித்திணைக்களங்களில் கடமைபுரியும் பல பொது நிருவாகத்துறை நிர்வாக அதிகாரிகளும், எழுதுவினைஞர்களும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் குறுகிய கால முன்னறிவித்தலுடன் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## கீல்ஸ் (KEELS) ஸ்தாபனத்தின் பதப்படுத்தப்பட்ட இறைச்சிவகைகள்




போன்: 22575

ஏகவிநியோகஸ்தர்:
**மெடிக்கல் ஹோல்**
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

## உடன் தேவை

102, அரசடி வீதியில் இருக்கும் "கோல்டன் சன்" (பிறவுண் ரோட், அரசடி ரோட் சந்தி) புத்தகங்கள், பான்சி சாமான்கள் விற்கும் கடைக்கு விற்பனையாள ராக கடமை புரிவதற்கு ஒரு மைல் சுற்றுடலுக்குள் வசிப்பவர் விண்ணப்பிக்கவும்.

திறமைக்கு ஏற்ப சம்பளம் கொடுபடும். O/L படித்த வராக இருப்பது அவசியம்.

தொடர்பு கொள்ளும் நேரம்:-
காலை 10—12 மணிவரை
மாலை 03—04 மணிவரை

**கோல்டன் சன்**
102, அரசடி ரோட், யாழ்ப்பாணம்.

04421

---

## WANTED

**Site Supervisor (Civil)**

Qualification: N C T Civil Engineering or Quantity Surveying Experience: 2 Years. Please call over office At 9.00 a m on 03.05.1989

**K. A. Engineers**
142, Palaly Road Thirunelvely North
Jaffna. 04464

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
17 - 12 - 1954
•
மறைவு:
10 - 05 - 1988



திதி: 30 - 04 - 1989

**திருமதி பரமேஸ்வரி சின்னத்தம்பி**
(தலைவர், நவமாதர் மன்றம் – கைதடி)

பொன்முகம் சிந்தும் புன்னகை
எம்முகம் எங்கும்
அன்பே உருவான அருள்நகை
அரனுடன் கலந்ததோ உன்னகை.

நவபுரம்.
கைதடி.

மகள் ப்ரியா, கணவன் சின்னத்தம்பி,
உறவினர்கள்.

04459

---

## வயதெல்லை அதிகரிப்பு

அரசாங்க சேவைக்கு தெரிவுசெய்யப்படும் வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு வயதெல்லையை நாற்பத்தைந்தாக உயர்த்துவதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இது உடனடியாக அமுலாகும் என அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது.

---

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

ஆரம்ப பிரெஞ்மொழி வகுப்புகள் 5-5-1989 முதல் ஆரம்பமாகின்றன விபரங்களுக்கு Alliance Francaise De Jaffna. யாழ் பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம் 130,1-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 04429

### தேவை

அச்சகத்தில் வேலை பழக ஆர்வமுள்ள படித்த இளைஞர்கள் (18– 20 வயது) தேவை. நேரில் சமுகந்தரவும். தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 04410

### சோதிடம்

பிறநாட்டுப் பிறப்புச் சாதகங்கள், பிரயாணம், குறைந்த சலாரில் சிறந்த திருமணப் பொருத்தங்கள், செவ்வாய் தோஷ நிவர்த்தி விதிகளுக்கு அமையப் பெறவும், காதல் கல்யாணம், மாப்பிள்ளை பற்றிய விபரங்கள் அறியவும், உயர்கல்வி, தொழில், நோய்கள் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்க்கமான ஆலோசனை பெற அழைக்கின்றேம். செ. இராசேந்திரன், "திருவுளம்", அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேசன் ரோட், கொக்குவில். 04433

### புத்தகம்

பெரியபுராணம்-திருநகரச்சிறப்பு, பதவுரை, கருத்துரை, இலக்கண விளக்கம் என்பவற்றுடன் வெளிவந்துவிட்டது. 10-11 ஆம் ஆண்டு மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய அரிய நூல். வெளியீடு: தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர். 04465

---

**A/L MATHS**
ஆசிரியர்:
**ரவிமோகன்**
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]

---

**YARL HALL**
Main St., Jaffna.

**A/L 91**

தூயகணிதம்
பிரயோக கணிதம்

ஆசிரியர்கள்:
T. தயாபரன்
T. M. ஞானி

**ஆரம்பம்: 1.5.89**
காலை 9 மணி

04467

---

## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் லிமிற்றெட்

தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை.

ஆரம்பம்: 1957

பதிவு இல. S. 154 / 26.3.64

### முகவர்கள் தேவை

ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, காரைநகர், பருத்தித்துறை, கைதடி, நாவற்குழி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் (குருநகர், பாஷையூர்), திருநெல்வேலி, தெல்லிப்பழை, காங்கேசன்துறை, பரந்தன், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னர், திருகோணமலை, மட்டக்களப்பு.

தகைமை:-
1. இலங்கைப் பிரஜையாகவும்,
2. திட ஆரோக்கிய முடையவராகவும்,
3. க. பொ. த. சாதாரணம் சித்தியடைந்தவராகவும்.
4. வயது:- 21 - 28 இடைப்பட்டவராகவும்.
5. சொந்த துவிச்சக்கர வண்டியுடையவராகவும் உள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

கீழ்க்காணும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ்
2. கல்வித்தகைமைச் சான்றிதழ்
3. சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள்
4. தேசிய அடையாள அட்டை

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

**15 - 5 - 89 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்**

வட்டுக்கோட்டை,
28-4-89

வே. இ. புவனேஸ்வரன்
தலைவர்.

விண்ணப்பங்கள் யாவும்
பொது முகாமையாளர்,
அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம் லிமிற்றெட்,
தபாற்கந்தோரடி வட்டுக்கோட்டை
என்ற விலாசத்திற்கு 15 5-89, திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

04458

---

## காணி விற்பனை

உங்கள் காணிகள் வீடுகளை விற்க விரும்புகிறீர்களா?
நாடுங்கள்

**49** வருட காலமாக சேவை புரியும்

**த பினன்ஸ் கொம்பனி லிமிட்டட்**
(பினன்ஸ் ஹவுஸ்)
249, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்

நீங்கள் எதிர்பார்க்கும் விலைக்கு விற்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்

04415




# ஆசிரியர் மாணவருக்கு கற்பிக்கின்றனரா?

அ. பஞ்சலிங்கம்
அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி

கற்பித்தல் என்பது ஒருகலை அதனை திறம்படச் செயற்படுத்த வேண்டியது ஆசிரியர்களுடைய கடனாகும். நாம் கற்பித்தலைச் சரியாகச் செய்கிறோமா? என்பது சிந்திக்கப்பட வேண்டியது ஒன்றாகும். பொதுவாக கற்பித்தலில் சில உத்திகளையும் நுட்பங்களையும் கையாள்வதன் மூலமே ஆளுமையுடைய சமுதாயத்தைஉருவாக்கமுடியும்

கற்பித்தலை ஊக்குவிக்கும் காரணிகள் பலவாக இருந்தாலும் அவற்றுள் பின்வருவன அதிசிறப்பிடம் பெறுகின்றன அவையாவன:-

1. கற்பித்தலை பிறருக்குச் செய்யும் சேவையாகக் கருதல்.
2. பிறர் மீது பிரயோகிக்கும் அதிகாரம்.
3. பணவருவாய்.

ஓர் ஆசிரியரின் வேலை மணித்தியாலங்களைக் கொண்டு அளப்பதல்ல இது அவருக்கே நன்கு தெரியும் தனது உயர் தொழிலுக்கு கௌரவத்தை எப்பொழுதும் ஏற்படுத்தும் நோக்காக செய்கின்ற ஒரு வேலை எனலாம்.

நாம் கற்பித்தலின் பயனாக எத்தகைய வெகுமதிகளைப் பெறுகிறோம் என்பதனையும் அறிதல் வேண்டும். அவற்றில் முக்கியமாகக் கருதப்படுபவை: வேலையை நன்ருக செய்து முடித்த மனநிறைவு, உண்மையான சேவையொன்றைஆற்றியமை, உண்மையான மாணவர்கள் வாழ்க்கையில் அடையும் முன்னேற்றம், மாணவர்களிடமிருந்தும், சகாக்களிடமிருந்தும் பெறும் மதிப்பு

ஓர் ஆசிரியரிடமிருந்து வெளிவரும் வார்த்தைகளிலும் பார்க்க ஆயிரம் மடங்கு வலுக்கூடியதாக "அவர்" ஒலிப்பார் "அவர்" என்பது ஆசிரியரின்பால் உள்ளடக்கப்பட்டுள்ள பண்புகளும் மனநோக்கும் ஆகும். ஒரு நல்லாசிரியர் எப்பொழுதும் உற்சாகமுடையவராகவும் அன்புடையவராகவும், ஒத்துப்போகக்கூடியவராகவும் பல அபிப்பிராயங்களையும் சகிக்கக் கூடியவராகவும், பிறருடன் ஒத்துழைக்கக்கூடியவராகவும், பொறுமை உடையவராகவும், நம்பிக்கையுள்ளவராகவும், பிறரைக்கவரக் கூடியவராகவும், ஊக்குவிக்கக் கூடியவராகவும் சாமர்த்தியமுள்ளவராகவும். தெளிவான சிந்தனையுள்ளவராகவும், மரியாதையான நடத்தையுடையவராகவும், அனுதாபம் உள்ளவராகவும், தனது பாடத்தை நன்கு தெரிந்தவராகவும், பொறுப்புக்களை ஏற்கும் மனப்பாங்குள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

இதே வேளையில் ஒரு நல்லாசிரியரிடம் இருக்கக் கூடாத அம்சங்களும் உள. அவற்றுள் மிகமிக முக்கியத்துவம் ஆனவைகளாக குத்தலான பேச்சு, கர்வம், தன்னலம், புனிதமானதை அவமதித்தல், சகிப்புத் தன்மையின்மை, ஒழுங்கற்ற நிலை என்பனவற்றைக் கூறலாம்.

எச்சந்தர்ப்பத்திலும் ஆசிரியரின் முன்மாதிரியாலும், வேலை, ஒழுங்கு, கடமை உணர்ச்சி, துணிந்து செயற்படல், நேர்மை, நேரத்திற்கு வேலை செய்தல், நல்நோக்குப் போன்ற நற்பழக்கங்களை மாணவர்கள், ஆசிரியர் கற்பிக்காமலேயே அவரிடமிருந்து கற்றுக் கொள்கின்றார்கள்

ஓர் ஆசிரியர் கற்பித்தல் முறைகளைக் கற்பதனுல் மட்டும் அதில் பாண்டித்தியம் பெற்று விடமுடியாது அது உள்ளத்தோடு ஒன்றிய செயற்பாடு. ஒரு மாணவன் மேதையாக இல்லாது இருக்கலாம் அப்படியிருந்தும் எமது முழு முயற்சிகளையும் அவன் மீது பிரயோகித்து அவனை முன்னேற்ற எத்தனிக்கலாம். குறைபாடுகளையும் தடைகளையும் நீக்கி மாணவர்களின் இளமை வேகத்தையும், உற்சாகத்தையும் நல்வழிப்படுத்துதல் ஆசிரியருக்கு ஒரு பெரும் சவாலாகும்.

மாணவன் பாடசாலை வாழ்க்கையும் பாடவிதானத்துக்குப் புறம்பான செயற்பாடுகளையும் விரும்பக் கூடும் அவன் நிட்சயமாகப் பாடங்களை மட்டும் கற்பதற்காகப் பாடசாலைக்கு வரவில்லை அவன் கல்விக்காக மட்டும் கல்வி கற்கப் பாடசாலைக்கு வரவில்லையென்பதை ஆசிரியர்கள் நன்குணர்ந்து அதற்கேற்பச் செயற்பட வேண்டும்.

மாணவனின் கெட்டித்தனங்கள் ஆசிரியரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. அவனது பரம்பரை, ஞாபக சக்தி, விவேகம் ஆகியவை தொடர்பாக நாங்கள் ஒன்றுமே செய்துவிட முடியாது. எனினும் அவனுடைய வேலைப்பழக்கங்கள் பற்றி நாங்கள் எவ்வளவோ செய்யலாம்.

மாணவனும் ஒரு மனிதப் பிறப்பே. எனவே அவனுக்கு ஊக்குவிப்பு அவசியம். நாம் எந்தளவு அவனை ஊக்குலக்கின்றோமோ அந்தளவுக்கு அவனது செயற்பாடுகளும் வினைத்திறனும் அதிகரிக்கும், அல்லாமலும் தொடர்ச்சியான பொறுமையான ஊக்குவிப்பின் மூலமே திறமைகளை விருத்தி செய்யலாம்.

அவன் எவ்வாறு கற்கின்ருன் என்பது பற்றிச் சிந்தித்தல் வேண்டும் முதலில் அடிப்படைகளை உணர்தல் வேண்டும். பின்பு அடிப்படைத்தத்துவங்களை மீண்டும் மீண்டும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பிரயோகிக்க முயல்வதன் மூலம் பல்வேறு துண்டுகளும் ஒன்ருகப் பொருந்தி முழுமையாவதைக் காணலாம்.

> ஆசிரியர் எமது சிருர்களின் வருங்கால வாழ்க்கையை உருவாக்குவதில் அதிக பங்குடையவர். எனவே அவரும் அவரது தொழிலும் சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பன ஆசிரியர் ஒருவர் தினமும் அவருக்குத் தெரிந்தோ தெரியாமலோ அவரது சகாக்கள், மாணவர்கள் சமூகத்தினர் ஆகியோரால் மதிப்பீடு செய்யப்படுகின்ருர் அவர் தனது தொழிலின் முக்கியத்துவத்தினுலும் சமூகத்துடன் ஒன்றி வாழ்கின்றமையாலும அதிகம் விமர்சனத்துக்குள்ளாகின்ருர். எனவே ஒரு ஆசிரியர் தன் தொழில் பற்றிய அறிவினை விருத்தி செய்வது அவசியமாகிறது அதே வேளையில் அவரை விமர்சிப்பவர்களும், அவரின் தொழிலில் உள்ள கஷ்டங்களையும், நுட்பங்களையும் சிறிதளவாயினும் அறிந்திருந்தால் அவர்களின் விமர்சனங்களும் ஆக்கபூர்வமானவையாக அமையும்.

மாணவனுக்குக் கிரகிக்கும் நேரம் இன்றியமையாதது. புதிய புதிய எண்ணக் கருத்துக்களை வெகுவிரைவாகப் புகுத்தப்படின் அவை மனதில் பதிய மாட்டாது இதுவே கற்றலின் பெரிய தடையாக இருக்கலாம். வெவ்வேறு மாணவர்களுக்கு, கிரகித்தல் நேரம் வெவ்வேறு விதமாக அமையலாம். சிலர்விரைவாகவும் சிலர்மெதுவாகவும் கிரகிப்பர். வயது கூடிய மாணவர்களுக்கு கிரகித்தல் நேரம் கூடிதலாக இருக்கலாம். கற்பிக்கும் பாடம் பற்றிய அறிவு ஏற்கனவே அவர்களுக்கு இருந்திருக்கலாம் அதனுல் அவர்களின் கவனம் வேறு திசைகளிற் திருப்பப்பட்டு அவர்களின் கிரகித்தல் நேரத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமிக்கலாம். எனவே அவர்களது பராக்கைத் தவிர்த்தல் இன்றியமையாததாகின்றது.

இன்னும் மாணவர் ஆசிரியர் மீது காட்டும் மரியாதையானது தன்னியல்பாக வருவதல்ல. ஒவ்வொரு வகுப்பறையிலும் இதனை வென்றெடுத்தல்வேண்டும் பாடத்திலுள்ள நிபுணத்துவம், அதனைஒப்புவிக்கும் முறை மாணவாமீது ஆசிரியர் காட்டும் நல்லெண்ணம் முதலியவற்ருல் ஆசிரியர் மாணவரின் நன்மதிப்பைப் பெறலாம், எப்பொழுது எந்நேரத்திலும் மாணவன் ஆசிரியர் மீது நம்பிக்கை வைக்

(15ஆம் பக்கம் பார்க்க)

## தரிசனம்

"மாதா.பிதா.குரு. தெய்வம்" என்பது பழமொழி

மாதாவுக்கும் பிதாவுக்கும் அடுத்ததாக மனித வாழ்வில் இடம் பெறுபவர் குரு எழுத்தறிவிக்கும் ஆசான்குரு இவர்கள் மூவரையும் தெய்வங்களாகத் துதிப்பதையே "மாதா பிதா குரு-தெய்வம்" என்று பழமொழி கூறுகின்றது.

இந்தவகையில் ஆசிரியத் தொழிலின் புனிதம் மகத்துவம் புலனுகின்றது.

ஆசிரியர் தெய்வம் என்ருல், பாடசாலை ஆலயமாகின்றது.

இந்த வகையில், கடந்த திங்கட்கிழமை பாடசாலைகள்மீளஆரம்பிக்கப்பட்டபோது சகல பாடசாலைகளிலும் முதலாவதாக இடம்பெற்ற "மரியாதை நிகழ்ச்சி இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகவுள்ளது.

கல்வி, கலாசார, ராஜாங்க அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தென்னிலங்கைப் பாடசாலைகளில் மாணவர்கள் ஆசிரியர்களை வணக்கம் கூறிவரவேற்று கரங்கூப்பி, அவர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்ற காட்சி......

தொலைக்காட்சியில், பல பாடசாலைகளில் அன்று இடம்பெற்ற இந்த வைபவம் ஒளிபரப்பப்பட்டது

இவ்வாறன மரியாதை, கௌரவம், குரு வணக்கம் என்பவை ஒரு இன மக்களுக்கு மட்டும் உரியவையல்ல.

இது சிங்களப் பாடசாலைகளுக்கு மட்டுந்தான் உரியவையன்று.

உண்மையைச் சொல்லப் போனுல், தமிழ்ப் பாடசாலைகளில் - குறிப்பாக இந்துப் பாடசாலைகளில் இது காலங்காலமாக அனுசரிக்கப்பட்டு வந்த மரபு.

ஏடு தொடக்கும் நாளான விஜயதசமி தினத்தன்று, மாணவர்களாகும் சிறுவர் சிறுமியர், ஆசானின் பாதங்களை வணங்குவர். பெற்ருேர் குருதட்சணை வழங்கி, தமது பிள்ளையை குருவின் மடியில் இருத்தி, ஏடு தொடக்க ஆரம்பித்து வைப்பர்.

இவ்வாறன பாரம்பரியம் பேணப்பட்டு வந்த தமிழ்ப் பாடசாலைகளில் குரு வணக்கம், குரு கௌரவம் என்பது மறக்கப்பட்டுவிட்டது

நல்ல விடயங்கள் எங்கிருந்தாலும் அதனை நாம் வரவேற்க வேண்டும். நல்லவைகளை நாம் ஏற்றுக் கொள்ள பழகிக் கொள்ளவும் வேண்டும்.

இந்த வகையில் பாடசாலைகளில் குரு வணக்கம் அத்தியாவசியமாகும் சிறுபராயத்திலேயே மாணவர்களுக்கு இதனைப் பழக்குவது பிற்காலத்தில் பல நன்மைகளைப் பயக்கும்.

எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

## செயற்கரிய செய்தோர்

### பெருஞ்சித்திரனர்

சங்கப் புலவர்கள் சங்கச் சான்ருேர் என அழைக்கப் பட்டனர் அவர்களுடைய ஆக்கங்களிற் காணப்பட்ட அறம் அவர்தம் வாழ்விலும் காணப்பட்டது அவர்கள் போற்றிய வீரம், தன்மானம் அவர்கள் வாழ்விலும் இருந்தது.

பெருஞ் சித்திரனர் என்னும் புலவர் அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் அரசனைப் பாடிப் பரிசில் பெறசசென்ருர் என்னகாரணத்தாலோ அதியமான், பெருஞ்சித்திரனரைச்சந்திக்காது இன்னெருவரிடப் பரிசிலைக் கொடுத்து அனுப்பினுன்.

தன்மானம் மிக்க பெருஞ்சித்திரனருக்கு இது பெருமதுன்பத்தையும், சினத்தையும் ஏற்படுத்தியது பரிசில் கொண்டுவந்தவனைப் பார்த்தார்.

"என்னை அழைத்துக் காணுது தந்த இப்பரிசிலைப் பெறுவதற்கு நான் வாணிகப் பரிசிலன் அல்லன் என்னை வருக என வரவேற்றிருக்க வேண்டும் எனது தகுதியை அறிந்திருக்கவேண்டும்: என்னை மதித்துத் தரும் பரிசில் சிறிதாயினும் அதனை நான் மகிழ்வுடன் ஏற்பேன். இதனை நான் ஏற்க மாட்டேன்" எனப் பரிசிலை ஏற்க மறுத்தார்

பெருஞ்சித்திரனர் பல குன்றுகளையும், மலைகளையும் கடந்து நீண்டதூரம்நடந்து அதியமான் நெடுமான அஞ்சியைக் காணச் சென்றிருந்தார் இத்தனை துன்பங்களையும் அவர் பட்டது பரிசில் பெறுவதற்காகத் தான் ஆனுல் வறுமை காரணமாகத் தன்மானத்தில் இருந்து விலகிப் பரிசில் பெற அவர் விரும்பவில்லை. கிடைத்தது ஆதாயம் என்ற நிலையில் அவர் இல்லை.

மானத்தைப் போற்றிப் பாடி வாழ்விலும் கடைப்பிடித்த பெருஞ்சித்திரனர் செயற்கரிய செயல் புரிந்தவரே.

## வைத்திய கலசம்

# கிருமிநாசினி தெளிப்பவர்க்கு சில ஆலோசனைகள்

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B. S. (Cey)

★ எமது சமூகம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது எனவே கிருமிநாசினிகளின் பாவனையும் அதன் ஆபத்தான விளைவுகளும் எமது சமூகத்தை மிகவும் மோசமாகத் தாக்குகிறது. இன்று விவசாயிகள் மாத்திரமின்றி வீட்டுத்தோட்டம் செய்பவர்களும், அலங்கார செடிகளை வீடுகளில் வளர்ப்பவர்களும் கூட கிருமிநாசினிகளை உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது எனவே கிருமிநாசினிகள் பற்றி நீங்களும் கூட அறிந்து கொள்வது அவசியம்.

★ கிருமி நாசினிகளைப் போதியளவு அவதானமின்றித் தெளிப்பவர்களும், அல்லது அதை வேண்டுமென்றே தற்கொலைக்காக உட்கொள்பவர்களும், அவற்றின் நச்சுத்தன்மையால் தாக்கப்படுகின்றார்கள் இத்தகையோரில் 15 000 பேர் வருடந்தோறும் இலங்கை அரசினர் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதும், அவர்களில் 1500 பேர் மரணத்தை தழுவுகிறார்கள் என்பதும் உங்களுக்கு அதிர்ச்சியூட்டும் தகவலாயிருக்கலாம்.

★ கிருமிநாசினிகள், அதனைத் தெளிக்கும் உங்களுக்கு மாத்திரமின்றி உங்கள் குடும்பத்தினருக்கும், உங்கள் உற்பத்திப் பொருட்களை உபயோகிக்கும் பாவனையாளர்களுக்கும் கூட ஆபத்தை உண்டாக்கலாம் என்பதை மறந்துவிடாதீர்கள். குழந்தைகள் அவற்றைத் தவறாக உட்கொள்ளக் கூடும் அல்லது கவலை, கோபம் போன்ற உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்டவர்களும், மனநோயாளிகளும் தற்கொலை நோக்கத்திற்காக உட்கொள்ளக்கூடும் எனவே கிருமிநாசினிகளைப் பாதுகாப்பான இடத்தில் வையுங்கள் பெட்டியினுள் வைத்துப் பூட்டித் திறப்பைக் கையில் வைததிருபபது புத்திசாலித்தனமானது.

★ தெளித்த பல நாட்களுக்குப் பின்னரும் கூட, கிருமிநாசினியின் நச்சுத்தன்மை தாவரங்களிலும், காய்கறி, பழவகைகளிலும் மறையாது இருக்கும். பொதுவாக தெளித்து 3,4 நாட்களில் நச்சுத்தன்மை குறைந்துவிடும் ஆனால் சிலவற்றின் நச்சுத்தன்மை 2-3 வாரம் வரைகூட நீடிக்கும் இதுபற்றிய குறிப்புகள் கிருமிநாசினிப் போத்தல்களில் இருக்கும். அதை அவதானித்து, அதற்கேற்றவாறே கிருமிநாசினி தெளியுங்கள். சம்பாத்தியத்திற்காக மனித உயிர்களைப் பணயம் வைக்கக்கூடாது.

★ தெளிகருவிகளை இறுக்கமாகப் பொருத்துங்கள். பொருத்தும்போது இடைவெளி இருந்தால், அல்லது தெளிகருவி சேதமடைந்திருந்தால், மருந்து அசனாடாகச் சிந்தி உங்கள் உடலையோ, ஆடைகளையோ நனைத்து உங்களுக்கு நஞ்சு அபாயத்தை உண்டாக்கிவிடும்.

★ கிருமிநாசினிகள் சுவாசத்தினாலும், தோலினால் உறிஞ்சப்பட்டும் நச்சுத்தன்மையைக் கொடுககின்றன எனவே தெளிக்கும்போது மூக்கையும் வாயையும் சுத்தமான துணியினால் கட்டிக்கொள்ளுங்கள் அத்துடன் உடல் முழுவதையும் மூடக்கூடிய உடைகளை அணிந்து கொண்டே மருந்து தெளியுங்கள் காயங்கள் அல்லது புண்கள் இருப்பவர் மருந்து தெளிக்கக் கூடாது.

★ காற்றோட்டம் குறைந்த, குளிர்மையானகாலைநேரமே கிருமிநாசினி தெளிப்பதற்குப் பொருத்தமானது. வியர்வையால் நனைந்த உடல், நஞ்சை இலகுவாக உறிஞ்சும் என்பதை மறந்துவிடாதீர்கள் தொடர்ந்து இரண்டு மணிநேரத்திறகு மேல் மருந்து தெளிப்பதை தவிருங்கள்.

★ காற்று அடிக்கும் திசையை அவதானித்தே மருந்து தெளிக்க வேண்டும் காற்றிற்கு எதிர்த் திசையில் நின்று தெளித்தால், மருந்து தோலினாலும் சுவாசத்தினாலும் உங்கள் உடலுக்குள் சென்று ஆபத்தை விளைவிக்கும்.

★ மருந்து தெளிக்கும்போது எதனையும் உட்கொள்ள வேண்டாம் உணவு நீராகாரம் ஆகியவற்றை மாத்திரமின்றி வெற்றிலைபோடுதல், புகைத்தல் சிற்றுண்டிகளைக் கொறித்தல் யாவுமே கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

★ கிருமிநாசினி [illegible]து முடிந்த பின் நன்கு சோப் போட்டு உடல்முழுவதையும் சுத்தம் செய்து குளியுங்கள் உடைகளையும் சோப் போட்டு நன்கு கழுவுங்கள்

★ கிருமிநாசினி தெளித்த கருவியை உங்கள் உடலைக் கழுவு முன்னரே சுத்தம் செய்துவிடுங்கள் கிருமிநாசினி வாங்கிய போத்தலை, அது வெற்றுப் போத்தலாக இருந்தால் கூடப் பாதுகாத்து வைகக வேண்டாம் அதைத் தூரவீசி எறியவும் வேண்டாம் அதனை உடைத்து அழித்து விடுவதே பொருத்தமானது.

★ கிருமி நாசினி தெளித்த பின்னர் தலைச்சுற்று, நெஞ்சுப்படபடப்பு வியர்வை, சத்தி, தசை நடுக்கம் போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறவேண்டியது அவசியம்.




## மனமும் மனிதனும்

மனம் உள்ளவன் மனிதன். நினைக்கும் கருவி மனம் தான். மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்று பொருள் ஆகும் தமிழில் மனிதன் என்றும் வடமொழியில் மனுஜ என்றும் ஆங்கிலத்தில் மேன் என்றும் வழங்கப்படுகிறது. "மன்" என்ற பகுதி அடியாக இச்சொல் பிறப்பதை அவதானிக்கலாம்.

★ அாஸ்

## நீர்மேல் நடக்கலாம்

மேல் நாடுகளில் விடுமுறைக் காலங்களை உல்லாசமாகக் கழிக்க விரும்புகின்றவர்களுக்காக நீர்ப்பரப்பின்மீது நடக்க உதவும் படியான மிதப்புச் செருப்புக்களை டச்சு நிபுணர்கள் தயாரித்து இருக்கிறார்கள்.

இந்த மிதப்பு செருப்புக்கள் பாரம் இல்லாத வகையில் வலுவான பிளாஸ்டிக்கினாலும் பாலிஸ்டிரினாலும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தக் காலணிகளைப் பயன்படுத்தி தண்ணீரின் மேல் நடந்துசெல்லலாம்

## திருடன் வரும் நேரம்

மனைவி மிகவும் பயந்த சுபாவம் உடையவள், இரவில் ஏதாவது சிறு ஓசை கேட்டாலும் திருடன் வந்துவிட்டதாகப் பயந்து கணவனை எழுப்பி விடுவாள்.

இந்தத் தொல்லை பொறுக்காத கணவன் ஒரு நாள் சத்தத்தைக் கேட்டுப் பயப்படாதே! எந்தத்திருடனும் சத்தம் செய்து கொண்டு திருடவரமாட்டான் என்று மனைவிக்கு விளக்கிக் கூறினான்

மறுநாளில் இருந்து இரவில் சத்தம் வராத போதெல்லாம் திருடன் வந்துவிட்டதாகப் பயந்து அந்த மனைவி கணவனை எழுப்பிக் கொண்டிருந்தாள்

## நல்ல மாப்பிள்ளை

நம்முடையபெண்ணுக்கு விரைவிலேயே திருமணம் செய்துவிட வேண்டும் என்றாள் மனைவி அதற்குக் கணவன் நல்ல மாப்பிள்ளை வரும் வரை காத்திருக்க வேண்டுமே என்றான்

ஏன் அவள் காத்திருக்க வேண்டும் நான் அப்படிக் காத்திருக்கவில்லையே என்றாள் மனைவி.

## பாரதியார் பாடிய வாழ்த்துப்பா

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அப்போது சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். "மஹாமஹோபாத்தியாய" விருதை அரசாங்கம் அவருக்கு வழங்கியது அதைக் கொண்டாடி ஐயரவர்களைக் கௌரவிப்பதற்காக காலேஜ் மாணவர்கள் பாரதியாரைக் கொண்டு வாழ்த்துப்பா பாடுவதாக முடிவு செய்தனர்.

பாரதியார் கூட்டத்துக்குச் சென்று மூன்று பாக்கள் பாடினார் தொடர்ந்து சொற்பொழிவுகள் நடைபெற்றன. பாரதியாருக்குத் தெரிந்த ஒருவர் பாரதியாரிடம் சென்று நீங்கள் பாடிய வாழ்த்துப்பாக்களில் சொற்குற்றம், பொருட்குற்றம் இருப்பதாகப் பேசிக்கொள்கிறார்கள் என்றார் குழந்தை மனம் கொண்ட பாரதியாரால் அதைத் தாங்கமுடியவில்லை. உடனே வீட்டுக்குத் திரும்பிவிட்டார்.

கூட்டமுடிவில் உ. வே. சாமிநாதையர் பேசுகையில் "இன்று சபையில் என்னைப் புகழ்ந்து சில கவிகள் பாடப்பெற்றன பொருட்சுவையும், சொற்சுவையும், உவமைநயமும் மிக்க அக்கவிகள் என்னை மயக்கின தயவுசெய்து அக் கவிகளை இன்னொரு தடவை கேட்க விரும்புகிறேன்" என்றார்.

கூட்ட நிர்வாகிகள் பாரதியாரைத் தேடிவிட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டதாகக் கூறினர்

சாமிநாதையர் பாரதியாரின் பெயரை அப்பொழுதுதான் முதன் முதலாகத் தெரிந்துகொணடார் அந்தநாள் முதல் பாரதியாரிடம் சாமிநாதையருக்கு அன்பும், மதிப்பும் ஏற்படலாயின.

## இள வயதுச் சாதனைகள்

14 வது வயதில் பார் புகழும் அருமையான சோக நாடகத்தை எழுதிப் புகழ் பெற்றார்

– வில்லியம் பிட்

15 வது வயதில் பிரெஞ்சு இலக்கிய கழகத்திற்கு சிந்தனையூட்டும் கவிதை ஒன்றைச் சமர்ப்பித்து தன் புகழுக்கு வித்திட்டார்

- விக்டர் யூகோ

16 வது வயதில் தன் தந்தையின் படைக்குத் தளபதியாகி உலகையே நிலை கலக்கினான் மாவீரன்.

- அலெக்சாந்தர்

17– வது வயதில் 'பைசா' நகரத்திலுள்ள சாய்ந்த கோபுரத்தின் விளக்கு இப்படியும், அப்படியுமாக ஏன் ஊசலாடுகிறது என்ற ஆராய்ச்சியில் இறங்கிப் புதுமை கண்டான்

- கலிலியோ

18–வது வயதில் பிரெஞ்சுக்காரர்களிடம் தாய்நாட்டுப் பற்றையூட்டி போர்க் குரல் எழுப்பினாள்

–ஜோன்– ஆப் –ஆர்க்

19– வது வயதில் ரெயில் எஞ்ஜின் பற்றிய சித்திரத்தை சிந்தனையில் உருவாக்கினார்

— ஸ்டீபன்ஸ்

20– வது வயதில் புகழ் பெற்ற எழுத்தாளராகி மாற்றாரும் போற்றும் மகோன்னத நிலையைப் பெற்றார்

— வாஷிங்டன் இர்விங்

21– வது வயதில் இசையுலகில் தன் பெயரை நிலை நாட்டிக்கொண்டார்

— பிதோவன்

★ சுருமலையூர் வி. எஸ். ஸ்ரீராம்

## நடப்பதெல்லாம் நன்மைக்கே

★ ஒவ்வொரு நாளும் குறைந்தது முக்கால் மணி நேரமாவது நடக்க வேண்டும் இதை முதலில் 15 நிமிடம் என்று தொடங்கி பின் படிப்படியாக அதிகரிக்கலாம்.

★ மணிக்கு 3 மைல் என்ற வேகத்தில் நடக்க வேண்டும் நடக்கும் போது, கால்களை நன்றாக வீசி நடக்க வேண்டும்.

★ தினந்தோறும் நடக்க வேண்டும்! காலையிலோ மாலையிலோ நடக்கலாம், காலையில் வெறும் வயிற்றுடனும் மாலையில் உணவு உண்ட பிறகும் நடப்பது நல்லது!

★ படுக்கைக்குச் செல்ல முன் நடப்பது நல்ல தூக்கத்திற்கு உதவும்!

★ நல்ல வெயில், மழை, குளிர், வேகமான காற்று இவற்றில் நடக்கக் கூடாது சந்தடி நிறைந்த தெருக்களில் நடப்பதும் நல்லதல்ல.

★ நன்றாக நடப்பது ஜீரணக்கிற்கு உதவும், உடல் இளைக்க வகை செய்யும், வியாதிகளை கட்டுப்படுத்தும்!

★ செ. தயாபரன்

## மெய்யனும் பொய்யனும்

ஒரு பெயர்பெற்ற பொய்யன் என்னிடத்தில்வந்து தன்னுடைய வாழ் நாள் முழுமையும்தான் ஓர் உண்மை கூடச் சொன்னதில்லை என்றான் 'நீ ஓர் உண்மை சொல்லி இருக்கிறாய்'' என்று நான் சொல்ல அவன் 'இல்லை இல்லை' என்றான்

"வாணாள் முழுவதும்–உண்மை சொன்னதில்லை யென்று நீ சொல்வது உண்மை அல்லவா?" என்றேன்

அவன் சரியென்று ஒப்புக்கொண்டு என்னைப்பார்த்து 'நீ ஒரு பொய் சொல்ல வேண்டும்' என்றான் நான் உடனே 'நீ ஒரு மெய்யன்' என்றேன்.

(பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து)




மாதம் ஒரு பிறமொழிக்கதை

மங்கோலியச்சிறுகதை
## செங்கியின் எர்டினெ
ஆங்கிலம் வழி தமிழில்: சரந்தன்

கோடையில் ஓர் நாள். பொக்ட் மலைப் பள்ளத் தாக்கிலமைந்திருந்த வெள்ளை வீடுகள், பரந்த தடாகமொன்றில் நீந்தும் அன்னங்களைப் போல் தோன்றின. வெம்மை வாய்ந்த பிற்பகல் எல்லா உயிரினங்களுக்கும் அமைதியை அளிப்பதாயிருந்தது.

உலகையே சூழ்ந்தது போன்ற இவ்வமைதியினிடை, அவ் வீடுகளிலொன்றின் திறந்த கதவினூடாக இனிய யாழிசை மிதந்து வந்தது அதன் மதுரம் காற்றுக்குத் தண்மை சேர்த்தது. அவ்வப்போது அவ்வழி போனவர்கள் இந்த இசையால் ஈர்க்கப்பட்டு வியந்து தயங்கினர்.

இசைக்கேற்ப அவள் தன் செவ்விதழ்களை மெல்லஅசைத்துக் கொண்டிருந்தாள் பெரிய பழுப்பு விழிகள் உணர்ச்சிகளுக்கேற்றவாறு மூடித் திறப்பதும் லயிப்பதுமாய் இருந்தன ஒரு குழந்தையின் விரல்களையொத்த வெண்மையும் மென்மையுங் கொண்ட அவ்விரல்கள், வண்ணத்துப் பூச்சிகள் போல் யாழ் நரம்புகளில் விளையாடின. இயற்கை எவ்வாறு ஒரு மனிதப் பிறவியில் இவ்வளவு அழகையும் கொட்டிக் குவித்தது என்று அவளைப் பார்க்கும் எவராவது வியப்புருதிருக்க முடியாது.

இந்த வேளையில் அயலிலுள்ள வீடொன்றிலிருந்து அசிங்கமான மனிதனொருவன் வெளிவந்தான் இசை வந்த வீடு நோக்கித் தயங்கி நடந்து அதன் வாசற்படியில் குனிந்து அமர்ந்தான்

ஒடுங்கிய தலையும் படியாத முரட்டு முடியும் உள்ளவன் அவன். நீண்டு தொங்கிய தாடைகளும் சப்பைக் காதுகளும் அசிங்கத்தை அதிகப்படுத்தின. அவனைப் பார்க்கும் எவரும் அழகு விஷயத்தில் ஆர்வமுள்ள எவராவது உள் நுழைந்து வீட்டின் தொங்கலிற் தெரிந்த கட்டிலின் நீலப்பட்டுத் திரையை நீக்கிப் பார்த்திருந்தால், எளிமையான வண்ண ஆடை தரித்த அழகும் வாளிப்பும் வாய்ந்த பெண்ணொருத்தி ஈரிழையாழொன்றை மீட்டிக் கொண்டிருப்பதைக் கண்டிருப்பார்கள். மாசுமறுவற்ற அவள் முகம் ஒளி வீசுவது போலிருந்தது இருளினில் அவ்வொளி இன்னும் பிரகாசமாய்த் தெரிந்திருக்கும்.

இயற்கை எவ்வாறு ஒரு மனிதனை இப்படி வஞ்சித்திருக்க முடியும் என எண்ணுதிருக்க இயலாது.

இசைக்கேற்ப அவன் உடல் அசைந்தது கண்கள் மூடியிருந்தன ஒடுங்கிய மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டிருந்தான்

வாவிகள் உறைந்து போனால் வாத்துக்கள் என்னசெய்யும்?

—அவள் தன் வாத்தியத்தில் இசைத்த அந்த நாட்டார் காதற்பாட்டிசை அவனுள்ளத்தில் தனிமை நரம்பை மீட்டியது

நீலப்பட்டுத்திரை மெல்ல அசைந்தபோது மீட்டியவளின் மென்கரம் ஒளிர்ந்தது அவனை வஞ்சித்த இயற்கை, இந்தத் தெய்வீக அழகையும் அவள் இசையையும்காட்டி அவனுள் தணிக்கவொணு மோகத்தைக் கிளர்த்தி அவனைக் கேலி செய்வதுபோலிருந்தது.

துடிக்கும் அவன் இமைகளினூடு தயங்கி வந்த ஒரு கண்ணீர்த்துளி மெல்லக் கசிந்தது தாடையில் வழிந்தது இசை திடீரென நின்றது யாழ்நரம்பையாரோ அறுத்து விட்டாற்போல. ●

## சருகும் பூவும்

வேப்பஞ்சருகு பொன் நிறமாய் உதிர்ந்து பொலிகிறது கூட்டி அள்ளி வெளியே வீசாமல், வாழைப் பாத்தியில் அல்லது பயன் தரும் மரத்தடியில் இட்டு வைத்தால், வாழை குருக்கன் விழாது வேறு தாவரம் நோயணுகாது பயன் தரும். இந்த அனுபவத்தைக் கண்டு பிறருக்கும் அறிவியுங்கள் ஆராய்ச்சி உங்களுக்கே உரியது

ஏப்பிரல் பதினைந்தளவில் வேம்பு கொத்துக் கொத்தாகப் பூக்கும். வேப்பம் பூ சொரியும் போது, பாய் விரித்துச் சேகரித்து உலர்த்தியும் வைக்கலாம் உடனுபயோகமும் செய்யலாம் உடனுபயோகத்தில் வடகம் சிறந்த தயாரிப்பாகும் இன்னும் அன்றுட ரசம் தயாரிக்கும் போது சிறிதளவு அதிலிட்டுப் படைகலாம். இன்னும் வேப்பந்தளிர் ஓரளவு செந்நிறமாக இருக்கும்போது கொய்து சிறிதளவு எடுத்து அரைத்து உருட்டி வாயிலிட்டு விழுங்கினுல் பல குடல் நோய்கள், இன்னும் காய்ச்சல், தடிமன் முதலியன குணமாகும்.

(மில்க்வைற் செய்தி)

# இலக்கியத்தில் இனியதொடர்

### “மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்”

புலவர் ம.பார்வதிநாதசிவம்

காப்பியத் தலைவி கண்ணகியை அறிமுகம் செய்யும் இளங்கோ அடிகள் கண்ணகி உலக மாதர்கள் தன்னைத் தொழுது ஏத்தும்படி விளங்கிய பெருங் குணங்களைக் காதலிப்பவள் என்னும் பொருள்பட' மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங் குணத்துக் காதலாள்'' என்றுர்

இத் தொடர் மூலம் மாநாய்கன் புதல்வியாகிய பன்னிரண்டு வயதே நிறைந்த கண்ணகி தனது கற்புச் சிறப்பால் தெய்வமாவாள் என்பதை இளங்கோ அடிகள் காப்பிய ஆரம்பத்திலேயே குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார்.

கோவலனை அறிமுகம் செய்யும்போது பண்தேய்த்த மொழியினர் ஆயத்துப் பாராட்டி என்று கூறும் இளங்கோ அடிகள் கண்ணகியையும் மாதரார் பாராட்ட என்றே குறிப்பிட்டிருக்கலாம். பாராட்ட என்று சொல்லாது தொழுதேத்த என்று சொல்லியது கற்பின் சிறப்புக் காரணமாகக் கண்ணகி தெய்வமாவாள். என்பதைப் புலப்படுத்தவே.

கோவலன் கண்ணகி திருமண வைபவத்தில் கோவலனையும், கண்ணகியையும் அறிமுகம் செய்யும் இளங்கோ அடிகள் முதலில் கோவலனையே அறிமுகம் செய்திருக்க வேண்டும். உலகமரபு அதுவே ஆனல் இளங்கோ அடிகள் கண்ணகிக்கே முதன்மை கொடுத்து முதலிற் கண்ணகியையே அறிமுகம் செய்கிறுர்.

கண்ணகி என்றைக்குமே பொருளை விரும்பியதில்லை. உயர்ந்த குணங்களையே விரும்பினுள் என்பதை வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் என்றுர்.

வயங்கிய பெருங்குணம் என்ன என்பதைத் திருவள்ளுவர். ''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாமை என்கிறுர் கற்பினின்று வழுவாமல் தன்னைக் காத்து, தனைக் கொணடவனைப் பேணி இருவரதும் புகழ் காத்துத் தளராத உறுதியுடன இருத்தல் என்கிறுர்.

கண்ணகி தன்னைக் கற்பு நெறியிற் காத்தாள். கள்வன் என்று கோவலனைப் பாண்டியன் கொன்றபோது கள்வன் அல்லன் என்று நிருபித்துக் கோவலனுக்கும் தனக்கும் புகழ் சோத்தாள்.

வயங்கிய பெருங்குணத்தைக்காதலித்தபடியால் தான்—பொன்னைப் பொருளைக் காதலிக்காதபடியால் தான் மாதவியிடம் சென்று மலைபோன்ற செல்வத்தை தொலைத்து வந்த கோவலனைப் பார்த்து முகத்தில் புன்முறுவலோடு சிலம்பு இருக்கிறது எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூற முடிந்தது

வயங்கிய பெருங்குணத்தைக் காதலித்தபடியால் தான் கோவலன் மாதவிபிடம் சென்றபோதும் தன்துயர் பற்றிச் சிந்தியாது 'அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'' என்று இல்லறக் கடமைகளை ஆற்ற முடியாமற் போனதற்கு வருந்தினுள்.

வயங்கிய பெருங்குணத்தைக் காதலித்தபடியால் தான் கவுந்தி அடிகள் கண்ணகியைத் தன் கணவன் பொருட்டுக் துன்பம் அடைந்து தன் துன்பத்தை சிறிதும் உணராத

''கற்புக் கடம் பூண்ட

15-ஆம் பக்கம் பார்க்க

# கைலாசபதி அரங்கில் “ஹாம்லெற்”

நாடக உலகில் ஷேக்ஷ்பியர் வகிக்கும் இடம் மகத்தானது. ஆங்கிலேயர் அல்லாதாரும் அந்த மேதையைப் போற்றுகின்றர்.

முன்பெல்லாம் யாழ்ப்பாணத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் அவ்வப்போது மேடையேறுவதுண்டு. ஆனுல் அண்மைக் காலங்களில் இங்கு அதற்கேற்ற சூழ்நிலை இல்லாது போயிற்று

அண்மையில், அபூர்வமாக ஒரு ஷேக்ஸ்பியர் நாடகம் பார்க்ககிடைத்தது. பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியாம். இந்துக்கல்லூரி GELT நிலையத்தில ஆங்கிலம் பயின்ற மாணவர்களே 'ஹாம்லெற்'ஐ மேடையேற்றியவர்கள்.

'ஹாம்லெற்' ஷேக்ஸ்பியரின் தலைசிறந்த படைப்புக்களில் ஒன்று காதல், வீரம், கடமையுணர்ச்சி, நன்றி,வஞ்சகம், ஏமாற்று முதலிய பல உணர்ச்சிகள் கொப்பளிப்பது. இதே காரணத்தால் நடிக்க, தயாரிக்க சிரமமானது நடிகர்களுடைய அனுபவ எல்லைக்குள் அடப்பட–உணர்ச்சிச் சுழிப்புகளை வெளியிட–அரிதானது.

இந்த சிரம சாத்தியமான காரியத்தை ஒரு சவாலாக ஏற்றவர் நெறிமுதல்வர் நா. தேவபாலசிங்கம் அவர்கள்'ஹாம்லெற்'ஐ அன்றுடப் பேச்சு வழக்கு நடையில்அவர் சுருக்கி எழுதினுர். நடிகர்களைத் தேர்ந்தெடுத்தார். தீவிர பயிற்சி அளித்தார். நடிப்புப் பயிற்சி மட்டுமன்றி, பேச்சுப் பயிற்சியும் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மாணவியர் எல்லோரும் தத்தம் பாகங்களைச் சிறப்பாகச் செய்தாலும், ஹம்லெற் ஆக நடித்த நளாயினி, ஹொறாஷியோவாக நடித்த பிருந்தா, ஒபிலியா பாகம் ஏற்ற நிரஞ்சனு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சிற்றப்பனும தாயும் தன் தந்தையை வஞ்சகமாகக் கொலை செய்துவிட்டனர் என்பதை உணர்ந்தும், அதை வெளிக்காட்டாது, பைத்தியமாக நடிக்க வேண்டிய பொறுப்பு ஹாம்லெற்றுக்கு. ஹாம்லெற் மீது உயிரையே வைத்திருக்கும் ஒபீலியா அவனுடைய போக்குப் புரியாமல் குழம்புகிறுள் அவளுக்குப் பைத்தியமே பிடித்து விடுகிறது தம் பாத்திரத்தை உணர்ந்து அருமையாக நடித்தார் நிரஞ்சனு. இனிமையாகப்பாடவும் செய்தார். லெயாட்டீஸ் வேடமேற்ற மாணவியின் நடிப்பும் மனதில் நிற்கிறது

நாடகத்துள் நாடகம்( The-mouse trap ) ஒன்றும் இடம் பெறுகிறது. அதில் நடித்த சிவானியும் சித்திராவும் தம் வேடங்களில் சோபித்தனர்

ஷேக்ஸ்பியர், நாடகத்தை 'கவிதை நடையில் எழுதினுர் அதை அன்றுட ஆங்கிலத்தில் படைத்ததன்நோக்கமென்ன?' என்று வினவியபோது திரு தேவபாலசிங்கம் சொன்னுர் ''ரசிகர்களிடம் மூலத்தை படிக்கும் ஆவல் ஏற்பட்டிருந்தால் என் முயற்சி வெற்றியளித்ததாகக் கருதுவேன். நாடகப் பிரதியைத் தயாரிப்பதில் மாணவர்களும் பங்குபற்றியமை குறிப்பிட வேண்டியது''

ஒப்பனை, அரங்க அமைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்திய இயக்குநர் ஒளி-ஒலி அமைப்பிலும் பின்னணி இசையிலும் அக்கறை செலுத்தியிருந்தால். நாடகம் இன்னும் சோபித்திருக்கும்.

முயற்சியைப் பாராட்டிய கலைபீடாதிபதி பேராசிரியர் பாலகிருஷ்ணன் ஆங்கிலக் கல்வி பற்றிய தம் கருத்தையும் கூறிவைத்தார்

மொத்தத்தில் மேடையேற்றத்துக்கு ஏற்பாடு செய்த யாழ்பல்கலைக்கழகப் புவியியற் கழகமும் அதன் காப்பாளர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையும் பாராட்டுக்குரியவர்கள்.

சோ. ப

## ரமழான் சிந்தனைகள்

தொகுப்பு: மௌலவி கே.பி.நஸார்தீன்(ரஷாதி)

சுவர்க்கம் நான்கு மனிதர்களை எந்நேரமும் அழைத்துக் கொண்டிருக்கின்றது. முதலாமவர் திருக்குர் ஆனை ஓதுகின்றவர்; இரண்டாமவர் தேவையற்ற வார்த்தைகளைப் பேசாமல் நாவைப் பேணிக் கொள்பவர்; மூன்ருமவர் பசித்தவர்களுக்கு உணவளிப்பவர்; நான்காமவர் ரமழான் மாதம் நோன்பு நோற்கின்றவர். இந் நான்கு பேரையும், சுவர்க்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது ஆனுல் இந்நான்கு வேலைகளையும் செய்வோர் நமமில் மிகக் குறைவானவர்களே உள்ளனர்

ஸஹர் முடிவு 4-21

நோன்பு திறக்கும் நேரம் 6 40

# தமிழைப் பிழையின்றிக் கையாளச் சில வழிகள்

சொக்கன்

க பொ. த (உ/த) வகுப்புக்களில் தமிழ் கற்கும் மாணவருக்கு உதவும் பொருட்டு, எழுத்தாளரும் ஆசிரியருமான 'சொக்கன்' எழுதிய 'இலக்கணத் தெளிவு' என்ற நூலின் 2 ஆம் பதிப்பு அண்மையில் வெளியாகியுள்ளது. அந்த நூலிலே 'வாக்கியவியல்' என்ற பகுதியிலிருந்து இக்கட்டுரையை எடுத்து வெளியிடுகின்றோம். சொக்கனின் அநுபவ உரைகள் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆரம்ப எழுத்தாளருக்கும் உதவும் என்பது எமது நம்பிக்கை.

நாம் பிறர்க்கு எமது கருத்தினைப் புலப்படுத்த வாக்கியங்களைக் கையாள்கின்றோம். உரையாடலின் போது கையாள்வதும் வாக்கியமே. எழுதும் பொழுது கையாள்வதும் வாக்கியமே. ஆனால் இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. உரையாடும் பொழுது எமது உரையாடல், சொற்கூட்டங்களிலே மட்டும் தங்கியிருப்பதில்லை. முகபாவம் சைகை, உணர்வின் வெளிப்பாடான ஒலி என்பனவும் உரையாடலுக்குத் துணைக் கருவிகளாகின்றன இவற்றின் உதவியால் முழுவாக்கியங்களைக் கூறாமலே சில சொற்களாலும் சொற்றொடர்களாலும் எமது கருத்துக்களை, உணர்வுகளை நாம் புலப்படுத்தலாம்.

ஆனால் எழுதும்பொழுதோ மேற்குறித்த துணைக்கருவிகள் இருப்பதில்லை. எனவே நாம் எம் கருத்துக்களை முழுமையான வாக்கியங்களிலே அமைக்க வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டாகின்றது. கேட்போர், வாசகராய் மாறிவிடும் நிலையிலே நாம் எழுதுவன யாவும் அவர்களுக்கு முழுமையான விளக்கத்தினைத் தரல் வேண்டும். இல்லையேல எமது எழுத்தால் எவ்வித பயனும் இல்லை என்பதே பொருள்.

பேச்சு வழக்கினையும் எழுத்து வழக்கினையும் உறுப்புக்களாய்க் கொண்டது மொழியியல். எழுத்து வழக்கிற்கே முதன்மை வழங்குவது இலக்கணம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாய் எழுதலில் வடிக்கப்பட்ட கருத்துக்களையும் உணர்வுகளையும் அவ்வக் காலத்தில் வாழ்ந்தோரும் இக்காலத்தில் வாழ்வோரும் விளங்கிக்கொள்ள எழுத்தே துணை புரிவதால் காலவிடைபட்ட பொருள்கள் யாவற்றையும் தெரிவதற்கு அந்த எழுத்து மட்டுமன்றி அதன் ஒழுங்கினை விளக்கி நிற்கும் இலக்கணமும் உதவுகின்றதெனலாம். உதாரணமாகச் "சாத்தா கேண்மியா" என்ற இச்சிறு வாக்கியத்தை இன்று நாம விளக்கிக் கொள்வதற்கு 'மியா?' என்பது அசைச்சொல் என்று எடுத்துக்காட்டும் இலக்கணமே உதவுகின்றது இலக்கணம் இல்லையேல், நாம் ஊகித்து விளங்கிக் கொள்வன பலவும பிழையாய் அமைந்து விடல் நேரலாம். ஆக, வளர்ந்து செல்லும் ஒரு மொழியினது தொடர்ச்சியான கருத்துக்களைப் பிழையின்றித் தெரிந்து கொள்ள இலக்கணம் இன்றியமையாததாகின்றது. இதனாலேதான் எம்முன்னோர் இலக்கணக் கல்வியைக் கட்டாயமாக்கினர் எனவே இன்றைய தலைமுறையினர் தமிழிலுள்ள பழைமையான நூல்களையும் அவை கூறும் கருத்துக்களையும் பிழையின்றி விளங்கிக் கொள்ள ஓரளவாவது இலக்கணக் கல்வி இன்றியமையாததே.

## உரைநடையும் கவிதையும்

முற்காலத்திலே தமிழிலக்கணக் கல்வி யாவும் பெரும்பாலும் கவிதையமைப்பையும் பொருளையும் அறிவதற்கே பயன்பட்டன தொல்காப்பியம், உரைநடை பற்றிக் குறித்துள்ளபோதும், சிலப்பதிகாரம் என்ற காப்பியத்திலே ஆங்காங்கு உரைநடை கையாளப்பட்டுள்ள போதும் முதன் முதல் உரைநடையிலேயே அமைந்த நூலாய் எமக்கு கிடைப்பது நக்கீரர் என்ற புலவர் இறையனார் அகப்பொருளுக்கு எழுதிய உரையேயாகும் ஐரோப்பியரின் ஆட்சி தமிழ் கூறும் நல்லுலகிலே ஏற்படும் வரை தமிழிலே கையாளப்பட்ட உரை நடையாவும் கவிதை நூல்களுக்கும் இலக்கண நூல்களுக்கும் சமய தத்துவ நூல்களுக்கும் எழுதப்பட்ட உரைகளுக்கே பயன்பட்டு வந்தன. இலக்கிய நுண்ணுணர்வுகளைப் புலப்படுத்த உரைநடை ஏற்றதன்று என்ற கருத்தே கற்றறிந்தோரிடையே நிலவியது 'வல்லோர் அணிபெறச் செய்யும்' செய்யுள்களுக்கே இலக்கணம் உரியது என்ற கருத்தே தொடர்ந்து நிலவியது என்பது கொள்ளக்கிடக்கிறது.

இக்காலம் சனநாயககாலம்; கவிதை கூட உரைடைப்பாங்கிலே அமைதல் வேண்டும் என்ற முழக்கம் எழுந்துள்ள காலம். இலக்கியம் என்பது உரைநடையில் அமைந்தநூல்களையே சுட்டுமளவிற்கு உரைநடை செல்வாக்கடைந்து வருகின்றது இந்நிலையிலே பழந்தமிழ்க் கவிதையிலக்கியங்களை விளங்கிக் கொள்வதற்கு மட்டுமன்றி. இலக்கியமென்றாலே உரைநடையென்ற எண்ண வளர்ச்சியை உள்வாங்கி இன்றைய வசன நடைக்குப் பொருத்தமானதும் வரையறை செய்ய வல்லதுமான இலக்கணத்தைக் கற்பது இன்றியமையாது தேவைப்படுகின்றது ஆக பழைமையையும் புதுமையையும் இணைக்க வல்லதும் பழைமையிலே வேண்டப்படுவனவற்றை ஏற்றுப் புதியனவற்றிற்கும் வழிகாட்ட வல்லதுமான ஓர் இலக்கண நூல் செய்வார் தமிழ்மொழிக்கு நல்லாக்கம் அளிக்க வல்லவர் என்பதற்கு ஐயமில்லை.

'வாக்கியவியல்' என்னும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வியலிலே வாக்கிய ஆக்கத்திலே நாம் கவனிக்க வேண்டிய பல அம்சங்களும் விளக்கப்படும்.

## எழுவாய், பயனிலை செயப்படுபொருள்

யானை புலியைக்கொன்றது.

இவ்வாக்கியத்திலே மூன்று சொற்கள் உள்ளன அவை ஓர் ஒழுங்கில் அமைந்திருக்கின்றன. முதற்சொல் செயலைச் செய்த கருத்தாவை குறிப்பது. அஃது எழுவாய். அதன் செயலைப்பட்ட (அனுபவித்த) பொருள் புலி. அது செயப்படுபொருள் கருத்தா செய்தவினை—செயல்— இறுதியிலே உள்ளது அது பயனிலை (கொன்றது) இவ்வாறு எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற ஒழுங்கில் அமைவதே தமிழ் முறைமை.

1. கொன்றது யானை புலியை
2. புலியைக் கொன்றது யானை
3. கொன்றது புலியையானை
4. புலியை யானை கொன்றது
5. யானை கொன்றதுபுலியை

என்று இச்சொற்களை மாற்றியமைப்பதனாலே பொருள் வேறுபடவில்லை என்பது உண்மையே ஆனால், தமிழுக்குள்ள ஒழுங்குமுறை மாறுவதாலே கருத்தமைதியும் வாக்கியத்திற்கு வாக்கியம் வேறுபடுகின்றது

ஒரு செயலுக்கு முதன்மையாக வேண்டப்படுவது கருத்தா. இங்குத் தரப்பட்ட வாக்கியத்திலே (1) கொல்லலாகிய செயலே கருத்தாவிலும் முதன்மை பெறக் காண்கின்றோம்.

இரண்டாவது வாக்கியத்திலே கருத்தாவிலும் செய்வதைப் பட்ட பொருளுக்கு (செயப்படுபொருளுக்கு) முதன்மை வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாவது வாக்கியத்திலே செயல், செய்ததைப் பட்ட பொருள், கருத்தா என்று ஒழுங்குமுறை மாறுகின்றது நான்காவது வாக்கியத்திலே செய்வதைப் பட்ட பொருள் கருத்தா, செயல் என்ற ஒழுங்கமைப்பு வந்துள்ளது

ஐந்தாவது வாக்கியத்திலே கருத்தா, செயல் செய்வதைப் பட்ட பொருள் என்ற ஒழுங்கு முறை உள்ளது.

சில சந்தர்ப்பங்களிலே இவ்வாறு முதன்மைகள் மாறும் நிலைகளைக் காட்டுதற்கான நுட்ப வேறுபாடுகள் வேண்டப்படலாம். கவிதையிலே ஓசைக்கிசைய இவ்வாறான ஒழுங்குகள் அமையலாம் ஆனால் உரை நடையிலே எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்ற ஒழுங்கே உகந்ததாகும். நீண்ட வாக்கியங்களிலே இம்முறை பொருளின் தெளிவுக்கு மிகவும் இன்றியமையாததாகும். மொழியைக் கையாள்வதற்கு இம்முறை எளிதானது என்பதையும் நாம் மறுத்தலியலாது

## தோன்றா எழுவாய்

இராமன் மிகவும் நல்லவன்

மேலே தரப்பட்டது ஒரு வாக்கியமாகும். இவ்வாக்கியத்திலே செயப்படு பொருள் இல்லை எனினும் இவ்வாக்கியம் முழுமையான பொருள் தந்து நிற்கின்றது. எனவே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லா வாக்கியங்களிலும் முழுமையான கருத்தைத் தருவதற்குச் செயப்படுபொருள் இன்றியமையாததன்று என்பது புலனாகின்றது வாக்கியப் பொருட் புலப்பாட்டுக்கு எழுவாயும் பயனிலையுமே இன்றியமையாதவை, எந்த வாக்கியமும் எழுவாய் பயனிலை என்ற உறுப்புக்களையும் பெறுதல் கட்டாயமாகும் இருப்பினும் எழுவாய் வெளிப்படத் தோன்றாமல் நிற்குமிடங்களும் உள்ளன

உ. : 1 ஒருநாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.

2. பட்ட காலிலே படும்.

3 'வாக்கியப் பொருளமைதிக்கு எழுவாயும் பயனிலையும் வேண்டும்' என்பர்.

இம்மூன்று வாக்கியங்களிலும் முறையே 'எவரும்', 'கல்', 'இலக்கண ஆசிரியர். என்பன தோன்றா எழுவாய்களாய் மறைந்து நின்றன இவை இவற்றையே எழுவாய்களாகப் பெறும் என்ற முன்னறிவு, உணர்வு எமக்கிருப்பதால் எழுவாய் மறைந்த நிலையிலும் இவை முழுமையான கருத்தையே தருகின்றன என்று நாம் கொள்கின்றோம்.

## தோன்றாப் பயனிலை

நாம் முன்பு பெயர், வினை பற்றிக் கற்ற பொழுது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்குப் பெயரிலும் வினையே இன்றியமையாதது எனக் கண்டோம். வாக்கியங்களிலே பெரும்பாலும் வினைமுற்றுக்களே பயனிலைகளாக வருகின்றன. (சிறுபான்மை பெயரும் வினாவும் பயனிலைகளாக வருதலும் உண்டு என்பது முன்னரே காட்டப்பட்டது) ஒரு வாக்கியத்தின் கருத்து முற்றி நிற்பது (முடிவடைந்து நிற்பது) பயனிலையிலேயே இராமன, கந்தன் முதலாகப் பல பெயர்களை அடுக்கிக் கொண்டு சென்றாலும் பயனிலை இல்லாவிடத்து அப்பெயர்கள் வெறும் அறிகுறிகளாய் நிற்குமேயன்றி முழுமையான பொருள் தரமாட்டா. ஆகவே, வாக்கியங்கள் எப்பொழுதும் பயனிலைகளை அவாவி நிற்கின்றன.

மிக அருமையான சந்தர்ப்பங்களிலே பயனிலைகள் தொக்கு நிற்பனவாயும் வாக்கியங்கள் அமைவதுண்டு.

உ-ம் 1. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.

2 நலத்துக்கும் தீங்குக்கும் அவனே.

3. இவ்வாறு கூறுவதாலாம் பயன்?

இவற்றுள் முதலாம் வாக்கியத்திற்குப் பெய்யும் என்பதும் இரண்டாம் வாக்கியத்திற்குக் காரணன் என்பதும், மூன்றும் வாக்கியத்திற்கு யாது என்பதும் பயனிலைகளாக மறைந்து நின்றன.

இயன்ற அளவு பயனிலையமைய வாக்கியங்கள் அமைப்பதே சிறப்பு

தனித்தனிச் சொற்கள் சொற்றொடர்கள் கூடச் சில வேளைகளிலே வாக்கியங்கள் போலமுழுக் கருத்துத் தந்து நிற்கும்.

உ-ம்: இரவு ... நடுயாமம்... கனத்த இருள் நிசப்தம்,...... பயங்கரம்......

இவை முறையே, அஃது இரவாகும், அப்பொழுது நடுயாமப் பொழுதாயிருந்தது. எங்கும் கனத்த இருள் மண்டிக் கிடந்தது. நிசப்தம் நிலவியது அது பயங்கரமான ஒரு சூழ்நிலை என வர வேண்டிய வாக்கியங்களே.

கதைகள், வருணனைக் கட்டுரைகள் முதலானவற்றிலே வாக்கியங்களின் குறியீடுகளாக இத்தகைய சொற்களும் சொற்றொடர்களும் அமைவதைத் தவிர்த்தல் இயலாது ஏனெனில் எழுதுபவன் தான் உணர்த்தப் புகும உணர்வுகளை உறைப்பாகப் படிப்பவனின் மனத்திலே ஏற்படுத்துவதற்கு இஃது ஒரு சிறந்த உத்தியாகும். எனினும் பொதுவாக அறிவியல் சார்ந்தனவும் விளக்கம் வேண்டப்படுவனவுமான இடங்களில் இத்தகைய உணர்வுக் கலவை வாக்கியக் குறியீடுகளைத் தவிர்த்தல் விரும்பத் தக்கதே.

## சொற்கள் தொடர்வதும் புணர்ச்சித் தேவையும்

தமிழ்மொழியிலே புணர்ச்சி முதன்மையான இடம் பெறுகின்றது பகுபதம் பகாப்பதம்,சொற்றொடர் ஆகிய மூன்றின் கண்ணும் புணர்ச்சிகள் நிகழ்கின்றன.

1. பகாப்பதமானது, வேற்றுமையுருபுகள், பிற இடைச் சொற்கள் சேரும் பொழுது புணர்ச்சிக்குள்ளாகின்றது.

உ-ம்; அவை + கு = அவற்றிற்கு, அவற்றுக்கு
பழம + ஐ = பழத்தை
அவன் + உம் = அவனும்

இவை நெடுங்காலமாகப் பயின்று வருவதால் இலக்கணம் அறியாதாரும் பெரும்பாலும் இப்பதங்கள் புணர்ச்சியின் விளைவுகள் என்பதை உணராமலே கையாள்கின்றனர் எவரும் 'அவைகு' என்றோ, 'பழமை' என்றோ, 'அவன் உம்' என்றோ எழுதுவதில்லை. ஆனால், புணர்கின்ற உறுப்பு எது எனத் தெரியாமையாலே அவற்றிற்கு என்பதை அவற்றிக்கு என்றுங்கு எழுதக் காண்கின்றோம்.

2. பகுபதத்திலே பகுபத உறுப்புக்களாகிய பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி ஆகியன ஒன்று சேர்கையிலே புணர்ச்சி விகாரங்கள் நிகழலாம்.

உ-ம்; வந்தான்— வா+த்+த்+ஆன்,
படித்தான்— படி+த்+த்+ஆன்.

எவரும் 'வதான்' எனவோ 'படிதான்' எனவோ எழுதுவதில்லை இவையும் அனுபவங்காரணமாகப் பிழைக்கு அப்பாற் பட்டவையாகின்றன.

3. இருசொற்கள் ஒன்றுடன் ஒன்று சேரும்பொழுதுதான் புணர்ச்சியிலே பிழை ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

முள்+தாள் = முட்டாள்
நாள்+தோறும் நாடோறும்
நொ+ஞெள்ள = நொஞ்ஞெள்ளா

என நிகழும் புணர்ச்சிகள் உண்மையிலே மிகக் கடினமானவைதாம். ஓசை நயங் கூட இவற்றில் இல்லை இக்காலததில் இவை வழக்கிழந்து போயின என்பதே, இவற்றின கடினத்தன்மைக்கும் பயன்பாட்டின்மைக்கும் சிறந்த சான்று.

ஆனால் புணர்ச்சிகள் இன்றியமையாத தேவைகளாய் அமையும் இடங்களும் உள்ளன அவற்றை சரியாக கவனியாது பிரித்தெழுதுவதாலே பிழையான கருததுக்களைத் தரக்கூடிய ஆபத்தும் நேர்ந்து விடுகிறது

உ-ம்: மேற்கதிசை
மேற்குத்திசை

இவற்றில் முதற்சொற்றொடர் மேற்கும் திசையும் என்ற பொருளையும் இரண்டாவது சொற்றொடர் மேற்கின் கண் உள்ள திசை எனவும் இரு வேறு பொருள் தருகின்றன.

[14-ம் பக்கம் பார்க்க]




## சமூக நவீனம்

## அத்தியாயம் பன்னிரண்டு

கே.எஸ்.ஆனந்தன்

அழகிய கன்னிப் பெண்ணின் பொன்வண்ண மேனியில் விம்மிப் புடைத்தோடும் பச்சை நரம்புபோல வெண் மணற்பரப்பிற்கிடையே சலசலத்து ஓடும் சிற்றருவியில் தன்னந்தனியே குளித்துக் கொண்டிருக்கிறாள் ஒருபெண் வானத்திலிருந்து பூவுலக நீர் நிலைக்கு வந்து சலக்கிரீடை செய்யும் தேவகன்னிகை போன்று காட்சியளித்தாள் அவள். அவளுடைய காவிய நயனங்கள் சலசலத்து ஓடும் சிற்றருவியையும, அதன் கரையை ஒட்டி அடர்த்தியாய் விளங்கும் மரஞ்செடிகளையும் அந்த எழில் சிந்தும் மனோரம்மியமான சூழ்நிலையையும் விழுங்கும் தன்மையோடு சுழன்றாடும் பம்பரம் போல மிரண்டு பார்த்தன சிற்றாற்று விளிம்பை ஒட்டி நின்ற மருத மரத்தின் வளைந்த கொம்பரில் சாய்ந்து கொண்டு அவளைப் பார்த்து நிற்கிறான் ரகுவரன்.

பூமணம் கமழும் அந்த சீதளத் தென்றலில் தன்னையே மறந்தவனாய் அவளையே பார்த்துக்கொண்டு நின்ற ரகு அவள் தன்னை நோக்கி அசைந்து வருவதைப் பார்த்ததும் எழுந்தோடி விட நினைத்து திரும்புகின்றான் மரக் கொம்பில் ஊன்றியிருந்த கை வழுக்கியதும் தடால் என்று நீரில் விழுந்து விடுகிறான் விழுந்ததும் திடுக்கிட்டு எழுந்தான். அத்துடன் அவன் தூக்கம் கலைந்து தான் கண்டது கனவு என்று உணர்கின்றான் அவனையுமறியாமல் சிரித்துக் கொள்கிறான்.

தொலைதூரத்தில் சேவல் கூவும் சத்தம். அதைத் தொடர்ந்து சேவல்கள் கோரஸ் பாடின ஐந்து நிமிடம் வரையில் படுக்கையில் புரண்டவன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி நான்கு காட்டியது காட்டுப்பனியின் குளிர் போர்வை, பனியன், யாவையும் தாண்டி ஊடுருவிச் சென்று நடுங்க வைத்தது. ஒரு நாளுமில்லாதவாறு இப்படி ஒரு கனவு ஏன் வந்தது. அவன் நினைத்துக்கூடப் பார்த்தறியாத ஒரு காட்சி பைத்தியம் போலச் சிரித்துக் கொண்டே புரண்டுபடுத்தான்.

மாலை மூன்று மணிமளவில் வவுனிக்குளம் பாடசாலைக்கு வந்திருந்தான் ரகுவரன் அவனுடன் சொக்கலிங்கமும் வந்திருந்தான். அதிபர் அவனை வரவேற்று பாடசாலை நிலம் சம்பந்தமான விடயங்களைப் பற்றிக் கூறியதுடன் எல்லாவற்றையும் காண்பித்தார். அதன்பின்பு ஆசிரியர்கள் தங்கும் அறையில் சிறு தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. பெற்றார் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றி அங்குள்ள குறைபாடுகள் பற்றி கூறி வைத்தனர் எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான் ரகு. ஈற்றில் அவன் கூறினான்.

''உங்களுடைய உபசரணைக்கும், வரவேற்பிற்கும் முகலில் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் நீங்கள் உங்களுடைய குறைகளை, தேவைகளைப்பற்றி கூறியவை யாவும் நியாயமானதே. உங்கள் எதிர்பார்ப்புக்களில் சில வேறு இலாகாக்களின் செயற்பாடுகளிலேயே பெரும்பாலும் தங்கியிருக்கின்றன. அரசியல் வதிகள் அள்ளிவீசும் உறுதி மொழிகளைப் போன்று நான் கூறிச் செல்ல விரும்பவில்லை என்னுடைய அதிகார எல்லைக்கு உடபட்ட விடயங்களை நிட்சயமாகவும். உடனடியாகவும் செயற்படுத்தி தர என்னால் உறுதியளிக்க முடியும் ஏனையவை பற்றி சம்பந்தப்பட்ட இலாகாக்களின் கவனத்துக்கு எடுத்துரைத்து என்னாலியன்ற வரை செயல்படுத்த முயற்சி எடுத்துக் கொள்கின்றேன். ஏ. ஜீ ஏ யிடம் சொல்லியாயிற்று நடக்கும்தானே என நீங்கள் மௌனமாயிருந்து விட்டால் விடயங்கள்கோவைகளிலே தூங்கிவிடும் உங்கள் இடைவிடாத முயற்சியும் உழைப்புமே பொது விடயங்களில் அதிகாரிகளை சுறுசுறுப்படையச் செய்யும்.

தெளிவாகவும்–அதே வேளையில் நியாயமானதாகவும் அவன் கூறிய விடயங்கள் ஒவ்வொருவரையும் சிந்திக்க வைத்தது. சில அதிகாரிகள் மககளின் கோரிக்கையை ஏற்பது போல ஏற்று உபசாரத்துக்காக சில ஆறுதல் வார்த்தைகளைக் கூறிவிட்டு சென்று விடுவார்கள். அத்துடன் அந்த விடயம் முற்றுப் பெற்று விட்டதாக எலலோரும் திருப்தியடைந்து கொள்வார்கள். ஆனால் அவை யாவும் அவன் கூறியது போல அலுவலக கோவைகளில் எழுத்து வடிவில் தூங்கிக் கொண்டேயிருக்கும். செயல் வடிவம் பெறுவதற்கு மீண்டும் பல காலம் செல்லலாம். என்பதை ஒவ்வொருவரும் புரிந்துணருமளவுக்குஉண்மைநிலையை தெளிவாகக் கூறியிருக்கும் அவனுடைய நேர்மையை எண்ணி வியந்தனர்.

அவர்களிடம் விடைபெற்று புறப்படவிருந்த வேளையில் தான் சிந்துவைப் பார்த்தான். அவளைப் பார்த்ததும் அருண்மொழி பற்றி சந்திரிகா கூறியவை ஞாபகத்துக்கு வந்தது. அவளும் இந்த ஊரைச் சேர்ந்தவள்தானே அதுபற்றி தான் மறந்துவிட்டதை எண்ணிய பொழுது சிந்துவே அவனை நோக்கி வந்தாள்.

''ஹலோ, நீங்கள் இங்கேயா?''என்றான்.

''யெஸ் சார்''

"புதிய இடம், புதிய மனிதர்கள் என்று நான் நினைத்ததற்கு மாறாக தெரிந்தவர்கள் பெரும்பாலும் இருப்பதால் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். சிறி இன்னும் திரும்பவில்லைப் போலிருக்கு''

''யெஸ் சார். மிஸ் அருண்மொழி கூட இங்கேதான். இன்று லீவு''

'வரும்போதே சந்திரிகா கூறினாள். நான்தான்மறந்திட்டேன் சந்தித்தால் விசாரித்ததாக கூறுங்கள். நீங்கள் எங்கே தங்கியிருக்கின்றீர்கள்?''

'அருண்மொழி வீட்டில்'

'நல்லது சந்தர்ப்பம் கிடைக்கும் போது உங்கள் வீட்டிற்கு வருகிறேன்.'

'என் வீடு நல்லூரிலல்லவா?' என்று சிரித்துக் கொண்டே கூறினாள்.

''அதனால் என்ன. அங்கே வரும்போது வருகிறேன்''

'ஷ்சுயர்'

'ஷ்சுயர், ஏன் வரமாட்டேன் என்று நினைக்கிறீர்களா?''

''உங்களைப்பற்றி பூரணமாக தெரிந்து கொண்டவளாகையால் தான்... '' என்று கூறி அவள் சிரித்தபோது அவனும் சிரித்தான்

இருவரும் கதைத்துக் கொண்டே வாசல்வரைவந்து விட்டனர்

மிஸ் சிந்துஎல்லோரும்ஒரே மாதிரி இருந்துவிடமுடியுமா? எனக்கு என்னதான் நிறைவு இருந்தபோதும், நான் மற்றவர்களுக்கு பாரமாக இருககிறேன். என்ற நினைவு எனனை அழுத்திக் கொண்டிருந்தது. என்னை ஆளாக்கியவர் தன் பிள்ளையாக என்னை வளர்த்த போதும் பாசம்காட்டத்தான் என்னால் முடிந்ததே தவிர நான் அவர்களுக்கு பாரமாய் இருக்கிறேன் என்ற நினைப்பை தவிர்க்கமுடியவில்லை. ஆகவே புறச்சூழலை நினைப்பதை விட்டு ஓர் இலககு நோக்கிஓடினேன். அந்த இடதததை அடைந்த போது அந்தப் பெரியவர் எனக்கு மட்டுமே அளித்த நலனை பலரது நலனுக்கும் பயன்படுத்தும்போது எனது நன்றிக்கடனைச் செலுத்தும பாக்கியம் பெறுகின்றேன்–'லேசா' மனதில் ஒரு நிறைவு. அககம்-பககம் சூழலைப்பார்கக முடிகின்றது. நண்பர்களை காணத் துடிக்கின்றேன் எல்லோருடனும் பழக வேண்டும்–பேச வேண்டும் என்று எனக்குள்ஓர் ஆர்வம் நான் ஒதுங்கிய வேளையில் என்னைத் துரத்தியவர்கள் இன்று என்னைக்கண்டு ஒதுங்குகிறார்கள் உதாரணமாக சிறியைப்பாருங்கள். உங்களையே பாருங்களேன் நான் உங்களைப் பார்த்த பின்புதானே என்னை நெருங்கினீர்கள்–இல்லையெனில் பேசாமல் போயிருப்பீங்கள் இல்லையா?''

''மிஸ்டர்ரகு-அப்படிநீங்கள் நினைக்ககூடாது. உங்கள் பதவிஉங்களை மற்றவர்கள் நெங்கமுடியாது இருப்பதற்கு காரணமே தவிர வேறு ஒன்றுமில்லை நானே யோசித்துக் கொண்டுதானிருநதேன். நீங்கள் சிரித்த பின்பே வந்தேன் இனி அப்படி நடந்துக்க மாட்டேன் ''

"வீக் என்ட்டுக்கு வீட்டுக்குப் போய்வருவீங்களா? இங்கேயிருந்தால் ஒருநாளைக்கு வீட்டுக்கு வாருங்களேன்.''

''உங்கள் அழைப்புக்கு நன்றி நிட்சயமாக வருவேன்''

''வரட்டுமா? என்று கூறி விடைபெற்றுச் சென்றான்.

அவன் சென்றுவிட்டாலும் அவன் உருவம் அவள் கண்ணுக்குள் சிறைப்பட்டு தங்கிவிட்டது அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் ஒலிப்பதிவு நாடாவில் பதிவாகியது போல அவள் உள்ளத்தில் பதிவாகி விட்டிருந்தது அவன் கூடவே தான் கதைத்துக் கொண்டு வருவது போன்ற ஓர் நுண்ணுணர்வுடன் நடந்து கொண்டிருந்தாள் சிந்து.

தன்னுடைய சொந்த விடயங்களைக் கூட ஒளிவு மறைவு இன்றி கூறும் தெளிந்த மனப்பான்மையும். தன்னை மற்றவர்கள் மதிக்க வேண்டும்' என்ற நினைவின்றி தோழமையுணர்வுடன் பழக வேண்டும் என்று எதிர்பார்க்கும் மனப்பாங்கினையும் துல்லியமாக கூறிய அவனுடைய உயர்ந்த எண்ணங்களையும், எண்ணிப் பார்த்தபோது 'ரகு இஸ் ஏ யேலீ ஜெண்டில்மென்' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

அவனுடன் தான் கதைத்துக் கொண்டு வந்ததை பலரும் வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றதை எண்ணிய பொழுது அவளையறியாமலே அவள் மனம் கம்பனைச் சிறகடித்துப் பறந்தது. அந்த இனிய நினைவுகளுடனே வீடு வந்து சேர்ந்தாள் சிந்து.

அவள் வருவதை பார்த்துக் கொண்டு நின்ற அருண்மொழி 'என்ன ரீச்சர் உங்கபாட்டுக்குச் சிரித்துக் கொண்டே வாறீங்கள் நடந்துகொண்டே கனவு காண்கிறீர்களா?' கிண்டலாகச் சிரித்தவாறே கேட்டாள்.

அன்று இரவு படுக்கைக்கு போகும் வரை ரகுவரன் பற்றியே தோழிகள் இருவருக்கிடையிலும் உரையாடல் நடைபெற்றனவாயினும் சிந்து கூறிய சில விடயங்கள் அருண்மொழியால் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருந்த போதும் அன்றைக்கென தான் லீவு எடுத்துக் கொண்டதை நினைத்து உள்ளூர வருந்தினாளாயினும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை அவனைப்பற்றிய இனிய நினைவுகளோடும் கனவுகளோடும் இருவரும் உறக்கத்துக்குச் சென்றனர்

நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி நகர்ந்து கொண்டேயிருந்தன. அதற்கிடையில் எத்தனையோ சம்பவங்கள் நடந்துவிட்டிருந்தன.

ரகுவின் விடுதிக்கு தோழிகள் இருவரும் பல தடவை சென்று வந்திருந்தனர் எவ்விதபாகுபாடுமின்றி இருவரோடும் வெகு இயல்பாகவே பழகினான் ஒரு முறை சிறீதரனுடன் யாழ்ப்பாணம் சென்ற போது சிந்துவின் வீட்டிற்கும் சென்றிருந்தான் இருவருக்கும் அன்று விருந்து வைத்து உபசரித்தாள் சிந்து. அன்று தொடக்கம் சிந்துவைப் பார்க்கும் வேளைகளிலெல்லாம் உங்க வீட்டுச் சாப்பாட்டை என்றைக்கும் மறக்க முடியாது சிந்து''என்று அவன் கூறும் போது சிந்துவுக்கு உள்ளம் குளிரும்.

அருண்மொழியோடு ஒப்பிடும் பொழுது சிந்துவும் அவளுக்கு நிகரான அழகுள்ளவளே தலைமுடியை வைத்தே இருவரையும் பின்னுக்கு நின்று பார்த்தவர்கள் சுலபத்தில் அடையாளம் கண்டு கொள்வர். ஆனால் குண இயல்பில் இருவருக்கிடையிலும் நிறைந்த வேறுபாடுண்டு. அருண்மொழி எதிலும் தானுண்டு தன் கடமையுண்டு என்று நினைத்து எதிலும் ஒதுங்கி நிற்கும் சுபாவம். சிந்து இதற்கு நேர்மாறு பொது விடயங்களில் ஈடுபாடுடையவள். சிறுமை கண்டு பொங்கும் மனமுடையவள். மற்றவர் துயர்துடைக்க தன்னாலான உதவிகளை செய்ய நிற்பவள். யாரோடும் இனிய சுபாவத்துடன் பழக, பேசத் தெரிந்தவள் தன்னுடைய நடத்தையால் மற்றவர்கள் மனதில் வெகுஎளிதாக இடம் பிடித்துவிடும் இயல்பினள்அவளுடைய ஒவ்வொரு செயலாலும் ரகுவின் மனதிலும் அவள் ஓர் இடத்தைப் பெற்றிருந்தாள்.

அவன் பதவி ஏற்று எட்டு மாதங்களுக்கு மேலாகி விட்டிருந்தது குறுகிய காலத்துக்குள் நிறைந்த அனுபவங்களைப் பெற்றிருந்தான் ரகுவரன். அவனுடைய குணாதிசயங்களை அறிந்து கொண்ட வேறு இலாகாவைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் அவனை நாடி வந்தனர். அவனுடைய அனுசரணையுடன் புதிய பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டனர்.

நீர்ப்பாசனப்பகுதி. விவசாயப்பகுதி மின்சாரப்பகுதி வேலைகள் பல அதிகாரிகள் மட்டத்திலேற்பட்டிருந்த ஒத்துழைப்பின்மையால் தேங்கிக் கிடந்தன. ரகுவரனின் ஒத்துழைப்பும், உற்சாகமும் அவர்களையும் சுறுசுறுப்படையச் செய்திருந்தது.இதற்கெல்லாம் அலுவலக மட்டத்திலும், வெளியிலும் நல்ல ஒத்துழைப்பும், ஆதரவும் ரகுவரனுக்கு கிடைத்து வந்தமைதான் காரணம்.

இளைஞர்களின் உந்துசக்தியாக கந்தையா மாஸ்டர் செயல்பட்டார். உதவி அரச அதிபர் அலுவலகத்துக்கு செல்லப்பயந்திருந்தவர்களெல்லாம் நாளாந்தம் உதவி கேட்டும், முறைப்பாடுகளோடும் வரத் தலைப்பட்டனர். இவையாவும் தலைமைக் குமாஸ்தாவுக்கு எரிச்சலாகவிருந்த போதும் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் சேர்ந்து செயற்பட்டாராயினும் அவ்விடத்திய நிலைமைகளை அடிக்கடி குணரட்ணத்திற்கு எழுதி வந்தார்.

இளைஞன்,புதிய பதவிக்கு வந்ததும் குதித்து விளையாடுவது சகசம். நாளடைவில் எல்லாம் சரிக்கட்டலாம் என்று குணரட்ணம் அதுபற்றி அதிக தீவிரம் காட்டாதிருந்தார்.

ஆனால் திடீரென ஒரு நாள் அவரால் மடக்கிவைக்கப்பட்டிருந்த பாடசாலைக்குச் சொந்தமான நிலம் பொலிஸ் பாதுகாப்புடன் கம்பிவேலிகள் அகற்றப்பட்டுப் பாடசாலைக் காணியுடன் இணைக்கப்பட்டது. வேறுயாரும் அந்தக் காணிக்குள் அத்து மீறிப் பிரவேசித்தால் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது

குணரட்ணம் செய்தி கேட்டதும் இடிந்துபோய் உட்கார்ந்து விட்டார். இராசலிங்கத்தின் கடிதத்தில் இதற்கெல்லாம் கந்தையா மாஸ்டரே சூத்திரதாரியாக காட்டப்பட்டிருந்தார். குணரட்ணத்தின் ஆத்திரமெல்லாம் கந்தையா மாஸ்டரை எப்படியும் ஒழித்துக் கட்ட வேண்டும் என்றளவுக்கு வளர்ந்து கொண்டிருந்தது.

முதலில் மரக்கடத்தலுக்கு எதிராகச் செயல்பட்டு தன் ஆதரவாளர்களையெல்லாம் இடம் மாற்றியது. அடுத்து பாடசாலை நிலம். இனியும் பேசாமலிருந்தால் தான் சட்டத்திற்குப் புறம்பாக பிடித்து வைத்துள்ள நிலங்களனைத்தையும் சுவீகரம் செய்து விடுவாரோ என நினைத்தபோது ஆவேசம் உச்சக் கட்டத்தினை அடைந்திருந்தது.

[14-ம் பக்கம் பார்க்க]

# தற்காலக் கலைக்கொள்கைகள்

மூன்றும் வாரம்

கனாநிதி சோ. கிருஷ்ணராசா

இருபதாம் நூற்றாண்டின் கலைவரலாற்றில் கலைஞனுக்கும் சுவைஞனுக்குமிடையில் ஆபத்து விளைவிக்கும் பிராணியாக விமரிசகனும், கலைவரலாற்றாசிரியனும் உருவாகி வந்துள்ளனர்.

எமது பண்பாட்டை நிர்ணயிப்பவர்களாகவும் கலாசாரத்தின் பாதுகாவலர்களாகவும்புத்தி ஜீவிகள் உருவாகி வருவதும், கலைஞர்கள் அகக்காட்சியுடையவர்களாக மாறி வருவதும், பெரும்பாலான மக்களின் கவனம் தொலைக்காட்சி மற்றும் பொழுது போக்குச் சாதனங்களால் ஈர்க்கப்பட்டு வருவதுமான நிலமைகள் சமுதாயத்தின் அடிப்படையான அம்சங்கள் பலவற்றில் மாற்றங்கள் நிகழ்ந்து வருவதனை எடுத்துக் காட்டுகிறது. கலைஞர்கள் குழப்பம் விளைவிப்பவர்கள் என்ற வகையில் பாரம்பரிய கலைவரலாற்று மரபிலிருந்து தம்மைத் துண்டித்துக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

பதினாறும் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக்கால கலை ரசிகர்கள் தமது கால ஓவியர்களின் ஓவியங்களினால் இருபதாம் நூற்றாண்டு சுவைஞருக்கிருப்பது போன்றதொரு குழப்ப நிலையை அடையவில்லை. எல்லாக் காலங்களிலும், அது கிரேக்க காலமாயிருந்தாலென்ன, சீனாவின் மிங் அரசர்குல ஆட்சிக்காலமாயிருந்தாலென்ன அல்லது ஐரோப்பிய பாரம்பரிய கலை வளர்ச்சியாகவிருந்தாலென்ன அனைத்துக் கால வளர்ச்சிகளும் சமூக அங்கீகாரம் பெற்றதொரு வளர்ச்சியாகவே வந்துள்ளது. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கலை வளர்ச்சியில் இத்தகையதொரு சமூக அங்கீகாரம் காணப்படவில்லை. இந்நூற்றாண்டின் ஆரம்பகாலங்களிலிருந்தே கலைஞனும் நுகர்வோனும் இரு துருவங்களாகப் பிரிந்து போனார்கள் பல காரணங்களின் நிமித்தம்' குறிப்பாக பொருளாதார காரணிகளால் கலைஞன் தன் படைப்புக்களை தனக்குரிய சுயவழி முறைகளில் வளர்த்து வரலாயினான். ஓவியனின் அகநோக்கு அரூடக் குறியீடுகளின் வெளிப்பாடாகவோ அல்லது அடிமன இயல்புகளை வெளிககாட்டும் கனவின் தன்மையை ஒத்த தொடர் பிணைவுக் காட்சியாகவோ வெளிப்படலாயிற்று.

குறுகிய வட்டத்தினரான கலையிலக்கிய ஆர்வலர்கள் தோன்றினர். மிகவும் உணர்சி வசப்படும் தன்மையும், பரிசோதனை முயற்சியீடுபடும் இயல்புடையவர்களாகவும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால ஓவியர்கள் காணப்பட்டனர். புறநிலை யதார்த்தத்தை ஓவியத்தின் பொருளாய்க் கொள்ளும் மரபுவழி ஓவியக் கொள்கைக்கு மாறான தன்மையுடையவர்களாக இவர்கள் காணப்பட்டனர்.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலிருந்து படைக்கப்பட்ட பரிசோதனை முயற்சிகளான ஓவியங்களை பெரும்பாலான கலை ஆர்வலர்கள் ''நவீன ஓவியம்'' என்றே அழைக்கின்றனர். எனினும் இத்தகைய ஓவியப் பாணி முறறிலும் புதியதல்ல மரபு வழியான ஓவியங்களின் ஒருசில அம்சங்களை விருத்தி செய்வதன்மூலம் நவீன ஓவியப்பாணி பெறப்பட்டது. பிக்காசோவின் ஓவியங்கள் கிரேக்க குடுவைகள், ஸ்பெயின் நாட்டின் கடலோனிய மாகாண ஓவிய மரபு என்பனவற்றின் பெரும் செல்வாக்கிற் குட்பட்டவையாக காணப்படுகின்றன. தற்கால அரூப ஓவியர்கள் சிசானேயின் மனப்பதிவுவாதத்திலிருந்து பிறந்த மரபின் தொடர்ச்சியாக வளர்ந்தவர்களாவர். சிசானேஎளிய கேத்திர கணித உருவங்களைத் தன் ஓவியங்களில் பயன்படுத்தினார். மனப்பதிவுவாதத்தின் கண்டுபிடிப்புகள் பிக்காசோவின் ஓவியங்களில் பெருமளவு செல்வாககுப் பெற்றது. ஸ்பானியரான பிக்காசோ பிரெஞ்சிய ஓவியக்கலை மரபின் தலைவராக இன்று பலராலும் அறியப்பட்டுள்ளார். இவரது பெரும்பாலான ஓவியங்கள் தனிச்சிறப்பியல்பான தன்மையையும், பாரம்பாரிய ஓவியக் கருத்துக்களையும் புதியபாணியில் படைத்துக் காட்டும் ஆற்றலையும் எடுத்துக்காட்டுகிறது அரூபம் சுரியரிசம், யதார்த்த வாதம். மற்றும் பிற பாணிகளைத் தானெடுத்துக்கொண்ட கருத்தைத் தெளிவாக வெளியிடுவதற்கேற்ற வகையில் பிக்காசோ பயன்படுத்தினார்.

பிக்காசோ என்ற இந்த இளம் ஓவியன் கற்பனையாற்றலுடன் பாரம்பரிய வழிமுறையில் வியக்கத்தக்க ஓவிய சாதனைகளைப் புரிந்துவரும் அதே காலப்பகுதியில் பிறிதொரு குழுவினர் ''நவீன ஓவியம்'' என்ற கருத்தின் உள்ளார்ந்த அர்த்தத்தில் மரபுக்கெதிரன புரட்சியிலீடுபட்டனர். இவர்களே போவிஸ்டுக்கள் அதாவது காட்டு விலங்குகள் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர் ''போவிஸ்ட்'' என்ற இப்பெயர் தற்செயலாகவே இவர்களை வந்தடைந்தது.

1905 இல் பாரீஸ் நகரில் இடம்பெற்ற ஓவியக்கண்காட்சியைப் பார்வையிட்ட வயூக்செல்ஸ் (vauxcelles) என்ற விமரிசகர்பிரகாசமான நிறங்களுடனும், இடக்கரடக்கலான கைத்திறன் பாணியிலமைந்த ஓவியங்களின் நடுவே மத்தியகால பாணியிலமைந்த சிற்பம் ஒன்றிருப்பதைக் கண்டு, காட்டு விலங்குகளின் மத்தியில் ஒரு கலை என குறிப்பிடப்போய், காட்டு விலங்குகள் என்பதே இச்குழுவினரின் பெயராய் நிலை பெற்றது.

போவிஸ்ட் ஓவிய மரபின் தலைவராக விளங்கியவர் கென்றி மாட்டிசே என்பவராவர் பிரகாசமான நிறங்களைப் பயன்படுத்துவது இவரது பிரதான ஓவியப் பண்பாயிருந்தது மரகதப்பச்சை, மஞ்சிட்டி சாயம், குருதிச் சிவப்பு, கடல்நீலம் போன்ற கண்ணைப் பறிக்கும் நிறங்கள் இவரால் பயன்படுத்தப்பட்டன.

போவிஸ்டுக்கள் புறநிலை யதார்த்தத்தை வர்ணங்களாக உருமாற்றுவதே ஓவியத்தின் கடமை என எண்ணிச் செயற்பட்டு வந்தனர். பிரகாசமான நிறங்கள் இதற்கெனத் தெரியப்பட்டன. மரச்சட்டங்களுள் புதியதொரு ''மெய்மையைப்'' படைத்து தமது இரசனையார்வத்தை போவிஸ்டுக்கள் வெளியிட்டனர் ஆந்திரே டிரயின், ரவுல்டூபி, ரௌல்ட் போன்ற போவிஸ்டுக்கள் இத்தகைய இலட்சியத்துடன் செயற்பட்டவர்களாவர். இவர்களைத் தவிர அல்பேட் மாகுவைட், பாராகுவே போன்ற பிரெஞ்சிய ஓவியர்களும், ஜேர்மனியில் இருஸ்நர் மார்ஸ், ஒகஸ்ட்மைக் என்போர்களும் இவ்வழியிலேயே செயற்பட்டவர்களாவர்

மாட்டிசே தன் இளமைக் காலத்தில் பண்டைய முன்னோடிகளைப் பயிலுவதிலும் குறிப்பாக ஏபேல், பௌசின், சாரடின் எனபோர்களின ஓவியங்களைப் பார்த்து வரைவதிலும் குறிப்பிட்ட காலப்பகுதியைச் செலவிட்டனர். போவிஸ்ட் ஓவியர்கள் யதார்த்த உலகை வரைதல் என்பதிலிருந்து விடுபட்டு, தனிச்சுவையார்வமுடையவர்களாக இளமைத் துடிப்புடன் செயற்பட்டார்கள். பற்றார்வ உணர்ச்சியின் காரணமாக எழுநத புலனின்ப நாட்டம் இவர்களது ஓவியததில் கவர்ச்சியை ஏற்படுத்தியது. போவிஸ்டுக்களின் ஓவியங்கள் தனிச்சிறப்பியல்பான தன்மையைப் பெற்றிருந்தபொழுதும் அதனை மற்றவர்களுக்கு நியாயப் படுத்தும் வாதங்களோ அன்றி விளங்கங்களோ தேவையற்றன எனக் கருதினர்.

அரூப ஓவியப் பாணியின் முக்கியஸ்தராக சிசானே கருதப்படுவது போல, போவிஸ் அம்சமாக இவரால் கருதப்பட்டது.

வன்கோவின் ஓவியங்களில் வர்ணங்கள் இரு நோக்கங்களை நிறைவேற்றுகின்றன. முதலாவது ஓவியத்தின் பொருளை முதன்மைப்படுத்துவது இரண்டாவது கலைஞனின் பற்றார்வத்தை வெளியிடுவது

கலைஞனின் காட்சி ஞானத்தை சுவைஞருக்குப் புலப்படும் வகையில் வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டன. போவிஸ்ட் ஓவியர்கள் உள்ளுணர்வுப் புலனை வெளிக்கொண்டு வருவதில் வெற்றி பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர் வினைத் திறனும், படைப்பாற்றலும்கலந்தொரு முயற்சியே ஓவியஉருவாககம் கலைஞன் தன் மனப்போக்கிற்கு இயைந்த வகையில் தன் உணர்ச்சிகளை ஓவியத்தில் வெளியிடுபவனாக இருக்கின்றான் அவ்வெளிப்பாடு அவன் வாழ்ந்த காலம், அக்காலத்தியப் பண்பாடு, அக்காலத்தோரின் இரசனை, கலைஞனது நோக்கம் என்பனவற்றினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் எனினும் ஓவியத்தின் ஊற்று பெருமளவிற்கு கலைஞனின் மனப்போக்கிலும், உள்ளுணர்விலும் தங்கியுள்ளது

போவிஸ்டுக்களின் உள்ளுணர்வானது அவர்களது மனம்போன போக்கில் வெளிப்படுத்தப்பட்டது அதாவது காட்டுவிலங்கின் நடத்தைபோல ஓவிய உலகில் பிரமாணமாகக் கருதப்பட்டு வந்த விதிமுறைகள் எதனையும்

## [3] போவிஸம் (Fauvism)

இவர்கள் பின்பற்றவில்லை. தாம் கண்டதையும், கேட்டதையும், உணர்ந்ததையும் தாம் விரும்பியவாறு வரைந்தார்கள் விரும்பிய வர்ணங்களைப் பயன்படுத்தினார்கள் வர்ணங்களைப் பயன்படுத்துவதில் எத்தகைய கட்டுப்பாடுகளும் போவிஸ்டுகளிற்கு இருக்கவில்லை

ஓவியப் பாணியின் முக்கியஸ்தராகவன்கோ கருதப்படுகிறார் வன்கோ தன் இளமைக் காலங்களில் பற்றார்வம் மிக்க போவிஸ்ச ஓவியங்களை வரைந்தார். ஓவியத்தில் நிறங்களை முதன்மைப் படுத்திய வன்கோவினது அபிப்பிராயப்படி ஓவியம் ஒரு மிகைப்படுத்தற் கலையாகும் ஓவியமொன்றை வரையத் திட்டமிடுபவன் முதலில் அதற்குரிய சில முதன்மையான கூறுகளைத் தெரிந்தெடுத்து அதனை மிகைப்படுத்தி வரைய முயலுதல் வேண்டும் இது ஓவிய உருவாக்கத்தின் முக்கியதொரு

போவிஸ்டுக்களுக்கானபிரெஞ்சிய ஓவியர்களுக்கும், ஜேர்மனிய ஓவியர்களுக்குமிடையில் பெருத்த வேறுபாடு காணப்படுகிறது அதிலும் குறிப்பாக மாட்டிசே தமது ஓவியப்பாணியின் கோட்

## ஆறு வாரக் கட்டுரை

பாடாக எதனையும் உருவாக்கவில்லை. பிரெஞ்சியக் குழுவினர் ஓவியர்களாக மட்டுமேயிருந்தனர் ஆனால் ஜேர்மனிய பிரிவினரோ தமது ஓவியப் பாணிக்குரிய பொதுவான கொள்கைகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். ஓவியம் வரைவதுடன் கூடவே சிறந்த கைவினைஞர்களாகவும். செதுக்குக் கலையில் குறிப்பாக மரம் செதுக்குவதில்சிறப்புத்தகைமை பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். எனினும் போவிஸ்டுக்கள் அனைவரும் அடிப்படையில் கற்பனை நிலைநின்று கலைச் சாதனைகள் படைத்தவர்களாகக் காணப்படுகின்றனர் உள்ளுணர்வு பற்றார்வம் என்பன கற்பனை நிலையின் முதன்மையான கூறுகளாக இடம் பெற்று புதிய காட்சிப் புலத்தை புதிய வடிவங்களினூடாக வெளியிட வழிசமைத்தது.

மாட்டிசே மட்டுமே தமது இறுதிக் காலம்வரை தமது படைப்பு பற்றிய புரிந்துணர்வுடன் போவிஸ்டாக இருந்து வந்தார். ஏனையோர் படிப்படியாக போவிஸ்ட் ஓவியப் பாணியிலிருந்து புதிய புதிய வழிகளில் தனது நோக்கு நிலையை மாற்றிக் கொண்டனர். ப்ராருய் ஆரம்பத்தில் போவிஸ்ச பாணியில் ஓவியங்களை வரைந்தாலும், பின்னர் கூபிஸ் ஓவியப் பணியில் தன் நாட்டத்தைச் செலுத்தினார். போவிஸ் ஓவியப் பாணி மிகக் குறுகிய கால ஆயுளைக் கொண்டதாக இருந்த போதும்! அவர்களது கட்புல ஞானம் குறிப்பாக வர்ணங்களின் பயன்பாடு, எளிமையான அலங்காரம், என்பன வற்றிற்காக இன்றும் சுவைஞர்களின் கவனத்தை தன்பால் ஈர்க்கக் கூடியதாக இருக்கிறது போவிஸ்ம்ஓவியத்தில் ஒரு வகையான உளப்பார்வை என்றும், எல்லாத் தலைமுறைகளிலும் ஒருசிலர் போவிஸ்டுக்களாகவே மறுபிறப்பெடுக்கின்றனர் எனவும் பொதுவாகக் கூறலாம்.

(தொடரும்)

# சர்ச்சைக்குரிய செவ்வாய்

தொகுப்பு: தவபாலன்

அண்டங்கள் பலவற்றிலும் மனிதர் வாழும் ஒரே கிரகம் நம் பூமியே எனப் பலர் நினைத்துக் கொள்கின்றனர். ஆனால் அவற்றையெல்லாம் பொய்யாக்க பல நாட்டு விஞ்ஞானிகள் ஆய்வில் இறங்கியுள்ளனர்.

அவர்கள் ஆய்வில் இறங்கியுள்ள முதல் கிரகம் நம் பூமியை அடுத்துள்ள சூரியக் குடும்பத்தில் நான்காவது இடத்திலுள்ள செவ்வாய்க்கிரகம் பல்லாண்டுகளாக அமெரிக்க, ரஷ்ய விண்ணாய்வாளர்கள் இச்செவ்வாய்க்கிரகத்தில் மிகுந்தஅக்கறை செலுத்துகின்றனர் அமெரிக்கா 1977 ஆம் ஆண்டளவில் அனுப்பிய வைக்கிங் (1) வைககிங்(11) கலங்கள் ஆய்வை நடத்தின. தற்போது ரஷ்ய போபோஸ் என்ற விண்கலத்தை செவ்வாயின் துணைக்கோளான போபோஸிற்கு அனுப்பியது அதனுடன் உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளியானது. அதனுடன் தொடர்புற ரஷ்ய விண்ணாய்வாளர்கள் பிரயத்தனம் எடுத்து வருகின்றனர்.

இதேவேளை ரஷ்யாவின் 'இஸ்வெஸ்தியா' இதழிற்கு வலெரிபார்சுகோல் என்ற சோவியத் செவ்வாய் ஆய்வுக்குழு உறுப்பினர் தந்த விபரம் வருமாறு:-

''செவ்வாய் நமக்கு மிதந்த சர்ச்சைக்குரிய கிரகமாக இருந்து வருகின்றது. அங்கு உயிரினம் உள்ளதா? இல்லையா என்பதே அந்த சர்ச்சை செவ்வாயில் உயிரினம் இருக்க வேண்டும். ஏனெனில் அதன் வளிமண்டலத்தில் ஐதரசன் வாயு உள்ளது ஐதரசன் வாயு உள்ளதனில் கட்டாயம் நீரும் இருந்தாக வேண்டும். நீர் இருந்தால் உயிரினங்கள் இருக்கலாம்.

1977இல் அமெரிக்கா அனுப்பிய வைக்கிங்கின் ஆய்வில் அங்கு ஆரம்பநிலையில் உயிரினம் உள்ளதாக முடிவ வந்தது. மேலும் செவ்வாயின் இருதுருவங்களிலும் பனிக்கட்டி போன்ற வெண்படலம் இருந்தது என வைக்கிங் எடுத்தபடங்கள் கூறுகின்றன. துருவங்களிலிருந்து பெரிய பள்ளத்தாக்குகள் கிரகத்தின் மத்திய பகுதியை நோக்கிக் காணப்பட்டன ஆகவே துருவப்பகுதியிலிருந்து நீரைக்கொண்டுவரவே இக்கால்வாய்கள் உருவாகியிருக்கலாம் என்ற ஐயப்பாடும் விஞ்ஞானிகளிடையே நிலவுகின்றது ஆனாலும் படங்களை முற்றாக நம்பிவிட முடியாது. ஏனெனில் செவ்வாயில் பெரும் தூசிப்படலம் உள்ளது இவை காற்றுநிலைக்கேற்ப அசையும் இயல்புடையவை. ஆகவே படங்கள் தரும் தகவல்களை நம்பிவிட முடியாது

வைக்கிங் ஆய்வு செவ்வாயின்ஒருசில இடங்களிலேயே நடைபெற்றது. பிற இடங்களிலும் ஆய்வுநடைபெறின் உண்மைத் தகவல்கள் வெளியாகலாம்

செவ்வாயில் எரிமலைகள் உள்ளன ஆனால் தற்போது எரிந்தவாறு இல்லை. இவை 600 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே வெடித்திருக்க வேண்டும் என ஆய்வுகள் கூறுகின்றன.

[14-ம் பக்கம் பார்க்க]

# ஓர் அக்கினி அணைகிறது

## ஓர் அங்க நாடகம்

ஆ. பவன்

'அக்கினி' பத்திரிகைக் காரியாலயம். பத்திரிகாசிரியர் 'வாயு' தமது மேஜை முன் அமர்ந்திருக்கிருர்; ஏதோ எழுதுகிருர்.

ஒருகுரல்: உள்ளே வரலாமா?
வாயு: வரலாம்! வரலாம்! (முணுமுணுக்கிருர்) எழுதவே விடமாட்டான்கள்.

வந்தவர்: நான்தான் தாசன்.
வாயு: சொந்தப் பெயரா? புனைபெயரா?

தாசன்: சொந்தப்பெயர்; புனைபெயர் எறும்பு

வாயு: (கோபத்துடன்) எறும்புக்கு அக்கினியுடன் என்ன வேலை? பொசுங்கிவிடுமையா பொசுங்கிவிடும் உடனே விசிறி என்று உமது புனைபெயரை மாற்றும், அப்போது தான் அக்கினியை விசிறி விடலாம்.

தாசன்: அதுதான் உங்கள் புனைபெயரும் வாயுவென்று வைத்திருக்கிறீர்களா?

வாயு: அதேதான் என் சொந்தப் பெயர் நீர்மேகவண்ணன் அக்கினியுடன் நீருக்கு ஒத்து வருமா? மாற்றிவிட்டேன் வாயுவென்று; எப்படி?

தாசன்: அருமை! அருமை!

வாயு: ஓய்! எனக்கு இப்பவே எச்சச்சக்கமான தடிமன். நீர் வேறே ஒரேயடியாய் ஐஸ் வைத்துத் தொலைக்காதேயும் என்ன விஷயமாய் வந்தீர்?

தாசன்: நீங்கள் உதவியாசிரியர் ஒருவர் வேண்டுமென்று விளம்பரஞ் செய்திர்களே அது தான் வந்திருக்கிறேன்.

வாயு: அக்கினி முதல் இதழ் தமிழ்ப் புத்தாண்டன்று வெளிவர வேண்டும் நான் ஆசிரியர். உதவியாசிரியர் ஒருவர் வேண்டும். அதுதான்...

தாசன்: நான் வந்து விட்டேனே; வெளுத்து வாங்கி விடுகிறேன் வெளுத்து!

வாயு: உமக்கு நிறைய எழுதிய அனுபவம் உண்டா?

தாசன்: உண்டு ஆனுல் அது பெருஞ் சோகக்கதை.

வாயு: (தயாராய்க் கைக் குட்டையைக் கண்ணருகில் வைத்துக்கொண்டு) சொல்லும். நன்ருயிருந்தால் அந்தக் கதையை முதல் இசழிலேயே வெளியிட்டு விடுகிறேன்.

தாசன்: முதலில் கறையான், எலி என்ற பெயர்களில் நிறைய எழுதினேன்.

வாயு: எறும்பு என்றீரே உமது புனைபெயர்.

தாசன்: அந்தப் புனைபெயரில் இனித்தான் எழுதப் போகிறேன். ஏன் தெரியுமா?

வாயு: சொல்லும்!

தாசன்: கறையான் என்றபுனைபெயரில் எழுதினேன் யாருமே பிரசுரிக்கவில்லை கட்டாகக் கட்டி ஒரு மூலையிற் போட்டேன். கறையான் அரித்து விட்டது.

வாயு: (எரிச்சலுடன்) ஓஹோ! அப்படியே எலி என்ற புனைபெயரில் எழுதியதை எலி அரித்துவிட்டதாக்கும்?

தாசன்: (உற்சாகத்துடன்) அதே தான், அதே தான். எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?
வாயு: (வெகு அலக்ஷியமாக) ஓய்! நான் துப்பறியுங்கதை எழுதுகிறவன் இதைக் கண்டு பிடிப்பது ஒரு பிரமாதமா?

தாசன்: (கிண்டலாக) ஐயோ! இது எனக்குத் தெரியாமற் போச்சே! எத்தனை துப்பறியுங் கதைகள் எழுதியிருக்கிறீர்கள்?
வாயு: (கோபத்துடன்) நேர்முகப் பரீட்சை நடத்துகிறவன் நான்தான்; நீரல்ல! ஞாபகமிருக்கட்டும்.

தாசன்: (அவசரம் அவசரமாக) மன்னிக்க வேண்டும் மன்னிக்கவேண்டும்.

வாயு: சரி, நீர் என்ன கேட்டீர்? எத்தனை சதை எழுதினேன்? அது தானே இனித் தான் எழுத வேண்டும். இப்போதுதானே பத்திரிகையே ஆரம்பித்திருக்கிறேன்.

தாசன்: சே! இது கூடத் தெரியாமற் போச்சே எனக்கு. என் புத்தியைச் செருப்பாலே அடிக்க வேணும். செருப்பு விற்கிற விலையிலே செருப்புக்கெங்கே போவேன்?

வாயு: (ஏளனமாக) நீர் உதவியாசிரியராய் அக்கினியில் எழுத ஆரம்பித்தவுடன் செருப்புச் செருப்பாவே வந்து குவியாதா? உம்மைப் பார்த்தாலே உம் எழுத்து எப்படி இருக்குப் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. (வெறுப்புடன்) போம்! போம்!

தாசன்: உங்களையே நம்பி வந்த என்னைத் தயவுசெய்து (வாயுவின் கால்களைப் பிடித்துக் கொண்டு) கால் விட்டு விடாதீர்கள்!

வாயு: (பதறியவராய்) அடச்சீ! காலைவிடும்; விடுமையா காலை. ஒரு சந்தர்ப்பந்தருகிறேன் ஐந்து பேட்டி வேணும்; முடியுமா! உம்முடைய திறமையை நான் காண்பதற்கு இதுதான் வழி.

தாசன்: இதோ! போகிறேன்; வேட்டியுடன் வருகிறேன்.

வாயு: என்னய்யா இருந்தாற் போலிருந்து தடுமாறுகிறீர். கால்விட்டு விடாதீர்கள் என்றீர். இப்போ பேட்டி என்ருல் வேட்டி என்கிறீர். பேட்டி காண ஆள் தேவை என்ற என் விளம்பரத்துக்கு ஏகப்பட்ட விண்ணப்பங்கள் ஐந்து விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்து வரச் சொல்லியிருக்கிறேன். இப்போது இங்கே வந்துவிடுவார்கள் உம்முடைய புனைபெயர் விசிறி; ஞாபகமிருக்கட்டும். அவர்களுடைய உள்ளங்களை விசிறி அக்கினிக் கொழுந்துகளான கருத்துக்களை வெளிக்கொண்டு வர வேண்டும்.

தாசன்: (தனக்குள்) பைத்தியம் ஒன்றிடம் வந்து நல்லா மாட்டிக் கொண்டேன்.

வாயு: என்ன முணுமுணுக்கிறீர்.

தாசன்: ஒன்றுமில்லை விசிறி விடுகிறேன் விசிறி என்றேன்.
ஐவர்: ஐயா! உள்ளே வரலாமா?

வாயு: வரலாம்! வரலாம்! இப்படி உட்காருங்கள். எங்கே விசிறி ஆரம்பிக்கலாமா?

விசிறி: இதோ! ஆரம்பிக்கிறேன் (ஐவரில் ஒருவரைப் பார்த்து) எங்கே உங்களைப் பற்றிச் சில வார்த்தைகளில் அறிமுகஞ்செய்யுங்கள் பார்க்கலாம்.

வந்தவர்1: ஐயா! விசிறி, நான் ஆசிரியர். தமிழ் கற்பிப்பவன். பாடத்தேர்வு, பாடங்களை எழுதியிருக்கும் முறை எல்லாமே படுமோசம். தமிழ் என்ருல் ஏதோ வரண்ட பாலைவனம் என்ருகிவிட்டது. இலக்கியம், இலக்கணம் எல்லாமே வேண்டாத பொருள்களாகி விட்டன.

வாயு: நீங்கள் பழையகாலத்து ஆசாமி அது தான் இப்படியெல்லாந் தோன்றுகிறது. நாங்கள் எழுதுவதுதான் இனி இலக்கியம் அதிலிருந்து இனித் தோன்றப்போகிறதே அது தான் இலக்கணம் அக்கினியைத் தொடர்ந்து படியுங்கள் புரியும்.

வந்தவர்1: (தனக்குள்) இந்த வாயு பகவானை விட, பொருளிலக்கணம் அதுவும் கற்பிப்பது கடினம். தன்னுல் அது முடியாதென்பதற்காக இனி வேண்டாம் என்ற அந்தப் பேராசிரியரின் திக்கு நோக்கித் தொழாதவன் தமிழனுகான். பொருளதிகாரம் தவிர்ந்த தொல்காப்பியம். போனுற்போகிறது தப்பிப் பிழைக்கட்டும் என்று விட்டு வைத்தாரே, எப்படிப்பட்ட கருணை உள்ளம் படைத்தவர் (உரத்து) அடுத்த ஆண்டிலே வேறொருவர் உங்களிடம் நீங்கள் சொன்னதையே திருப்பிச் சொன்னுல உங்கள் இலக்கியம், இலக்கணம் அத்தோடு போய்விட வேண்டியது தானே?

வாயு: (சற்றே தடுமாறிச் சமாளித்துக்கொண்டு) அதை அப்போது பார்த்துக்கொள்ளலாம்.

[துண்டை உதறித் தோளிற் போட்டுக்கொண்டு வெளியேறுகிருர் ஆசிரியர் ]

விசிறி: (வந்தவர் 2 ஐப் பார்த்து) நீங்கள்...

வந்தவர்2: நான் வேலையற்ற பட்டதாரி. என் கல்வியால் எவ்வித பயனும் இல்லை (ஏக்கத்துடன்) கற்ற கல்வியால் வாழமுடியவில்லையே.

வாயு: (ஆக்ரோசமாக) வாழ வழிசெய்யாத கல்வியை அக்கினி சுட்டெரிக்கும். புதிய கல்வி முறை மலர அது வழி செய்யும்.

வந்தவர்2; (தனக்குள்) இதையெல்லாங் கேட்டுக் கேட்டுக் காதே புளித்துவிட்டது. காரியம் எதுவும் ஆகக் காணும் (உரத்து) வெறும் பேச்சாலும், எழுத்தாலும் என்ன பயன்?

வாயு: (பெருமிதத்துடன்) அக்கினியின் ஆற்றலைப் போகப் போகத்தான் நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

விசிறி: (வந்தவர் 3 இன் பக்கம் திருபபி ஏதோ நினைவாய்) நீங்களும் பட்டமற்ற வேலை தாரிதானு?

[வாயு முறைக்கிருர்; விசிறி நாக்கைக்கடிக்கிருர்]
வந்தவர்3: நமக்கு தொழில் கவிதை; ஆனுல்......

வாயு: பரிவோடு உங்கள் கவிதைகளின் உயர்வை இந்த உலகம் உணரவில்லை; அது தானே உங்கள் வருத்தம்.

கவிஞர்: அதே தான்; என் குறை தீருமா?

வாயு: உங்கள் கவிதைகள் தரம் வாய்ந்தவையானுற் பிரசுரம் செய்து பிரபல்யப் படுத்துவதே அக்கினியின் முதற் பணியாக இருக்கும். எங்கே கவிதை ஒன்று சொல்லுங்கள் கேட்போம்.

கவிஞர்: சாதிகள் ஒழிய வேண்டும்
சமநிலை ஓங்க வேண்டும்
போதனை இனிமேல்வேண்டாம்
புதுயுகம் மலர வேண்டும்
சீதனம் ஒழிய வேண்டும்
சிக்கென மணமுடித்து
வேதனைப் படுங்குமர்கள்
வேதனை தீர்க்க வேண்டும்
இது என்னுடைய மரபுக் கவிதை

விசிறி: அப்படியானல் புதுக்கவிதையும் எழுதியிருக்கிறீர்களா?

கவிஞர்: ஓம் கேளுங்கோ!
வேலியிற் கதிகால் இல்லை.
ஏன்
வேலிக்குத் தெரியாது.
கதிகாலுக்கு?
யாருக்குத் தெரியும்.

விசிறி: ஒன்றுமே புரியவில்லை.
கவிஞர்: அதுதான் புதுக்கவிதை.

வாயு: உங்களுக்குஎன்னவயது?
கவிஞர்: வயது 28
வாயு: கலியாணம்......
கவிஞர்; இன்னும் இல்லை.
வாயு: அப்ப சீதனம் இல்லாத சீர்திருத்தக் கல்யாணம் தான் ...

கவிஞர் :ஆர் சொன்னது. சீதனம் வீடுமரொக்கமும் இல்லை எனறே பல பேச்சுக்கால்களை முறித்துப் போட்டேன்.
(கிசுகிசுக்கிருர்) சாதி சனமும் நல்லாயிருக்கவேணும்.

வாயு: (கோபத்தோடு) சரிசரி உம்முடைய கவிதைகளை எடுத்துக் கொண்டு உடனே வெளியே போம். உம்முடைய முகத்திலேயே விழிக்கக் கூடாது. சொல்லுவதொன்று செய்வதொன்று.

(கவிஞர்வேகமாகப்போகிருர்)
விசிறி. என்ன பேசாமல் இருக்கிறீர், அடுத்த பேட்டியை ஆரம்பிக்கலாமே.

வந்தவர் 4: பேசாமல் இருப்பதுதான் நல்லது. பேசினுல் சாரீரமே போச்சு. நான் சங்கீதம் படித்தவன்

விசிறி: அண்ணமலையிலோ? இராமநாதன் நுண்கலைப் பிரிவிலோ?

வந்தவர்: எங்குமில்லை, குருவும் இல்லை. என்பாட்டிலே படித்த படிப்பு.

வாயு: ஓஹோ! அப்ப பிறவி மேதை; ஓதாதுணர்ந்த கலைஞன்.

வந்தவர்: சரியாச் சொன்னீர்கள். அடக்கம் காரணமாக அதைநானே சொல்லவில்லை.
விசிறி: உங்கள் திறமைக்கு ஆதாரம்?

வந்தவர் 4: இசைக் கோலம் ஒன்று கற்பனை பண்ணியிருக்கிறேன். (தொண்டையைக் கனைக்கிருர்) கேளுங்கோ!

(கேட்கச் சகிக்காத பல கதறல்களின் கலவை ஒலி) இடி. மின்னல். மழையைத்தான் கற்பனை பண்ணியிருக்கிறேன்; எப்படி?

வாயு: (எரிச்சலுடன்) தியாகராஜ சுவாமி, பீதோவன், தானசேன் இணைந்தும் இப்படி ஒரு இசையைக் கற்பனை பண்ண ஏலாது.

வந்தவர் 4: தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியான கர்நாடக இசை பெயருக்கேற்றபடி கர்நாடகமான காட்டுமிராண்டி இசை; இரவற் சரக்கு இலங்கையின் பாரம்பரியத்துக்கமையத் தனித்துவமான இசை வடிவந்தேவை. சிங்கள, தமிழ் இசைகளைக் கலந்து புதிய கலப்பின இசையை உருவாக்கியிருக்கிறேன்.

வாயு: சங்கீதத்தைப் படிக்காமலே புதிதாய் இலங்கை இசை உருவாக்கி இசையமைக்கிறீர்கள் உண்மையிலேயே நீங்கள் மேதைதான். எங்களைப் போலே பேதையருக்கு உந்தச் சங்கீதம் புரியாது அப்ப போட்டு வாருங்கோ.

வந்தவர் 5: வணக்கம்! நான் பிரபல சிறுகதை எழுத்தாளன், நாவலாசிரியன் பண்பரசன். புனை பெயர்கள் சம்பு, மாதவன், சங்குசக்கரன்.
வாயு: ஓய் விசிறி என்னய்யா செய்கிறீர், நீர்தானே ஐயா பேட்டி காண்பவர்.

விசிறி: உமது சாதனைகளைப் பற்றிச் சொல்லலாமா?

பண்பரசன்: தாராளமாக, நான் சிறுகதை நாவல் என்று எழுதினல் நிச்சயம் பரிசு கிடைத்தே தீரும்.

விசிறி: (அப்பாவித் தனமாக) அதெப்படி அத்தனை நிச்சயமாகச் சொல்கிறீர்.

பண்பரசன் (இரு புறமும் சர்வ ஜாக்கிரதையாக ஒரு தடவை கண்களாலே துழாவிவிட்டுத் தாழ்ந்த குரலில்) யாருமே தரவில்லையென்ருல் பரிசுச் சதுரம் எனக்குப் பரிசு வழங்கும்.

வாயு
விசிறி : பரிசுச்சதுரமா?

பண்பரசன்: பரிசுச் சதுரம் ஒரு இலக்கிய அமைப்பு சிறந்த படைப்புக்களுக்குப் பரிசுவழங்குவதே அதன் குறிக்கோள்.
வாயு: நல்ல காரியம் நிச்சயம் பாராட்டவேண்டிய சங்கதி
விசிறி: ஏன் சதுரம் என்று பரிசுவழங்கும் அந்த அமைப்புக்குப் பேர் வைத்திருக்கிருர்கள்

பண்பரசன்: அட! இதுகூடவா புரியவில்லை நான்கு மூலை கொண்டது சதுரம் நான்கு மூலையாக நிற்கும் நான்கு பிரபலஸ்தர்களின் முதுகில் நிற்பதாகும் இந்த அமைப்பு.
வாயு: யார் யார் அந்த நால்வர்?

பண்பரசன்: மன்னிக்க வேண்டும் அவர்கள் விளம்பரம் வேண்டாதவர்கள்; விரும்பாதவர்கள் ஒன்றைமட்டும் உங்கள் காதோடுசெல்லிவைக்கலாம்; வைக்கிறேன். அந்த நான்கு முதுகுகளில் நடுநயமாக–பட்டடையாக– விளங்குவது என் முதுகே.

வாயு: அதனுலேதான் அடிக்கடி உமக்குப் பரிசுகிடைக்கிறதோ?

பண்பரசன்: (விறைப்பாக) தொழில் இரகசியங்களைத் துருவியறிய முயல்கின்றீர்கள். இது பேட்டி என்ற எல்லையைத் தாண்டும் அத்துமீறல் என்பதைச் சுட்டிக் காட்டுதல் என் கடமை.

வாயு: (இளக்காரமாக) இந்த இலட்சணத்தில் பண்பரசன் என்று பெயர் வேறே; (ஆக்ரோசமாக) கழுத்தைப் பிடித்து உம்மைநான் வெளியே தள்ளுமுன் போய்விடும் வெளியே.

(பண்பரசன் அசடு வழியும் முகமும் தொங்கிய தலையுமாய் வெளியேறுகிருர்) ஓய் விசிறி பேட்டியும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம் எடுமையா பேனையை. இந்த அவலங்களையெல்லாம் சுட்டுநீருக்க வேண்டாமா எங்கள் அக்கினி

(ஒருவர் விரைந்து உள்ளே வருகிருர்)

வாயு: திறந்த வீட்டுக்குள் நாய் நுழைந்த மாதிரி நுழையிறீர்; ஆர் நீர்?

வந்தவர்: இப்ப உங்களுக்குச் சண்டித்தனமாய் தெரியும். ஒரு வருஷத்துக்கு முந்தி ஏதோ லட்சியம் கனவெண்டு காசு கடன் கேட்டபோதெண்டாத் தெரியும். மாதம் மாதம் திருப்பித் தாறன் எண்டதெல்லாம் மறந்துபோச்சு. பத்திரிகை நடத்தவெண்டு தந்த இடத்துக்கும் இந்த ஆறுமாதமா வாடகை இல்லை. பத்திரிகையையும் காணேல்லை நீங்கள் தான் உலகத்தைத் திருத்தப் போறியள் என்ன? உடனை இடத்தைக் காலி பண்ணிப் போட்டுக் காசை வையுங்காணும் இல்லையெண்டால்... நடக்கிற கதை வேறை.
(வாயு ஓடுகிருர்; வந்தவர் துரத்துகிருர் )

# தொடர் காவியம்

# காவேரி

காரை. செ. சுந்தரம்பிள்ளை

## 12

## தூய தொண்டினள்

காதலொடு காரிகையர் வாழ்வுயர நின்றாள்
கதியற்ற பெண்கள் பலர் கரைசேர வைத்தாள்
சாதிமத பேதமிலாச் சமுதாயம் கண்டாள்
தையலர் சமத்துவமாய் வாழவழி செய்தாள்.

சீதனங்கள் கேட்பவரை மணக்கோம்யாம் என்று
சேயிழைமார் யாவருமோர் சபதமெடுப் பாரேல்
பூதலத்தில் இக்கொடுமை தீராதோ? இன்றே
புறப்படுவீர் புத்துலகம் சமைத்திட நாம் என்றாள்.

சுயமாகத் தொழில் செய்து வாழாத வரையும்
தோகைமார் பிறர்மீது தங்குத லியல்பே
பயமின்றிப் பெண்களிந் நாட்டினில் வாழ
பல்தொழிலும் கற்றிடுதல் அவசியமா மென்றாள்.

பட்டிதொட்டி யெங்கணுமே மாதரணி சேர்த்தாள்
பலமுள்ள இயக்கமாய்ப் பணிபுரிய வைத்தாள்
திட்டமுடன் எம்மினத்தின் தீமைகளை தற்கும்
செல்வியிவள் ஆண்களையும் அறைகூவி யழைத்தாள்

### வேறு!

பாழுமினச் சிக்கல் பயங்கரமாய்த் தோன்றியதால்
நாளுமுயிர் இழந்த நல்லோர்கள் எத்தனைபேர்
நாளுமுயிர் இழந்த நல்லோர் பிரிவாலே
சூழும் துயர்கொண்டு துடிப்பவர்கள் எத்தனைபேர்

கூடிக் குலவிக் குதூகலமாய் வாழ்ந்தவர்கள்
பேடிகளால் ஓர்நொடிக்குள் பிணமானோர் கேளீரோ
பேடிகளால் ஓர்நொடிக்குள் பிணமாய் மறைந்தாலும்
நாடிவரும் விடுதலையின் நற்றாணாய் ஆனாரே

பிஞ்சுக் குழந்தைகளைப் பெரியவரைத் தாய்மாரை
வஞ்சகமாய்க் கொன்றவரை வையம் மறந்திடுமோ
வஞ்சகமாய்க் கொன்றவரை வையம் மறந்தாலும்
தஞ்சமளிக் கின்ற சிவன் சற்றும் மறவானே

துப்பாக்கிக் குண்டாலே தொல்லை விளைத்தவரை
எப்போதும் இவ்வுலகம் ஏற்று மதிக்காதே
எப்போதும் இவ்வுலகம் ஏற்று மதித்தாலும்
தப்பாதெம் ஈசனவன் தலைகொய்ய மாட்டானோ

மாடிமனை யிடித்தும் மண்குடிசை தானெரித்தும்
கேடுவிளை வித்தவரை கீழோரும் ஏற்காரே
கேடுவிளை வித்தவரை கீழோரே ஏற்றாலும்
ஆடும் பரமசிவன் அக்கினிக்குள் தள்ளானோ

மானமுடன் வாழ்ந்த எமை மண்மீதுழல வைத்த
ஈனர்களை இவ்வுலகம் ஏனென்று கேட்காதே
ஈனர்களை இவ்வுலகம் ஏனென்று கேட்டாலும்
வானவர்கள் தீயவரை வாட்டா திருப்பாரோ

அங்குமிங்கு மோடியோடி அல்ல லடைந்ததனைச்
சங்கைமிகு தமிழன் சற்றும் மறப்பானோ
சங்கைமிகு தமிழன் சற்றும் மறந்தாலும்
பொங்குமர வணிந்தான் பொறுத்து மிருப்பானோ

உண்ண உணவுமின்றி உறங்க இடமுமின்றிக்
கண்ணுந் துயிலாமல் கஷ்ட மடைந்தோமே
கண்ணுந் துயிலாமல் கஷ்ட மடைந்தாலும்
மண்ணவல் எம்லட்சியங்கள் மாயாது மாயாதே

அங்க மிழந்தாலும் ஆஸ்திபறி போனாலும்
பங்க மடைந்தாலும் பலவீனம் கொள்ளோமே
பங்க மடைந்தாலும் பலவீன முற்றாலும்
எங்கள் கௌரவத்தை யாமிழக்க மாட்டோமே.

### வேறு

தூய தொண்டினள் தன்னல மற்றவள்
சோர்வி லாதவள் எங்கும் பயன்தர
ஆய பெண்கள் கழகக் கிளைகளை
ஆர்வத் தோடுல கெங்கும் அமைந்தனள்
தாயை யொத்தவ ளாகி மகளிர்தம்
சஞ்ச லங்களை கின்ற பணியுடன்
தேயம் போற்றிட மாதர் அந்தஸ்தையும்
சேர்த்து யர்த்தினள் வாழிய காவேரி.

என்க டன்பணி செய்து கிடப்பதே
என்ற தன்னல மற்ற வுளத்துடன்
பொன்ம னத்தினள் தொண்டு புரிகையில்
பூத லத்தவர் கண்டு வியந்தனர்
அன்னை மேரி திரேசாவை யொத்தவ
ளாய்இ வள்என் வையகத் துள்ளவர்
கன்னி யின்பணி மேலுந் தொடர்ந்திடக்
கவுர வம்பல செய்து மகிழ்ந்தனர்

ஈழ நாட்டுயர் பீடங்கள் யாவும் இவ்
வேந்தி ழைக்குயர் பட்டங்கள் நல்கின
ஆளுங் கட்சி எதிர்க்கட்சி யென்பன
அன்பு டன் வரவேற்று மகிழ்ந்தன
ஏழை மக்கள் துயரம் களைந்திட
ஏதி லார்க்கரும் சேவை புரிந்திட
வாழும் நாளைப் பயனுள தாக்கிய
வனிதை யின்புகழ் வானத்தை வெல்லுமே

(தொடரும்)

# ஒருகொடியின் இருமலர்கள்

## மிருதங்கத்துடன் இணைந்திருந்த ஒரு கலைஞர் வி. வி. காசிநாதர்

எனது இல்லத்தில் ஒரு மிருதங்கம் இருக்கிறது. இதனை இப்போது மிருதங்கம் என்று சொல்வது கொஞ்சமும் பொருத்தமில்லை. இது இப்போது 'மிருதங்கக் கொட்டு' ஆகவே எஞ்சிப்போய் உள்ளது இந்தக் கொட்டு எனது கண்களிற் படுகின்ற சமயங்களில் எல்லாம் இந்தக் கொட்டுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் என் நினைவுக்கு வருகின்றன.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் "மிருதங்கச் சக்கரவர்த்தி" என்னும் சினிமாப் படத்தினைச் சிறுவனான என் மகன் பார்த்தான். அன்றே அவனுக்குப் பிடித்ததொரு பைத்தியம். அந்தச் சினிமாவிலே தோன்றும் நடிகனைப் போல, தானும் மிருதங்கம் அடிக்க வேண்டுமென ஆர்வத்துடன் சதா அவன் துடித்துக் கொண்டிருந்தான். அதற்கு முதலில் ஒரு மிருதங்கம் வேண்டும். நான் என்ன செய்யலாம்? அவனது ஆர்வத்துக்கும் ஆவலுக்கும் மதிப்பளித்து எப்படியும் ஒரு மிருதங்கம் அவனுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டுமென நான் எண்ணிக் கொண்டிருந்த சமயத்தில்தான், ஒரு மிருதங்கக் கலைஞர் எனது வீட்டுக்கு வந்திருந்தார். என்னை நோக்கி என் மகன் விடுத்துக் கொண்டிருந்த வேண்டுகோளை, அவன் மூலமாக அந்தக் கலைஞரை நோக்கி இரகசியமாகத் திசை திருப்பிவிட்டு நான் அமைதியாக இருந்து விட்டேன். இந்தச்சம்பவம் நிகழ்ந்து இரண்டு வாரங்களின் பின்னர், அந்தக் கலைஞர் தானே உருவாக்கிய புதிய ஒரு மிருதங்கத்துடன் எனது இல்லத்துக்கு வருகை தந்து எனது மகன் கையில் அதனைக்கொடுத்து, அவனை அடிக்க வைத்து, தான் அவனுக்கு மிருதங்கம் வாசித்துக் காண்பித்து சிலமணி நேரம் குழந்தையோடு குழந்தையாகக் கலந்து மகிழ்ந்து போனார். அந்தக் கலைஞர் வேறு யாருமல்ல. காங்கேசன்துறை வி. வி காசிநாதன் அவர்கள்.

ஐம்பதுகளில் யாழ்ப்பாணக் குடா நாட்டில் இடம்பெற்ற கொட்டகைக் கூத்துகளிலே இரட்டையர் கோஷ்டி ஒன்று மிகவும் பிரபலியம் பெற்று விளங்கியது. பெரும்பாலும் பிற்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் இடம்பெற்ற கூத்து மேடைகளில் இந்த இரட்டையர்கள் தவறாது பெருமையுடன் தோன்றினார்கள். உள்ளூர் வாசிகள் தாமே உருவாக்கி அரங்கேற்றும் நாடக மேடைகளைச் சிறப்பிப்பதற்காகவும், பார்வையாளர்களைப் பெருமளவு பெருகி வரச் செய்வதற்காகவும் இந்த இரட்டையர்களை விரும்பி அழைத்தார்கள் நாடகங்கள் ஆரம்பமாவதற்கு முன்னரே இந்த இரட்டையர்கள் அரங்கிலே ஏறி, அரங்கினைக் களைகட்டச் செய்தனர் மிருதங்கம காசிநாதனும் ஹார்மோனியம் வைரமுத்துவும்தான் இந்த இரட்டையர். ஹார்மோனியம் வைரமுத்து வேறு யாருமல்ல. நடிகமணி வி வி. வைரமுத்து அவர்களே நடிகமணி வைரமுத்து அவர்கள் அக்காலத்தில் நாடக நடிகராக விளங்கியது மாத்திரமல்லாது, ஹார்மோனியக் கலைஞனாகவும் சிறந்து திகழ்ந்திருக்கிறார் நடிகமணி அவர்களின் தமையனார்தான் மிருதங்கக் கலைஞர் வி வி. காசிநாதன் அவர்கள்.

கலைத்துறை சார்ந்த பேராற்றல் என்பது இவர்கள் இருவருக்கும் குடும்பவழி வந்த ஒரு சொத்து. இவர்களின் தாய் வழிப்பாட்டனார் அக்காலத்தில் நாட்டுக் கூத்துகளுக்கு மிருதங்கம் அடிக்கும் ஒரு கலைஞனாக விளங்கியவர். அத்துடன் மிருதங்கங்களை உருவாக்குவதிலும் வல்லமை படைத்த ஒரு வித்துவானாக அவர் வாழ்ந்தார் அவரது புத்திரன் பண்ணைநாயகம் (காசிநாதன் வைரமுத்து ஆகியோரின் தாய் மாமன்) தகப்பனார் வைரமுத்து அவர்களிடம் மிருதங்கம் கற்று, பின்னர் மதுரை சென்று மிருதங்க வித்துவான் இரத்தினம் அவர்களிடத்தும் கற்றுத் தேறியவர்.

இந்தக் கலைக்குடும்பத்திற் பிறந்த காசிநாதன் அவர்கள், தமது ஒன்பதாவது வயதில் நாடக மேடையில் நடிகனாகத் தோன்றியவர், பின்னர் நடிப்புத் துறையில் அதிக ஈடுபாடு கொள்ளாது — தம்பி வைரமுத்து அவர்களுக்கே அது உரித்துடையது என்று கருதிப் போலும் — மிருதங்கம் வாசிக்கக் கற்கத் தொடங்கினார். பன்னிரண்டாவது வயதில் தமது பாட்டனார் வைரமுத்து அவர்களுடத்தே சிட்சைபெற ஆரம்பித்து பின்னர் மாமனார் பிள்ளைநாயகம் அவர்களிடமும் கற்று ஒரு மிருதங்கக் கலைஞனாக உருவாகினார். சகோதரர் வைரமுத்து அவர்கள் ஹார்மோனியம் வாசித்த காலத்தில் அவருடன் இணைந்து மிருதங்கம் வாசித்து [நூலை வாசித்தல் என் பதனையும் இவ்விடத்தில் நினைவு கூருதல் அவசியம்] வைரமுத்து அவர்கள் நடிப்புத் துறைக்கே முற்று முழுதாக வந்த பின்னர், வைரமுத்து அவர்களின் நாடகங்களுக்குத் தொடர்ந்து மிருதங்கம் வாசிக்கும் கலைஞராகக் காசிநாதன் அவர்கள் திகழ்ந்தார்கள் வைரமுத்து அவர்களின் நாடகங்களுக்கு மாத்திரமல்லாது பெரும்பாலான மரபுவழி நாடக நடிகர்களின் நாடகங்களுக்கெல்லாம் சிறப்பாக மிருதங்கம் வாசித்து வந்திருக்கிறார்கள்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டிலிருந்து திருகோணமலைக்கு

### தெணியான்

வருகை தந்த குழுவினரின் நாடகங்களுக்கு, மிருதங்கம் வாசிப்பதற்கென யாழ்ப்பாணத்திலிருந்து விசேடமாக அழைக்கப் பெற்றவர் காசிநாதன் அவர்கள் என்னும் போது அக்காலத்தில் அவருக்கிருந்து வந்த பெரும்புகழினை இன்று நாம் உணர்ந்து கொள்ளலாம். நாடக நடிகர்களாகவும் வானொலிக் கலைஞர்களாகவும் திகழ்ந்த எம். பி அண்ணாசாமி ஆசிரியர், சகோதரர் வி. வி வைரமுத்து, கே குழந்தைவேல் (ஆசிரியர் கே. தங்கவடிவேல் அவர்களின் தமையனார்) நற்குணம் மார்க்கண்டு ஆகியோரின் வானொலி நிகழ்ச்சிகளுக்கும் மிருதங்கம் வாசித்து வந்திருக்கிறார். பிற்காலத்தில் யாழ்ப்பாணக்குடா நாட்டின் கிராமங்கள் தோறும் மிருதங்கக் கலை வளர்வதற்குக் காலாக இருந்தவர்களுள் காசிநாதன் அவர்கள் பிரதான இடத்தினை வகித்து வந்தார். அவரைக் குருவாகக் கொண்டு மிருதங்கக் கலையைக் கற்றுத் தேறிய பலர் இன்று மக்கள் மத்தியிற் சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

காசிநாதன் அவர்கள் தமது பிற்காலத்தில் மிருதங்கம் வாசிக்கும் கலைப்பணியிலிருந்து சற்றுவிலகி வாழ்ந்தார். இந்த விலகுதலுக்கான காரணம் பொதுவாகக் கலைஞர்களுக்கேற்படும் வாழ்க்கைப் பிரச்சனையே, கலைத்துறையைத் தமது வாழ்க்கைக்கான துறையாகவும் கொண்டு இந்த மண்ணில் வாழ்வது இயலாது என்பது பிரத்தியட்சமான உண்மை. மிருதங்கக் கலைஞர் காசிநாதன் அவர்கள் கலைத்துறையிலிருந்து விலகிப் போய் விடாது புதியதொரு திருப்பத்தினைச் செய்து தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.

தமது பாட்டனார் வழிவந்த தொழிலாக மிருதங்கங்களை உருவாக்கி வழங்கும் தொழிலினை மேற்கொண்டார். பலா, தென்னை போன்ற மரங்களினால் மிருதங்கக் கொட்டுகளைக் கடைந்தெடுத்து, தோலினால் மீட்டுச் செய்து, கேச்சிக் கிட்டத்துடன் சாதத்தை (சோற்றை) அரைத்து சாதம போட்டுச் சிறந்த மிருதங்கங்களை உருவாக்கினார். யாழ்ப்பாணத்துப் பலாமரக் கொட்டுக்களினால் உருவாகும் மிருதங்கங்கள் வாசிப்பதற்குச் சிறந்தவை எனக் கண்டு தமிழ்நாட்டு வித்துவான்களும் விரும்பி வாங்கிச் செல்லும் பேற்றினை காசிநாதன் உருவாக்கிய மிருதங்கங்கள் பெற்றன.

இலங்கை வானொலியில் இன்றும் முழங்குகின்ற மிருதங்கங்கள் பல காசிநாதன் அவர்கள் தமது கரங்களினால் உருவாக்கியவையேயாகும். மிருதங்கங்கள் மாத்திரமன்றி டோலக் டோல்கி, தபேலா போன்றவற்றையும் உருவாக்கும் கலைஞராக காசிநாதன் அவர்கள் திகழ்ந்தார்.

காசிநாதன் அவர்கள் உருவாக்கிய மிருதங்கங்களும் ஏனைய இசைக் கருவிகளும் தொனியிற் சிறந்து விளங்கியமைக்கு அன்னார் மிருதங்கம் வாசிப்பதிற் சிறந்த ஒரு கலைஞராக விளங்கியமையே காரணமெனலாம். காசிநாதன் அவர்களை மிருதங்கக் கலைஞர் என்னும் போது, இங்கு இருவிதமான கலைப் பண்பினை அவதானிக்கலாம். ஒன்று மிருதங்கம் வாசிப்பதில் வல்லமை பெற்றிருந்த கலைஞர் மிருதங்கங்களை உருவாக்குவதில் தொழில்நுட்பம் சார்ந்த வல்லமை பெற்றிருந்த கலைஞர், இத்தகைய இருவல்லமைகளும் ஒருங்கே கைவரப் பெற்ற ஒரு கலைஞரை எம்மிடையே காண்பது அபூர்வம். அந்த அபூர்வக் கலைஞர்தான் வி வி காசிநாதன் அவர்கள்.

காசிநாதன் அவர்களின் 'கொட்டு' இன்று எம்மிடையே இல்லை. அவர் இந்த மண்ணை விட்டு மறைந்து இரண்டு ஆண்டுகள் கழிந்து போய் விட்டன. ஆனால் அன்னார் உருவாக்கிய அந்தக் கொட்டு... எனது இல்லத்தில் இன்றும் இருந்துகொண்டிருக்கும் அந்தக் கொட்டு அதிலிருந்து என்உள்ளத்தில் எழுந்து கொண்டிருக்கும் லயம் அமரரின் கலையுலகப் பரிமாணங்களை நெஞ்சில் மலர்வித்துக் கொண்டிருக்கிறது.

# பெண்ணின் நல்வாழ்வுக்கு பெண் அமைப்பு தேவையே

மங்கையர் மஞ்சரி

ஊரெழு தர்ஷினி

பெண் அமைப்புகளின் முக்கிய நோக்கம் – அடிப்படை இலட்சியம் பெண்களின் உரிமைகளுக்கும், முன்னேற்றத்திற்கும்–அவர்கள் வாழ்வின் மறுமலர்ச்சிக்கும் ஏற்ப, அமைவதே ஆகும். இந்த ரீதியில் ஊர் தோறும் மாதர் சங்கங்களும், வேறு பலபெண் அமைப்புகளும் தோன்றியுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. ஆனால்...இந்த சங்கங்கள் அமைப்புகளின் செயற்பாடுகள் யாவும் எந்தளவில் அமுல்படுத்தப்படுகின்றன என்பது கேள்விக் குறியே.

## ஆண்களுக்கு எதிராகவல்ல

இவ்வாறான அமைப்புகள் பலதரப்பட்ட சமூக முன்னேற்றங்களுக்கும் - பெண் அடக்கு முறைகளுக்கும், சமூகத்தில் அவர்களின் சம அந்தஸ்து நிலைப்பாட்டிற்கு, குரல் கொடுக்கவும், பெண் உரிமைகளுக்கு–வாதாடவும்; செயற்பட்டனவே அன்றி எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆண்களுக்கு எதிராக ஆண் இனவாதத்திற்கு எதிராக செயல்பட்டதேயில்லை. ஆண்களுக்கு எதிராக சர்வபெண் அமைப்பு உருவாகியதாகவும் தெரியவில்லை. அவ்வாறு ஓர் அமைப்பு உருவாகின் அது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதே! ஆனால் அதே சமயம் பெண்களின் மேம்பாட்டிற்கு எதிராக செயற்படும் எந்த ஒரு சக்தியையும் எதிர்த்து குரல் கொடுக்கவும் பெண் அமைப்புக்கள் தயங்கக் கூடாது.

## பாதிப்பே இல்லையா

ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் எதிரிகளல்லர். பாடசாலை தொடங்கி குடும்பம் முதலாய் வேலை ஸ்தலம் வரை ஆணும் பெண்ணும் சேர்ந்தே செயற்படுகின்றனர். இந்த ரீதியில் ஏற்படக் கூடிய போட்டி மனப்பான்மை, ஒருவரை ஒருவர் அடக்கி வெற்றி கொள்ள நினைக்கும், மனப்பான்மை ஒரு சாதாரண மனித உணர்வு. ஆனால் அந்த அடக்கல் முறை ஆண்களிடம் அதீதமாக வளரும் போதும், பெண் என்பவள் என்றும் தன்னால் அடக்கியாளப்பட வேண்டியவள் என்ற நினைப்பு உருப்பெறும் போதுதான் ஆண்களுக்கெதிராக பெண்கள் குரல் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது ஆனால் இந்தக் கோஷத்திற்கு ஓர் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் அதைச் செயற்படுத்துகின்றோம் என்பது தவறாகக் கணிக்கப்பட்ட கருத்து. அது நடைமுறைச் சாத்தியப்படாதகூற்று. தற்போதைய பெண் அமைப்புகள் ஏதாவது ஒன்று,அவ்வாறுசெயற்பட்டதாகவும் இல்லை, அப்படிப்பட்ட அமைப்பு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவும் மாட்டாது, நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவும் மாட்டாது கட்டுரையில் குறிப்பிட்டது போல்...... ஒரு சில தனி மனிதக் கருத்துக்களை வைத்து ஒட்டு மொத்தமாகப் பெண் அமைப்புகளைச் சாடுவது அழகல்ல. இருந்தும்; பார்க்கப் போனால் ஆண்களால் பெண்கள் நசுக்கப்படவில்லையா? கணவனால் வஞ்சிக்கப்பட்டு, தந்தையால் அச்சுறுத்தப்பட்டு, சகோதரனால் பழிக்கப்பட்டு மகனால் கொடுமைப் படுத்தப்பட்ட பெண்களின் கண்ணீர்க் கதைகளை அறியவில்லையா? ஏதோ பெண்கள் எல்லோரும் கணவன், தந்தை, சகோதரர், மகன்களின் அன்போடும், அரவணைப்போடும் இன்ப உலா வருகின்றனரா? பாதிக்கப்பட்ட பெண் தனது கொந்தளிப்பை வெளிக் காட்டாமல், தனக்குள்ளே அடக்கிக் கொள்ளும் இயலாமைகளை எண்ணிப் பாருங்கள் இத்தகைய நிலையில் அவள் எவரது, எந்த ஒரு பெண் அமைப்பின் மூலம் குரல் கொடுத்தாள்? அது 'குடும்பப் பிரச்சனை' என்ற வட்டத்தில் ஒதுங்கிவிடுகின்றது.

## யார் தீர்ப்பது

மேலோட்டமாக ஓர் கண்ணோட்டத்தை படிய விட்டுப் பார்த்தபின்... பெண்களுக்கு என்ன உரிமைகள் வேண்டியிருக்கின்றன..? என்ன பிரச்சனைகள் இவர்களுக்கு இருக்கின்றன...? என்ன இல்லை இப்போது இவர்களுக்கு...? படிப்பில், பட்டத்தில், பதவியில் எல்லாம் முன் நிற்கின்றனர். நன்றாக உடையணிந்து, உல்லாசமாகத் திரிகின்றனரே... இவர்களுக்கு என்ன விடுதலையும், சுதந்திரமும் ? என்னத்திற்கு சம உரிமைகள் ? என்று கேட்பவர்களே... பெண்களின் பிரச்சனைகளை ஊடுருவிப் பாருங்கள் ! மலையகத்துப் பெண்கள் எம்மிடையுள்ள அடிமட்டத்துப் பெண்கள், கல்வியறிவு அற்ற, கூலிவேலை செய்கின்ற, எத்தனையோ பெண்கள்..., பலவித சமூகத்தைச் சார்ந்த, ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட...,பெண்கள்... இவர்களின் பிரச்சனைகள் .. இவர்களின்சேவைகள்....இவற்றை; ஆழமாக... நன்றாக அகலக் கண்களுடன் பாருங்கள் ! இவர்களின் பிரச்சனைகளை யார் தீர்ப்பது ..? ஆண்களா?

## நமக்கு நாமே வழிகாட்டி

எனவே... பெண் அமைப்புகள் மூலம் இத்தகைய பெண்களின் உயர்வையும், முன்னேற்றத்தையும் மனதில் கொண்டு... எமக்கு நாமே... சுபிட்சத்திற்கு வழி காட்டுவதே தவிர'' ஆண்களை வாழ விடுங்கள்'' என்ற கோஷமிட்டு வைத்து- ஆண்களுக்கு அமைப்புக்களை உருவாக்குவதற்கு வழி சமைக்க மாட்டோம்.!!

## உரிமை பெயரளவில்

பெயரளவில் தான் பெண்களுக்கு சமூக உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன அவை நடைமுறைச் சாத்தியங்களாக அளிக்கப்பட்டது மிகக் குறைவு. சமூகத்தின் எந்த நடவடிக்கைகளிலும் பெண் பின் தள்ளப்படுகிறாள் ஆனால் ஆண்களைப் பின் தள்ளி விட்டு...' அவர்களை ஒதுக்கி ஓடச்செய்துவிட்டுதம்உரிமைகளுக்குபோராட பெண் அமைப்புகள் சொல்லிக்கொடுக்கவில்லை ஆண்களோடு சேர்ந்து சம பங்காகத் தமதுசம உரிமைக் கோரிக்கையை முன் வைக்கின்றனர் சிலர் இதை தவறாக கணித்துக் கொண்டு சமைய

[15-ம் பக்கம் பார்க்க]

# விழிப்புலன் வலுவிழந்தோர் சிரித்துவாழ ஓர் அன்பகம்

சகிதேவி கந்தையா

கருநீலப் பட்டிடையின் சலசலப்பில் மனஞ்சிலிர்த்து ஒண்ணித்தில நகை ஏந்தும ஈழ மடநங்கையின் உச்சி நீவி நடுவகிர் எடுத்துப் பாங்குறச் சூட்டிய சுட்டி என மிளிரும் தெல்லி மாநகர் இன்று தொண்டர் வதியும் உறையுளாக மருவுவது மாண்புடைத்து நடுவண் பெரிதாய் குளிர்ச்சியாய் மரகதப்பச்சையாய் இதந்தரும் துர்க்காதேவி திருக்கோவில் சுற்றி வைரமென நிறங்காலும் அவள் அருட்கண பட்டு முகிழ்ந்து மலர்ந்த தொண்டு நிலையங்கள் எனப் பொலிவுற்றுச் சிறக்கிறது இச்சுட்டி. துர்க்காதேவியின் தேவஸ்தானத்திலேயே மகளிர் இல்லம், 63 சிறுமிகள் ஆடிப்பாடிவதிய அமைய, அவள் கடைக்கண் டரப்பில் விழிப்புலவலுவிழந்தோர் வாழ்வகம், சற்று அப்பால் தெ. ப நோ. கூ. சங்கம், இன்னும் எல்லைப்புறத்தில் நிமிந்தோங்கிய பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புற்று நோய் தொண்டகம என எழுந்த டல்வேறு பட்ட தொண்டு அமைப்புக்களில் தனித்து நிற்கும் விழிப்புலன் வலுவிழந்தோர் வாழ்வகம் பளிச்சிடும். இரத்தினக் குணுக்குப்போன்று அசைந்தாடி சுட்டியின் அழகிறகும, கவர்ச்சிக்கும் மெருகு சேர்க்கிறது.

காங்கேசன்துறை யாழ்ப்பாணம் வீதியில் துர்க்காதேவி திருக்கோவிலை அண்டிய தெல்லிப்பழைப் பகுதியில் விழிப்புலனற்றோர் வதிய ஒரு அகமாக தற்காலிய வதிவிடத்தில் அமைந்த வாழ்வகம். உருப்பெற்று 9 மாதங்கள் தான் கடந்தன எனினும் இங்கு வதியும் 12 சிறுவர் சிறுமியர் தெல்லிப்பழையின் பல குடும்பங்களுடன் தமமை அன்பால் பிணைத்துக் கொண்டு அவர்கள் வீட்டுப பிள்ளைகளைப் போல் பெருமையுடன் வாழ்வது சிறப்புப் பண்பு இவ்வாழ்வக அமைப்பின் முதன்மை நோக்கம் விழிப்புல வலுவிழந்தோர் சிறந்த கல்வி நிலையங்கட்குச் சென்று முறையான கல்விநெறியிற் பயின்று, பட்டம் பெற்று வாழ்வில் மற்றையவர்களைப் போல் 'சாதாரணமாக' வாழ இவர்கட்கு ஒரு சந்தர்ப்பத்தை நெறிப்படுத்துவதாகும். இந்த கல்விக் கொள்கையின் அமுலாக்கத்தில் முக்கியதடை இவர்கள் 'பாஷையில்' பயிற்றப்பட்ட ஆசிரியர்களாம் இவர்கள் பேசும் மொழி பலவாறு லும் எழுத்துமூலம் இவர்கட்கும் மற்றையவர்க்கும் உள்ள தொடர்பு மொழி 'பிரெயில் மொழி' ஒன்றுதான் இவர்கள் பிரெயில் தரும் விடைகள் திரும்பச்சாதாரண மொழிக்கு கொண்டுவரப்பட்டால்த்தான் இவர்கள் விடைகள் கணிக்கப்படலாம். இந்த மிகச் சிரமமான ஒரு பணியை மேற்கொண்டு, பயிற்றப்பட்ட ஆசிரியை செல்வி சின்னத்தம்பி என்பவர் பாடசாலை தோறும் சென்று ஆசிரியர்கட்கும் இவர்கட்குமிடையே ஒரு நேசப் பாலமாகி உதவுவதால்தான் இவர்கள் சாதாரண நிலை' பேணப்படுகிறது செல்வி சின்னத்தம்பியின நேரடிக் கண்காணிபபில் (வேறு பயிற்றப்பட்ட ஆசிரியர்வடஇழ் மாகாணத்தில் இல்லை )கல்விபயிலும் ஒரு வாய்ப்பை இவர்கள் முழுமையாகப் பெற்று மேம்பட வேண்டுமெனும் முதன்மை நோக்காற்றான் 'ஒரு வதிவிடம்' இன்றியமையாததாகக் கருதப்பட்டு பல பிரமுகர்கள் முயற்சியால் உருப்பெற்றது. இவ்வகம் முதல் முயற்சியாய் இடநெருக்கடி காரணமாக 12 பிள்ளைகள் மாத்திரம்இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். செல்வி சின்னத்தம்பியும் இவர்களுடன் வாழ்ந்து, தன் முழுநேரத்தையும் இவர்களுக்காக அர்ப்பணித்து இடரினும் 'தளரினும் இவர்கட்கு அன்புக் கரம நீட்டுவதால் இந்த வாழ்வகம் ஒரு வீடாய் இங்கு வதியும் 12 பிள்ளைகளும் ஒருதாய் பிள்ளைகளாய் சிரித்து வாழ முடிகிறது.

இங்கு ..

எந்நேரமும் கேட்டுக் கொண்டிருக்கும் சிரிப்பொலியும் இசையின் நாதமும் ஜீவத் துடிப்புடன் பல்வேறுபட்ட மக்களையும் தம்பால் ஈர்த்து இணைக்கும் தனித்தன்மை வய்ந்தவை. நல்ல விழிபபுலன் உள்ள நாம் பார்ப்பவை பகட்டையும், படோபகாரத்தையும் வளர்த்துக் கொள்வது பொறாமை, வெறுப்பு. இவர்களோ இதயத்தையே விழிகளாக்கி நல்லதை யேபார்ப்பதால் மனித நேயமும், விழுமிய மனச் செறிவும் கொண்டவர்களாய் தம பேசும் இதயங்களால் ஒட்டி உறவாடும் கள்ளமிலாச் சிந்தையர். —ருப்படியான ஐம்புலன்களையும் சிதறடித்து பழுங்கிப் போன நிலையில் வாழ்க்கையையே பெரும் பாரமாக்கி சுமக்கும் மனப்பான்மையில் நொந்த நிலையில் நாம் வாழ. இவர்களோ ஒளியற்ற விழிகளை மூடிக்கொண்டு உள்ளொளி துணைக் கொண்டு மேம்பட்ட சிந்தனைகள், புஷ்டியான மனம், இடுக்கணையும் சிரித்து வரவேற்கும் பண்பு, நிறமைகளை வெளிக் கொணர்ந்து நயம்பட வாழ்வது எனப் பல்வேறு நல்ல அம்சங்களை உள்ளடக்கிய வாழ்க்கை நெறியை மேற்கொண்டு, புதுமணம் பரப்பும் பட்டு ரோஜாக்களைப் போல் பார்த்தோரைக் கவர்ந்து குதூகலிக்கச் செய்யும் சிறப்புப் பெற்றுள்ளனர்.

'பார்த்தவுடன்' அன்புததும்ப வந்தனம் கூறும்போதும், 'என்ன அக்கா, பல நாட்களாக உங்களை எங்கள் வீட்டுக் பக்கம் காணவில்லையென' உரிமையுடன் கண்டிக்கும் போதும், வீட்டிற்கு வருபவர்களைப் பார்த்துப் பார்த்து உபசரிக்கும் போதும், சுருதிபிசகாது தேவாரதிருவாசகங்களை மனம் நெக்குருக ஓதும் போதும், தாமே தயாரித்து மிக நுணுக்கமாக அரங்கேற்றும் நாடகங்களை மற்றவர்கள் பார்த்துப் போற்றும போதும வீட்டிற்கு இவர்களுக்கு பாடநெறியில் உதவ வருவோரைக் காக்கவைக்கக் கூடாதென்று துள்ளி ஓடிவரும் போதும் இவர்கள் காட்டும் அன்பு இருக்கிறதே இதற்கு இணையாக எதையுமே உலகில் எடுத்துரைக்க முடியாது. இவர்கட்கு மிகப்பிடித்தமான பாடல் ''எமக் கென்ன மனக் கவலை எம்தாய்க்கன்றோ தினம் தினம் எம்கவலை'' - உண்மை தான் இவர்கள் கவலையற்றுப் பறந்து திரியும் சிட்டுக்கள் இவர்களைப் பார்த்துக் கொள்ள. துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள, நெற்றியை ஓடும் அவசரத்தில் முட்டிக் கொண்டால் ஓடி வந்து தைலம் தேய்த்து அன்பு காட்ட, சத்து உணவுபடைத்து பார்த்துப் பார்த்து ஊட்ட 'என்ன தான் சாப்பிட்டாலும் உடம்பு நோஞ்சான் தான் என்று கவலைப்பட, கண்டிப்பும் கருருமாக பாடஞ் சொல்லித்தர, தினம் தினம் கவலைப்பட இவர்கட்கு ஒரு தாய் இருக்கிறாளே (செல்வி சின்னத் தம்பி)இவர்கட்கு என்ன மனக் கவலை?

ஒரு நாள் சிந்தை நெகிழ்ந்து இவர்கள் பாடி முடித்ததும் நான் கேட்டேன் ''கோவிலுக்குப், போகிறீர்கள், கும்பிடுகிறீர்கள்' இறைவனிடம் என்ன வரம் கேட்டீர்கள்'' என்று மனதிற்குள் கண் தெரிய வேண்டும் என்று தான் பதில் வரும் என எண்ணினேன். ஆனால் வந்த பதிலோ'' அக்கா, நாட்டிலே சமாதானம் நிலவி எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம். ஒரே குரலில் அன்பாகக் கூறினார்கள். எங்கள் மனந்தான் எவ்வளவு குறுகியது மற்றவருக்காகச் சிந்தித்தால் ஏதோ குறைந்து போய்விடுவோம் என்றல்லவா இருககிறோம்.

எம்மிடம் அன்பைத்தவிர எதையுமே எதிர்பார்க்காத இவர்கடகுக் கொடுக்க எம்மிடம் நிறைய இருக்கிறது எம் நேரத்தில் சில மணித்தியாலங்களை ஒதுக்கி இவர்கள் படிக்க நாங்கள் 'கண்ணாக' இருக்கலாம். ஒரு நல்லநாள் கொண்டாட்டத்தில இவர்களை நினைத்துக் கொண்டு பணம் ஒதுக்கி இவர்கள் அன்றைய தினத்தில் சந்தோஷமாக வாழ வகை செய்யலாம் (ஒருநாள் அறக் கொடை) இன்னும் குவிந்த பொருளும் விரிந்த மனமும்

[15 ஆம் பக்கம் பார்க்க]

# டாக்டர் கு. இராசேந்திரனின் மூன்று நூல்கள்

★ உயிர்க் கதறல்

★ கால், அடி, தாள் சொல் வரலாறு

★ சொல்வழிப் புதைபொருள்

டாக்டர் கு. இராசேந்திரன் அவர்கள் தமது ஆய்வுப் பணியினாலும் கவிதைப் பணியினாலும் தமிழ் மொழிக்குப் பெரும் தொண்டாற்றி வருபவர் அவரது நுண்மாண் நுழை புலத்தை ஆய்வு நூல்களிலும் தேமதுரத் தமிழ் நடையை அவரது கவிதைகளிலும் காணலாம் சிறந்த ஆய்வாளராகவும் அதே நேரத்தில் சிறந்த கவிஞராகவும் விளங்கும தனித்துவம் டாக்டர் கு இராசேந்திரன் அவர்களுக்குச் சொந்தமானது இதனால் தான் தமிழறிஞர் ஔவை துரைசாமியின் புதல்வர் ஔவை நடராஜன் அவர்கள்.

'இனித்தமிழ் இவனால் வளரும் இன்னும்...... ........
நூற்படை யேந்துப் இளவல்
இராசேந்திரன் நாற்றிசை
முழுதும் நற்புகழ் குவிப்பான்'

என உளமுவந்து வாழ்த்துக் கூறுகிறார்.

## உயிர்க்கதறல்

'உள்ளத்தே உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் டாக்டர் கு இராசேந்திரனின் கவிதைகள் அனைத்தும் அவரது உள்ளத்தின் உண்மை ஒளி கொண்டு பிரகாசிக்கின்றன.

தன் கவிதைகள் தரம் வாய்ந்தன என்ற நம்பிக்கை ஒரு கவிஞனுக்கு அவசியம் வேண்டும். கவிஞர் தமது தன்னம்பிக்கையை அவரது முதற்பாடலிலேயே

'என்னையழித்தே எழுதிய பாடல்
என்றென்றைக்கும் நிலை நிற்கும்–அது
எண்ணில் கோடி விலை விற்கும்
தன்னைத் தோண்டித் தங்கமெடுத்துத்
தந்தவையன்றோ என் வரிகள்–அவை
தண்டமிழ் ஏட்டின் பொன் வரிகள்'

என்று கூறுகின்றார்.

இத்தொகுதிக்கு உயிர்க் கதறல் என்னும் பெயர் பொருந்தி இருப்பதை 'கதறல்' என்பது எதிலி நிலையில் தோன்றும் எளிய செயலாசப்படினும் அரிய செயல்கட்கெல்லாம் அதுவே மூலவூற்றாகும். உயிரின் கடைசிக் கையறவு நிலையாகிய கதறல் நிகழும் போதுதான் உயிர் தனது உண்மை நிலையை இனங் கண்டு கொள்கிறது உயிருக்கு உண்மை புலப்பட்டவுடன் அவ்வுண்மையை இறுகப் பிடித்துக் கொண்டு ஊக்கம் பெற்றுக் கொள்கிறது இவ்வாறான நிலையில் பிறக்கும் ஊக்கமே விஸ்வரூபம் எடுத்து வெற்றி கொள்ள வல்லதாகிறது என அவரே விளக்குகிறார்.

'உயிர்க்கதறல் தொகுப்பில் இருக்கும் பாடல்கள் சுட்டும் உணர்வுகள் கற்போரின் நெஞ்சில் ஓர் அசைவை நெகிழ்வைத் தோற்றுவிக்குமாயின் இதற்குக் கதறல் என்று பெயரிட்டது பொருத்தமானதே என்று கருதுவேன்' என்றும் கூறுகின்றார்

சுருக்கமாகவும் அழகாகவும் ஒரு கருத்தைச் சொல்வதில் சாகச் சான்றோர் வல்லமை பெற்றவர்கள் சக்கச் சான்றோர் பாடல்களில் மிக்க ஈடுபாடு கொண்ட இராசேந்திரன் அவர்களுக்கு சுருக்கமாகவும் அழகாகவும் ஒரு கருத்தைச் சொல்லும் கலை கைவந்த கலையாக உள்ளது.

''வாழ்வின் இருண்ட பயணத்திற்கு இறைவன் அறிவு விளக்கைக் கொடுத்துள்ளான். பலர் மிகப்பலர் திரியைக் கறுப்பாக்குவது கூட இல்லை'' என்கிறார்.

தீக்குச்சிகள் என்னும் தலையங்கத்தின் கீழ் வரும் இக் கவிதை வரிகள ஒரு பெரும் தத்துவத்தினைச் சுருக்கமாக அழகாகக் கூறுகின்றன.

எமக்கு வாழ்வைக் கொடுத்த இறைவன் தர்மம் எது அதர்மம் எது என்று நாம் அறியாது நாம் செல்லும் இருண்ட பயணத்தில் அதர்மத்தையும் தர்மத்தையும் பிரித்துணர அறிவு என்னும் விளக்கைக் கொடுத்திருக்கிறான் ஆனால் மனிதனோ பட்டறிவு என்னும் தீக்குச்சியினால் விளக்கைக் கொளுத்தமல் இருளிலேயே பயணம் தொடர்கிறான் எனக் கவிஞர் கதறுகிறார். இவரது உயிர்க் கதறல் எல்லாப் பாடல்களிலுமே ஒலிக்கின்றது.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் என்கிறார் திருவள்ளுவர் ஒருவன் வாழ்வில் பெருமை பெறுவதற்கும் சிறுமை அடைவதற்குப் அவனது செயலே காரணம். ஆனால் நாமோ அவன் என்னைக் கெடுத்தான் இவன் என்னைக் கெடுத்தான் என்று பிறரைக் குறை கூறுவதிலேயே காலத்தைக் கழிக்கின்றோம் உழைப்பால் வருவது உயர்வு என்பதை அறியாதவர்களாக இருக்கிறோம்.

இதனைக் கவிஞர் ''என் உழைப்பின் உயர்வை எவரால் இழுத்து நிறுத்திவிட முடியும் என்னைத்தவிர என்னுள்ளத்தைத் தவிர'' என்று கூறுகின்றார் பெருமைக்கும் ஏனைய சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல் என்ற குறளுக்கு விளக்கம் தருகிறார்.

''இருப்பது என்னிடம் இளம் தமிழ் ஒன்றுதான் ஈடேறிடவது போதுமே'' என்று கூறுகிறார் கவிஞர். கவிஞர் ஈடேறத் தமிழ் போதும் என்பதில் ஐயமில்லை

அவரது உள்ளத்தெழுந்த உயிர்க் கதறல் மக்கள் ஈடேற உதவும்.

வாழ்வியல் தத்துவக் கருத்து மணிகளை வழங்குப இக்கவிதைக் களஞ்சியம் கற்போர்க்கு இன்பமும பயனும் ஒருங்கே தருவது

மரபுக் கவிதையையும் புதுக் கவிதையையும் கொண்டு விளங்கும் இந்நூல் பழைமையையும் புதுமையையும் வரவேற்கிறது

## சொல் வழிப் புதை பொருள்

சொல்லாராய்ச்சி என்பது சுவை மிக்கதும் மொழிக்கு வளம் சேர்ப்பதுமாகும். மறைமலையடிகள், தேவ நேயப் பாவணர் போன்றோர் சொல்லாராய்ச்சியில் ஈடுபட்டு வடமொழிச் சொற்களென்று நாம் கருதிய பலவற்றைத் தனித் தமிழ்ச் சொற்கள் என நிலைநாட்டித் தமிழுக்கு வளம் சேர்த்தனர்.

தமிழ்ச் சொற்களுக்கெல்லாம் மூலங்கண்டுரைக்க வேண்டும் என்ற டாக்டர் கு.இராசேந்திரன் அவர்களின் ஆராவேட்கையால் தோன்றியதே சொல் வழிப் புதை பொருள் என்னும் இந்நூல்.

''எழுத்துத் திரிபுகளோடு ஒவ்வொரு சொல்லிற்கும் மூலங்காண முயல்வதினும், அவ்வச் சொல் இருந்தவறே மூலங்காண முயல்வதே பொருத்தமாகும் என்னும் ஆசிரியரின் கருத்து ஞாயமானதே.

இந்நூலாசிரியர் சொற்பொருளாய்வுத்திறனும் அதே நேரத்தில் இலக்கியப் புலமையும்உடையவராதலால் சொற்பொருளாய்வைச் சுவைபடவும் ஆதாரத்துடனும் செய்துள்ளார்.

வளைவை அடையாகக் கொண்ட சொற்களின் பிறப்பாராய்ச்சியில் ஈடுபட்டு வளைவடைப் பொருள்கள், பெருவளைவுச் சொற்கள், மெல்வளைவுச் சொற்கள், முழுவளைவுச் சொற்கள், அலைவு வளைவுச் சொற்கள், குறுகிய வளைவுச் சொற்கள் என ஆறு தலைப்புக்களில் அவற்றை ஆராய்ந்துள்ளார்.

சந்திரமௌலி

நூலாசிரியரின் சங்க நூற் பயிற்சியையும் ஏனைய தமிழ் நூற்பயிற்சிகளையும இவ்வாய்வினை வசிப்போர் அறிந்து கொள்வர்.

தேவநேயப்பாவாணர் வடக்கு, தெற்கு திசைப் பெயர்கள் பற்றி ஆராயுமிடத்து ''ஒருகாலத்தில் விழுதுகள் மலிந்த ஆலமரங்கள் நிறைந்திருந்த திசையை வடதிசை என்றனர் (வடம் போன்ற விழுதுகளையுடையது ஆலமரம்) எனறும் தென்னை மரங்கள் நிறைந்திருந்த திசை தென் திசை, தென்+கு = தெற்கு எனவும் பெயர்பெற்ற தாய்க்குறித்துள்ளார்.

இந்நூலாசிரியர் கிழக்கு, மேற்கு ஆகிய திசைச் சொற்கள் பற்றி ஆராயும் போது 'தமிழ்நாட்டு நிலவமைப்பில் பெரும்பாலான ஆறுகள் மேற்றிசையிருந்து கீழ்த்திசையை நோக்கியே ஓடும். மேற்கே மலையுப் கிழக்கே கடலும் இருக்கும் இயற்கையமைப்பு நீரோட்டம் இவ்வாறமைவதற்குக் காரணமாகவுள்ளது பழந்தமிழ்ப்புலவர்கள் கதிரவன் கடலில் தோன்றி மலையில் மறைகிறான் என்று பாடும் மரபு இதனால் தோன்றியதாகும்

''குணகடல் இவர்ந்து குருக் கதிர் பரப்பிப் பகல் செழு செல்வன் குடமலைமறைய'' எனவும் 'தோன்ற ஞாயிறு குடமலைமறைய' எனவும் வருவனவும் சங்கப் பேரறிஞர் கற்பனையாகும்.

எனவே கடலுடைய பள்ளமான அஃதாவது கீழான பகுதி கீழ்+கு = கிழக்கு கிழக்கு எனவும் மலையுடைய மேடான அஃதாவது மேலான பகுதி மேல்+கு மேற்கு எனவும் இயல்பாக இவ்விரு திசைகட்கும் தமிழர்கள் பெயரிட்டனர் என்கிறார்.

இதுபோன்ற பலசுவையான சொல்லாய்வுகளைக் கொண்ட சொல்வழிப்புதை பொருள் தமிழார்வம்கொண்டோர்க்குப் பெருவிருந்தாகும்.

## கால், அடி, தாள் சொல் வரலாறு

கால், அடி, தாள் என்னும் இந்நூலில் கால், அடி, தாள் கழல பாதம் ஆகிய ஐந்து சொற்களின் சொற்பொருள் வரலாறு ஆராயப்படுகிறது. விரிவான விளக்கத்தைப் பார்க்கும் போது தமிழின் ஏனைய சொற்களுக்கும் இத்தகைய விளக்கங்கள் ஏற்படின் பெரும் சிறப்பாகும் என்று எண்ணத் தோன்றுகின்றது

''கால், அடி, தாள் என்னும் மூன்று சொற்களுமே தொடக்கத்தில மூலப் பொருளாக விரைந்தியங்கத் துணையாதல் காரணமாக காலுதல் கால் எனவும் உடலின் அடியில் இருப்பது தாழ்ந்திருப்பது ஆகியவற்றின் காரணமாக அடி–தாள் எனவும் குறிக்கப் பெற்று முடிமணியாக முயற்சி, ஒழுக்கம, கொள்கை வலினம் வெற்றி ஆகிய பொருள்களை எய்தின'' என நூலாசிரியர் தமது முன்னுரையிற் குறிப்பிடுகின்றார்.

தேவநேயப்பாவாணர் கால் என்னும சொல்பற்றி ஆராய்கையில் ''கோல்–கால்–கம்பு = தூண், தூண்போல் உடம்பைத் தாங்கும் உறுப்பு'' என்று வரைந்துள்ளார்.

பாவாணரின் கருத்தே அல்லாமல் உடம்பின் முழுப்பகுதியில் கால் கூறளவுள்ளது காலாதலால் இவ்வுறுப்புக் கால் என்று அழைக்கப் பெற்றது என் போரும் உள்ளனர்.

இந்நூலாசிரியர் சங்க இலக்கியத்தைக் கொண்டே கால் என்னும் சொல்லை ஆராய்கிறார்.

சங்க இலக்கியத்தில் மட்டும் கால் என்னும் சொல் ஏறத்தாழ இருபதிற்கும் மேற்பட்ட பொருள்களில் 330–க்கும் மேற்பட்ட இடங்களில் ஆட்சி பெற்றுள்ளது. மனிதர்களின் பாதத்தைக் குறிக்கும் கால் என்னும் சொல்மட்டும் 30 க்கும் மேற்பட்ட இடங்களில் வந்துள்ளது இம்முப்பது இடத்திலேயும் ஆடவர் பாதங்களைக் குறிக்கும் இடங்களே மிகுதியாகும் நான்கிடங்களில் மட்டுமே பெண்ணின் பாதத்தை இக் கால் குறிக்கவந்துள்ளது'' என்கிறார்.

கால் என்னும் உறுப்பைக் குறிக்கும் கால் காலுதல் என்ற வினையடியிலிருந்து பிறந்தது என்று முடிவு செய்யும் இந்நூலாசிரியர் ''காற்றை போலவும் காலத்தைப் போலவும் மனிதனை இயக்கக் காலுகின்றதே பாதம் என்னும் காலாகும் என்கிறார்.

கால் என்னும் சொற்பொருள் பற்றிப் பல கருத்துக்களைக்கூறிய நூலாசிரியர் ''இன்றைய நிலையிலும் இயங்குவதற்கு உதவியக இருப்பது என்ற வகையில் காலுதல் என்னும் மூலத்திலிருந்து பிறந்தகால் அனைவர்களுக்கும் வழங்குவது பொருத்தமுடையதாகும்'' என்கிறார்.

கால் என்னும் சொற்பொருள் வரலாறு போலவே அடி, தாள், கழல், பாதம் ஆகிய சொற்பொருள் வரலாற்றையும் சுவைபட ஆராயும் இவ்வாய்வு நூல் தமிழுக்கு வளம் சேர்ப்பதாகும்

# லிங்கனும் கென்னடியும் அபூர்வ ஒற்றுமை

மறுபிறப்பு இருக்கின்றதோ இல்லையோ; ஆனால் ஒரு சிலரின் வாழ்க்கைச் சம்பவங்கள் ஏற்கனவே இறந்த ஒருவரின் வாழ்க்கைச் சம்பவங்களுடன் அதிசயிக்கத்தக்கவகையில் ஒத்துப்போவது உலக வரலாறு.

சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்க ஜனாதிபதிகளான ஜோன் எப் கென்னடி, ஆபிரகாம் லிங்கன் இருவரினதும் வாழ்க்கை, மரணம் என்பவற்றில் நூறு வருட இடைவெளியில் பல அதிசயிக்கத்தக்க ஒற்றுமைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது

லிங்கன் ஜனாதிபதியானது 1860 இல்; கென்னடி ஜனாதிபதியானது 1960 இல்

இருவரும் தமது பனைவியர் முன்னிலையிலேயே கொல்லப்பட்டனர்

இருவரும் வெள்ளிக்கிழமைகளிலேயேகொல்லப்பட்டனர்.

இருவருக்கும் துப்பாக்கிச் சின்னம் பின்புறத் தலைகளுக்கூடாகவே சென்றது.

லிங்கனைக் கொலை செய்தவனுடைய பெயர் ஜோன் எவ் கென்னடியின் பெயரிலுள்ள ஜோனில் ஆரம்பமாகும் ஜோன் வில்க்ஸ் பூத் ஆகும்; கென்னடியைக் கொலை செய்தவனின் பெயரானது லிங்கனின் பெயரில் உள்ள லீயில் ஆரம்பமாகும் லீ ஒஸ்வால்ட் ஆகும்

ஜோன் வில்க்ஸ்பூத் 1839–ல் பிறந்தான்; லீ ஒஸ்வால்ட் 1939–ல் பிறந்தான்

லிங்கனைப் படமாளிகைக்குள் வைத்துக் கொன்ற பின் கொலையாளி களஞ்சியச் சாலைக்குள் ஒளித்துக் கொண்டான். கென்னடியைக் களஞ்சியச் சாலைக்குள் வைத்துச் சுட்டபின் கொலையாளி படமாளிகைக்குள் ஒளித்துக் கொண்டான்.

இந்த கொலையாளிகளுமே தீர்ப்பு வழங்கப்பட முன் கொல்லப்பட்டனர்

லிங்கனின் அந்தரங்கக் காரியதரிசியின் பெயர் கென்னடி; கென்னடியின் காரியதரிசியின் பெயர்லிங்கன்

இருவரும் மனித உரிமைகளைக் கட்டிக்காக்க அரும்பாடுபட்டவர்கள்.

இவர்கள் இருவரின் மரணத்தின் பின்பும் பதவிக்கு வந்த ஜனாதிபதிகளின் பெயர்கள் ஜோன்சன் ஆகும் லிங்கனுக்குப் பின்பு அன்ரூ ஜோன்சனும், கென்னடிக்குப் பின்பு லின்டன் ஜோன்சனும் ஜனாதிபதியானார்கள்.

அன்ரூ ஜோன்சன் பிறந்தது 1808 ஆம் ஆண்டில் லின்டன் ஜோன்சன் பிறந்தது 1908 ஆம் ஆண்டில்.

★ ரட்ணா

## விலங்குகள் விதம் விதம் 26:

# நாய்மீன்

பெயரைப் பார்த்ததும் நாய் போன்ற மீன் என எடுத்துக் கொள்ளாதீர்கள். இது ஒரு கூட்டமாகச் சென்று இரைகளை நாய்களைப்போல் பிடிப்பதனுல் இப்பெயர் ஏற்பட்டது

இந்த நாய்மீன் சுருமீன் இனத்தைச் சார்ந்தது. பசுபிக் சமுத்திரம், அத்திலாந்திக் சமுததிரம், வட அமெரிக்க கடற்கரைகளில் நாய்மீன்கள் வாழ்கின்றன. இவை சுருக்களைப் போன்ற அமைப்பையே உடையவை. உடலில் செதில்கள் இல்லை வலிமை வாய்ந்த இரு செட்டைகள் உள்ளன உலகில் இரண்டு வகை நாய் மீன்கள் வாழ்கின்றன. அத்திலாந்திக் சமுத்திரத்தில்'மஸ்ட்லெஸ் கனிஸ். இனமும், பசுபிக் சமுத்திரத்தில் கலிபோர்னிகள்' என்ற இனமும் நாய் மீன்களில் உள்ளன

இவற்றில் மஸ்ட்லெஸ் கனிஸ் இனம் 5 அடி நீளமுடையது.

பசுபிக் சமுத்திரத்தில் வாழும் கலிபோர்னிகள் இன நாய்மீன்கள் 2½ அடி நீளமே உடையன.

உலகில் அரிதாகக்காணப்படும் இவற்றை மீனவர்கள் உணவிற்கும் அரசாங்கங்கள் இதிலுள்ள விட்டமின் 'B'க்காகவும். எண்ணெய்க்காகவும் வேட்டையாடுகின்றனர்.

சாம்பல் நிறமுடைய இவை சிறு மீன்களையே உணவாகக் கொள்கின்றன.

- தி. தவபாலன்

## சின்னக் குருவிகள்

காக்காப் பெண்ணுக்கு கலியாணம்
காரில வருகுது பணியாரம்
சோக்காய்த் தின்று மகிழ்ந்திடுவோம்
சுறுக்காய் வாங்கடி தோழியரே

கொக்கரக் கொக்கரக் கோழிகளாம்
கூவியடிக் குது மேளங்களாம்
பக்கப் பாட்டுப் பாடுதற்கு
பாங்காய் குயிலார் வாருராம்

நரியார் கூட்டம் நாதஸ்வரம்
நாவிகள் கூடிப் பன்னீராம்
எலியார் கூட்டம் தோரணமாம்
எருதுகள் பூட்டி ஊர்வலமாம்

சக்கர வாணக் கோவையுடன்
ஒன்றாய்க் கூடி வருகினமாம்
எக்கா ளத்துடன் முயலாரும்
எழிலாய் ஊர்வலம் வருகினமாம்

வண்ண மயில்கள் நாட்டியமாம்
வால் நெடு குரங்கார் சாப்பாடாம்
பொண்ணுக் கணிகலன் பூட்டிவிட
சின்னக் குருவிகள் விதவிதமாம்

ஓடி வாங்கடி தோழிகளே
ஓயிலாய்க் கூடிச் சென்றிடுவோம்
ஆடல்பாடல் எல்லாமே
அற்புத மாமடி பார்த்திடலாம்.

கவிஞர் முல்லைக்கவி

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..............................

வயது: ..............................

பாடசாலையின் பெயர்: ..............................

கல்விகற்கும் வகுப்பு: ..............................

வீட்டு முகவரி: ..............................

கையொப்பம்: ..............................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ..............................

திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)




### குட்டிக்கதை

## மூளை இருந்தால் மீண்டும் வருமா?

அந்தக் காட்டின் சிங்கராசாவுக்குக் கடுமையான சுகவீனம் ஏற்பட்டது. தனது மந்திரியாகிய குள்ள நரியிடம் ஒரு வைத்தியரை அழைத்து வருமாறு பணித்தது நரி, வைத்தியர் ஒட்டகத்தை அழைத்து வந்தது. ஒட்டக வைத்தியர் சிங்கராசாவைப் பரிசோதித்து விட்டு 'கழுதை மூளை சாப்பிடக் குணமாகும்' என்று கூறிச் சென்றது.

சிங்கராசா நரியிடம் கழுதை ஒன்று கொண்டு வருப்படி கூறியது. கழுதையிடம் சென்ற நரி ''மச்சான்! உனக்கு ஒரு யோகம் அடிச்சிருக்கு; எமது சிங்கராசா முதுமை காரணமாக தனது அரச பதவியை வேறு ஒருவருக்குக் கொடுப்பதறகுத் தீர்மானித்து விட்டார்; அதற்கு நீயே தகுதியானவனென்றும் உன்னை உடனே அழைத்து வருமாறும் என்னை அனுப்பி வைத்தார்'' என்றது

நரியின் வார்த்தையை நம்பிய கழுதை நரியுடன் சென்றது கழுதையைக் கண்ட சிங்கம் அதன் மேல் சீறிப் பாய்ந்தது. கழுதை ஓட்டம் பிடித்தது. சிங்கராசா நரியின் மேல் சீற்றங் கொள்ள நரி திரும்பவும் கழுதையிடம் சென்று ''நம்மராசா தனது அரசுரிமையைக் கொடுப்பதென்றால் ஒரு வீரனுக்குத் தானே கொடுப்பார்; அது உன்னிடம் இருக்கிறதா? என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகத்தானே உன் மீது சீறிப்பாய்ந்தார்; இம்முறை நீ என்னுடன் வரும்போது அவர் சீறுவார், விரட்டுவார். நீ எதற்கும் அஞ்சாமல்தைரியமாயிருக்க வேண்டும்; காரியம் வெற்றியாகும்'' என்றது.

ஏமாந்த கழுதை மீண்டும் சென்றது கழுதையைக் கண்டதும் சிங்கம் அதன் மேல் பாய்ந்து கொன்று விட்டு அதன் மண்டையைப் பிளந்தது அப்பொழுது நரி ''அரசே! வைத்தியரின் கூற்றுப்படி நீங்கள் கங்கையில் நீராடி நீறணிந்து ஆசாரமாக வந்து புசிக்க வேண்டும்', என்று கூறியதும் சிங்கம் நீராடச் சென்று விட்டது நீராடி விட்டு வந்த சிங்கம் மண்டையைத் திறந்து பார்த்த போது அதற்குள் மூளையைக் காணவில்லை ''மூளை எங்கே?'' என்று நரியைக் கேட்டது அதற்கு நரி அடக்கமாக ''இது மூளை இல்லாத கழுதை அரசே! மூளை இருந்தால் மீளவும் வருமா?'' என்று கூறியது அதுகேட்ட சிங்கம் அதிர்ச்சியடைந்தது!

அனுப்பியவர்:
மதிநிலா மாணிக்கம்

## தையல் இயந்திர வரலாறு

தையல் இயந்திரம் கண்டுபிடிக்குமுன் நம்மவர் காதில் ஒட்டை போட்ட ஊசியாலேயே தைத்தனர். இதனை ஒரு இயந்திரமாகவே அமைக்க முற்பட்டனர் ரோவே என்ற அமெரிக்கர் ஊசியை யந்திரத்தில் நிரந்தரமாக பொருத்தி விடுதலில் பெரும் சிந்தனைக்குள்ளானார்.

ஒருநாள் அவர் ஒரு கனவு கண்டார் அந்த கனவில் ஆபிரிக்க மாமிச பட்சிகள் அவருக்கு நீ தையல் இயந்திரததை 24 மணி நேரத்தில் கண்டு பிடிக்காவிடில் உன்னை கொன்று தின்று விடுவோம் என்று ஈட்டியை காட்டி பயமுறுத்தின அந்த ஈட்டியின் முனையி ஒட்டை ஒன்று போடப்பட்டிருந்தது

உடனே ரோவே விழித்துக் கொண்டார். ஈட்டி முனையில் ஒட்டை இருப்பது போல் ஊசி செய்து தையல் இயந்திரத்தை அமைத்தார்

ரோவே கால் முடமானவர்.

கு இலட்சுமிகாந்தன்
(அங்கத்தவர் இலக்கம் 91)

## எப்போது?

உலக வங்கி 1945-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

சர்வதேச அபிவிருத்தி வங்கி 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி 1966 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது

ஆசியான் என்ற அமைப்பில் பிறான் என்ற நாடு 1984ஆம் ஆண்டு அங்கத்துவம் பெற்றது.

உலக சுகாதார சபையால் 2000-ம் ஆண்டு சகலருக்கும் சௌக்கியம் என்ற திட்டம் 1985 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது.

இலங்கையில் மகாவலி அபிவிருத்தி திட்டம் 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு பால் பண்ணை அபிவிருத்தி ஏற்படுத்தப்பட்டது.

ம பிரபாகரன்

## சிறந்த வாழ்வு

நமது வாழ்நாள் கணம் கணமாக விரைந்து கொண்டிருக்கிறது இந்தக் கணங்களில நாம் எதைச் செய்கிறோமோ அது நம் ஆரோக்கிய நிலையை நிர்ணயிக்கிறது.

சுற்றுப்புறத் தூய்மை இன்மை புகையிலை, குடிவகை ஆகியன உபயோகித்தல், உடலின் தேவைகளை ஒதுக்கிவிட்டு நாவின் சுவையை நிறைவு செய்தல் ஆகியன நல்வாழ்வுக்கு இடர் விளைப்பன.

நமது உடல் உறுப்புக்கள் எப்படி இயங்குகின்றன என்பதையும் அவற்றை எப்படிப்பாதுகாப்பது என்பதையும் அறிந்திருப்பது அவசியம். சிறந்த முறையில் வாழ்வதற்கான சட்ட திட்டங்களும் நியதிகளும் சிக்கலற்றவை.

## பூந்தோட்டம் அங்கத்தவர்

இலக்கம் 291 பத்மதாசன் பொபிசான்ட்ஸ்
வயது 08. மரியாள் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்

இலக்கம் 292 சிவராசா துஷ்யந்தன்
வயது 12, சாவகச்சேரி இந்துக் கல்லூரி,

இலக்கம் 293 கே. தியாகராசா சிறீதர்
வயது 13. விக்கினேஸ்வரா கல்லூரி, கரவெட்டி

இலக்கம் 294 விவேகானந்தன் பார்த்திபன்
வயது 10. ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்

இலக்கம் 295 மகாலிங்கம் சத்ருக்கன்
வயது 10, புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம். யாழ்ப்பாணம்

இலக்கம் 296 சின்னராசா றமேஸ்வரன்
வயது 11, யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்

இலக்கம் 297 இன்பரூபி இரத்தினம்
வயது 11, வீமன்காமம் மகா வித்தியாலயம், தெல்லிப்பழை

இலக்கம் 298 துஷ்யந்தி கந்தசாமி
வயது 12, சாவகச்சேரி இந்துக் கல்லூரி,

இலக்கம் 299 ஏகாம்பரன் காந்தயுபன்
வயது 09. சென்ற்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்

இலக்கம் 300 சொக்கலிங்கம் அனுசுயா
வயது 07 கறுக்காய்த்தீவு அ.த.க. பாடசாலை, பூநகரி

## தமிழைப் பிழை . . .

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

'மேற்கு திசையிலே சென்றான்' என எழுதினால் மேற்கும் திசையுமாகிய ஈரிடங்களுக்கும் (இவை ஒன்றல்ல வெவ்வேறு என்ற வி.ரீதமான பொருள் ஏற்படுகின்றது) சென்றான் எனப் பொருள்ஏற்பட்டுவிடும்.

'கடையவனேனை' என்ற சொற்றொடரைக் கடையவனே எனை என்று பிரித்துப் படிப்போர் கடையவனாகிய எல்லை என்ற கருத்திற்குப் பதிலாகத்தாம் வழிபடுகின்ற இறைவனையே 'கடையவனே!'? என்று விளிக்கும் பாவத்திற்உள்ளாகின்றனர்.

ஆடு கால் என்பதும் ஆட்டுக்கால் என்பதும் வெவ்வேறு பொருளுடையன.

ஆடுகால ஆடுங்கால். கிணற்றுத் துலாவோடு தொடர்புடைய மரம்.

ஆட்டுக்கால் என்பது ஆட்டினது கால் எனப்பொருள்படும் 'ஆடுகால்' உண்டேன் என்றெழுதினால் அது தரக்கூடிய பொருள் வேறுபாட்டினை நோக்குங்கள். எனவே தேவையையும் கருத்தையும் நோக்கி சொற்களிடையே புணர்ச்சி விதியைக் கையாளுதல் தவிர்க்கவியலாதது

சில சந்தர்ப்பங்களில் நாம் சொல்வது ஒன்றாயும் எழுதுவது ஒன்றாயும் அமையும் விபரீதமும் நிகழ்கின்றது.

உ-ம்: வீட்டுக்குப் போனான் என்று சொல்லுவோம் எழுதும்போதோ 'வீட்டுக்கு போனான்' என்று எழுதுவோம். பின்பு இதனை வாசிக்கும் போது தமிழ் தெரியாதவரைப் போலப்-பிறமொழியினரைப் போல- அச்சொற்றொடரை வாசிக்க வேண்டிய இடர்ப்பாடு உண்டாகின்றது.

தமிழ்மொழிக்கென்று சிறப்பான ஓசை உள்ளது அடிப்படையாக சில புணர்ச்சிகளை அறியாது அவற்றைப் புணர்த்தாது எழுதியும் வாசித்தும் வந்தால் எம்மையறியாமலே தமிழின் சிறப்போசைத் திறத்தினை நாம் அழித்துவிடுகின்றோம் என்பதுதான் பொருள்.

உ-ம்: பாழ்ங்கிணறு — பாண்கிணறு ஆகின்றது
தைத்திங்கள் — தைதிங்கள் ஆகின்றது
பூங்கொடி — பூக்கொடி ஆகின்றது
தேடிக்கண்டான் — தேடிகண்டான் ஆகின்றது
உண்டாற்கொடுப்பேன்—உண்டால் கொடுப்பேன் என்கின்றது

(லகர ஒற்று நிலைமொழியீற்றிலே வந்து வருமொழித் தொடக்கத்தில் வல்லினம் வந்தால் லகர ஒற்று றகர ஒறரும்)

உ ம்:தன்னால்+ கெட்டான் = தன்னாற் கெட்டான்.

இதனை தன்னால் கெட்டான் என்றோ தன்னால்க் கெட்டான் என்றோ எழுதாது தன்னாலே கெட்டான் என்று எழுதினால் ஏகாரச் சாரியை அமைந்து பிழை நேராது கடினமான புணர்ச்சிகள் வருமிடங்களிலே வேண்டிய இடததிலே சாரியை சேர்த்து வழங்குவதன் மூலம் பிழையினின்று தவிரலாம்.

## சர்ச்சைக்குரிய . . .

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

செவ்வாயில் ஆய்வு நடத்த சந்திரனில் இறங்கிய கலங்கள் போன்ற கலங்களே இறங்க வேண்டும்.

செவ்வாய்க்கு டைமோஸ், போபேஸ் என்ற இரு நிலவுகள் உண்டு. அவற்றில் போபோஸில் ஆய்வை நடாத்தவே ரஸ்யா போபோஸ் 1 – கலத்தை அனுப்பியது. இது போபாஸ் சந்திரனில் ஆய்வை நடத்த ரேடார் சமிக்ஞைகளை உருவாக்கும் பலூன்களை இறக்கும் பலூன்களே கிரகத்தை மிக அண்மித்து பல நூறு மைல் பரப்பை தெளிவாக படம் பிடித்து அனுப்பும் தகவு கொண்டவை. அத்துடன் ரோபோட்கள் கொண்ட கலமும போபோஸில் இறங்கி ஆய்வை நடத்தும். இந்த ரோபோட் கலம் தரை இறங்கிவிட்டது ஆனால் பூமியுடனான தொடர்பு தற்போது துண்டிக்கப்பட்டு விட்டது

இந்தபயணம் வெற்றி பெற்றால் அடுத்து செவ்வாய்க்கு மனிதனே செல்வான் அப்படிச் செல்லும் விண்ணாய்வு வீரர்கள் ரஷ்யர்களாக மட்டும் இருக்க மாட்டார்கள். சர்வதேச விண்ணாய்வுக் குழுவாகவே இருக்கும'' என்று தன்கருத்தை வலெறிபர்சுகோவ் கூறினர்

---

ழ்,ய்,ர் ஆகியனசொல்லிடையில் வந்தால் மேலும் ஓர் ஒற்றெழுத்துத் தொடர்ந்து வரல் வேண்டுய என்பது விதி.

உ-ம்: வாழ்த்து,காய்ச்சல், பார்த்தான்,

இவ்விதியினைத் தெரியாதார் யாழ்பாணம், காய்சல் பார்தான் எனறே எழுதுதர்.

இவற்றையெல்லாம் நோக்கும் பொழுது,சொல் சொற்றொடர்களின் புணர்ச்சி விதிகளை ஓரளவாவது அறிந்திருப்பதன் கட்டாயத்தினை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

புணர்ச்சி விதிகளை அறிந்து கையாள்வதால் ஏற்படக்கூடிய நன்மைகள்:

1 கருதிய கருத்தைப் பிழையின்றி வெளிப்படுத்தலாம்.

2. தமிழுக்கேயுரிய சிறப்போசைகளை உணர்ந்து அவற்றை நன்முறையிலே கையாளலாம்.

3. நாம் எதைக் கருதிக் கொண்டு எழுதுகிறோமோ அதே கருத்தினை வாசிப்பவரும் பெறவாய்ப்புண்டு.

(அடுத்தவாரம் முடியும்)

மீண்டும்

**குமரன்**

(கலை, இலக்கிய மாத இதழ்)

இதழ் 65 எங்கும் விற்பனையாகிறது.

ரூபா 3 /-

201, டாம் வீதி
கொழும்பு 12

04424

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

### 30-04-1989—06-05-1989

**மேடம்:** தொழில் மாற்றம், இனப்பகை, பெரியோர் ஆதரவு, இராஜ பயம், வாகன நட்டம், தூரத்து செய்தியால் நன்மை, சகோதரரால் உதவி, கடற்றொழிலாளர், வணிகர்கள் லாபம்.

**இடபம்:** பிதா வழி சுகம், தடைப்பட்ட காரியம் நிவர்த்தி, வாகன சுகம், மாமன் வழியுதவி, இலட்சுமி கடாட்சம், புத்திரர் சுகம், புகழ்தேடி வரும, திடீர் பயணம்.

**மிதுனம்:** பிரயாணம்தடை, இராஜபயம், பொருள் நட்டம், மங்கள காரியத் தடை, வாகன மாற்றம், பெரியோரால் உதவி, உத்தியோக இடமாற்றம், தடைப்பட்ட பணம் கிடைக்கும், புதுத் தொழில்.

**கடகம்:** களஸ்திர சுகம், காதலர் மகிழ்ச்சி, தடைப்பட்ட தொழில் கிடைக்கும், கல்வியால் நன்மை, வாகன சுகம், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்த காதலர் ஒன்று சேரல்.

**சிங்கம்:** சத்துரு பயம், தெய்வ வழிபாடு, தேகசுகம், வெளியூர் பயணம், தேடியவர் வருகை, வாகன மாற்றம், பணப்புழக்கம், இளைய சகோதரர் வழியுதவி.

**கன்னி:** உயர்பதவி,இராஜ மரியாதை, பணப் புழக்கம், எண்ணியது நடக்கும், வணிகர் கடற்றொழிலளர் லாபம், மனையலங்காரம், விருந்துபசாரம்.

**துலாம்:** திருடர் பயம், வாகன நட்டம், சகோதரர் வழி பகை, மாதாவழியுதவி, எண்ணியது நடக்காது, பெரியோர் ஆதரவு, தூரத்துச் செய்தியால் நன்மை, புதிய தொழில்,வணிகர்கள் லாபம்.

**விருச்சிகம்:** மனமகிழ்ச்சி, பிரயாண நிறைவு, வாகன சுகம், மங்கள காரியம் நிச்சயம், தடைப்பட்ட பணம் கிடைக்கும், மாமன்வழியுதவி, பெரியோர் ஆசி, தேககசுகம், இளைய சகோதரர் வழியுதவி.

**தனுசு:** வாகன நட்டம், எண்ணியது நடக்காது, தூரப்பயணம், மாமன் வழியுதவி, பூமியால் நன்மை, தூரத்துச் செய்தியால் நன்மை, வணிகர்கள், இயந்திர தொழில் செய்வோர் நன்மை.

**மகரம்:** மாமன் வழியுதவி, புத்திரரால் மகிழ்ச்சி. ஆபரண சேர்க்கை, புதிய தொழில், மங்கள காரியம் நிச்சயம் இலட்சுமி கடாட்சம், பெரியோர் ஆசி, புகழ்தேடி வரும்

**கும்பம்:** திடீர் பயணம், பண வரவு, மூத்த சகோதரர் வழியுதவி, பெரியோரால் நன்மை, வாகன சுகம், கடற்றொழிலாளர், வணிகர்கள் லாபம், கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

**மீனம்:** வெளியூர் போனவர் வரவு, தடைப்பட்ட விவாகம் நடைபெறும், கல்வியால் தொழில், காதலர் மகிழ்ச்சி, வணிகர்கள் மகிழ்ச்சி, பெரியோர் உதவி.

## காலங்கள் . . .

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

அன்று பௌர்ணிமை- போயா விடுமுறை தினம். நீர்ப்பாசன திணைக்களத்தைச் சேர்ந்த எஞ்சினியர், கமத்தொழிற் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் காணி அபிவிருத்தி உயர் அதிகாரிகள் சிலர் ரகுவின் விடுதியில் கூடியிருந்தனர். அவர்கள் வந்திருந்த ஜீப் வண்டிகளும், மோட்டார் பைசிக்கிள்களும் அங்கே நிறைந்து காணப்பட்டன.

பதிய உணவை முடித்துக் கொண்டு சீட்டாட்டத்திலீடுபட்டிருந்தனர் சிலர் ஊர்நிலவரங்களையும், உத்தியோக விடயங்களையும் அலசிக் கொண்டிருந்தனர் சிலர் அவர்களெல்லாம் உத்தியோக ரீதியில் ரகுவரனுடன் இணைந்து கொண்ட புதிய இளம் நண்பர்கள் ரகுவும் அவர்களோடு சந்தோஷமாக உரையாடிக் கொண்டிருந்த போது அவசரமாக சைக்கிளில் வந்து இறங்கினான் சொக்கலிங்கம்.

அவன் வந்த வேகமும், அவன் நின்ற தோரணையும் உள்ளேயிருப்பவர்களைப் பார்த்ததும் அடங்கிப்போய் விட்டது. வெளிவாசலில் தயங்கியபடியே நின்றிருந்தான்.

''வாருங்கள் மிஸ்டர் சொக்கலிங்கம்'' என்று அன்புடன் அழைத்தான் ரகு.

''சார் ஒரு முக்கிய விடயம்''என்று இரகசியமாக அவனுக்கு மட்டுமே கேட்கும்படி கூறினான் சொக்கலிங்கம்.

அப்படியா? இதோ ஒரு நிமிடம்'' என்று கூறியவன் அங்கேயிருந்த ஒரு இளைஞனை அழைத்துக்கொண்டு ஜீப்வண்டியில் ஏறினான்.

(வளரும்)

## வெள்ளோட்டம் எப்படி வந்தது?

புதிதாகச் சோதனை ஓட்டம் விடப்படும் கப்பல்களில் அவை சுமக்கும் நிறைக்குச் சமமாகத் தண்ணீர் நிரப்பிய பிறகே அதைக்கடலில் ஓட விடுவார்கள். இதனால் தான் கப்பல்களின் சோதனை ஓட்டத்தை வெள்ளோட்டம் என்று சொல்லத் தொடங்கினர்

காலப் போக்கில் புதிதாகச் சோதனை ஓட்டம் விடப்படும் அனைத்துக்கும் வெள்ளோட்டம் என்ற செல் வழக்கில் வந்துவிட்டது.

எமது நிறுவனத்தில் பலவிதமான திருமண அழைப்பிதழ் அட்டைகள், புதுமனை புகுவிழா அழைப்பிதழ் அட்டைகள், விருந்துபசார அழைப்பிதழ் அட்டைகள், அறிமுக அட்டைகள அடிக்கும் அட்டைகள், பிறந்த தின மற்றும் சுபதின அழைபபிதழ் அடிக்கும் அட்டைகள், இறக்குமதி செய்யப்பட்ட காகிதாதிகள், எழுது கருவிகள், மின்சார உபகரணங்கள், அச்சகங்களுக்குத் தேவையான வர்ணத் தீந்தைகள், மற்றும் இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனததில் உற்பததி செய்யபபடும் சகலவிதமான கடதாசி வகைகள மட்டை வகைகள் அன்பளிப்புப் பொருட்கள் யாவும் பெற்றுக்கொள்ளலாம்.

**அம்பலவாணர் அன் சன்ஸ்**

(இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்)

196, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

04387

**ஆங்கிலம் பேச வேண்டுமா?**

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நாமும் ஆங்கிலம் சரளமாக கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள் எளிய அஞ்சல் வழிப்பயிற்சி தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து**

- தபால் மூலம் ஆங்கிலம் கற்று ஒருபோதும் கதைக்க முடியாது என சிலர் சொல்ல கேட்டிருக்கின்றேன். ஆனால் உங்களின் உளவியல் ரீதியில் அமைந்த பாடங்கள் எனது இலட்சியத்தை அடையவும், பய உணர்வையும் அகற்றி விட்டது.
  செல்வி பாத்திமா சனிமா
  எலுவில, பாணந்துறை
- தங்களின் ஆங்கில கல்வி விருத்தி யாழ். மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. நானும் உங்களின் பலாபலன்களை பெற்ற மாணவியரில் ஒருவர்.
  செல்வி பிரேமாவதி செல்லையா
  உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
- இப்போது எனக்கு ஆங்கிலம் பேச முடியும் எனும் மனத்திடத்தை உங்கள் தபால் மூலம் கல்வி ஏற்படுத்தியுள்ளது.
  செல்வி நிர்மலா தங்கவேலு
  அப்புத்தளை.
- ஆங்கிலத்தை இலகுவாக மாணவர்களின் தராதரத்திற்கேற்ப ஆரம்பத்தில் இருந்து தபாலில் கற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த திட்டம் உங்களுடையதே.
  செல்வன் எஸ். எம் ராசா
  ஏழாலை வடக்கு, ஏழாலை.
- பிரைட் றெயினிங் சென்ரரின் ஆங்கில பாடப் பயிற்சி மூலம் நான் நல்ல பயன் அடைந்துள்ளேன்.
  செல்வன் ரி கேதீஸ்வரன்
  457, கே.கே.எஸ். றோட்,கோண்டாவில்.
- குறுகிய காலத்துக்குள்ளே ஆங்கிலக்கல்வியை திறம்படக் கற்றுக்கொடுக்க உங்களின் பிறைட் றெயினிங் சென்ரரால் தான் முடியும்
  செல்வன் ச செல்வகுணச்சந்திரன்
  ஓடைக்கரை, பருத்தித்துறை.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
P. O BOX 162
COLOMBO.

04386

பத்மநாபாவின் மேதின செய்தி

# சாதி, மத, பேதமற்ற சமத்துவ மக்கள் குடியரசு மலரட்டும்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க. பத்மநாபா அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுக்கும் மேதினச் செய்தியின் விபரம் வருமாறு-:

கடந்த பல தசாப்தங்களாக அகிம்சாவழியிலும், ஆயுதப்போராட்ட வழியிலும் எமது இனவிடுதலைக்காகப் போராடி வந்த ஈழமக்களுக்கு வரும் மேதினம் பல்வேறு வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தமிழினம் தன்னைத்தானே ஆளும் உரிமையை வடக்குக் கிழக்கு மாகாண அரசுமூலம் பெற்றுக்கொண்டுள்ளது. முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இடையூறுகள் இருந்தபோதிலும் சட்டரீதியாக தமிழ்மொழி, சிங்களமொழியைப் போன்றே இன்று அரசகரும மொழியாக்கப்பட்டுள்ளது. மலையகப் பாட்டாளிகளின் பறிக்கப்பட்ட அரசியலுரிமையை அதாவது பிரஜா உரிமை, வாக்குரிமை என்பவற்றை மீளப்பெறுவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் ஈழவிடுதலைப் போராட்டப் பாதையில் ஒரு திருப்புமுனையாகும்.

மலையகப் பாட்டாளிகளும், ஈழத்தொழிலாளர்களும் தமக்குக் கிடைத்துள்ள அரசியல் அதிகாரத்தையும் அரசியல் உரிமையையும் மேலும் வலுப்படுத்த வேண்டும். சிங்கள பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட திட்டமிட்ட சிங்களக்குடியேற்றம், தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கையும், கிழக்கையும் பிரிக்கும் சூழ்ச்சிகள், இனங்களை மோதவிட்டும் சதிமுயற்சிகள் என்பவற்றை முறியடித்து எமது அதிகாரத்தை மேலும் பலப்படுத்த இந்த மேதினத்தில் நாம் சபதம் எடுக்க வேண்டும்.

மாகாண அரசு,மக்கள் அரசாக மாறி தொழிலாளர் விவசாயிகளின் சட்டரீதியான சம்பளம், லீவு வசதி, நிரந்தர வேலை, எட்டுமணி நேர வேலை, தொழில் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு உத்தரவாதம் வழங்குவதுடன், நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம், வீடற்றவர்களுக்கு வீடு, தொழில் இல்லாதவர்களுக்கு தொழில் என்பன வழங்க வேண்டும். கடல் தொழிலாளர்களின் நலன் பேண ஏற்ற வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

இம் மேதினத்தில் மாகாண அரசைப் பலப்படுத்துவோம், மாகாண அரசு தொழிலாளர் விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற பதாகையை உயர்த்திப் பிடிப்போம்.

வடக்கு கிழக்கு மாகாண அரசினூடாக சுதந்திரம்,ஜனநாயகம்,சமாதானம் என்ற மக்களின் அபிலாசைகளை உயர்த்திப் பிடித்து, நாட்டில் நவகாலனித்துவ, நவபாஸிஸ அமைப்பைத் தகர்த்தெறிந்து மக்கள் ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல இம் மேதினத்தில் அனைத்து உழைக்கும் மக்களும் உறுதி பூண வேண்டும்.

இம் மேதினத்தில் அனைத்து சோஸலிச நாட்டு மக்களுக்கும் தமது விடுதலைக்கும், சுதந்திரத்திற்குமாகப் போராடும் மக்களுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தோழமை கலந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

சாதி, மத பேதமற்ற, சமத்துவ ஜனநாயகக் குடியரசு மலரட்டும். அணு ஆயுதமற்ற, யுத்தமற்ற, ஆயுதப் போட்டியற்ற உலகநோக்கு வெற்றி பெறட்டும், தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச தினமான மேதினத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துடன் இணைந்து "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்னும் கோஷத்தின் பின்னால் அணிதிரண்டு தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளுக்காகப் போராடுவோம்.


12-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 • 07 • 1950

உதிர்வு 01 • 05 • 1977



குமரையா தேவராஜன்
(Asst. Marketing Officer)

அன்பிற்குப் பொருள் தந்த என் அருமை மங்களா
என் உதிரத்தில் உதித்தெழுந்த நித்திலத் திலகங்களே,
என்னை மண்ணிலே மாண்புபெற வைத்த மகா சக்தி
அன்னை, அப்பாவே
கண் நிகர்ந்த என் கள்ளமிலா உடன் பிறப்புகளே
என் துணை ஈந்த மாமியே மானே மாசற்ற மைத்துனர்
மைத்துனிமார்களே

என் பிரிவால் வாடிவிட்டீர்கள் நானறி
துன்பமே வேண்டாம் துயரமே போக
என்றும் இருக்கிறேன் இறைவன் அரவணைப்பில்
என் இதயமே ஈர்த்திருக்கும் என்றென்றும் உங்கள்பால்

அன்புருவின் அழகுமடல் ஆர்வமுடன் ஏற்று ஆறுத்
துயரத்தின்
அரைவாசியாயினும் அகன்றிடுமே என்றெண்ணிச்
செலுத்துகிறோம் எங்கள் செவ்வானக் கதிர்மீது
தொலுவிருக்க எம் கண்ணீர் அஞ்சலியை எஞ்ஞான்றும்

மனைவி மங்களா,
புதல்வர்கள். மன் சசி,
அன்னை,அப்பா, உடன்பிறப்புகள்.
செயலகம், யாழ்ப்பாணம்

04466


## ஆசிரியர் மாணவ...

(3ஆம் பக்கத் தொடர்)

க்கூடியதாக அவரின் நடத்தை அமைந்திருத்தல் வேண்டும்.

மாணவன் ஆசிரியர் பற்றி மனதில் பதியவைக்கும் முதல் அபிப்பிராயமே இறுதிவரை நிலைத்து நிற்கக் கூடியது எனவே வகுப்பறையில் முதல் சந்திப்பினை ஆசிரியர் மிக மிகக் கவனமாக மேற்கொள்ளல் வேண்டும்.

மாணவன் பாடத்தில் நிபுணத்துவம் உள்ள ஆசிரியரை உண்மையில் மதிக்கிறான் ஆயினும்பரவலாகத்தேர்ச்சிபெற்ற நிபுணரையே அதி சிறப்பாக மதிக்கிறான் என்பது கண்கூடு.

கல்வி முறையில் மாணவன் ஒரு முக்கிய உறுப்பு என்பதை அவனுக்கு உணர வைத்தல் வேண்டும் அத்துடன் அவனும் இம்முறையினில் பங்குபற்றல் வேண்டும். வகுப்பினில் அவன் ஆசிரியருடன் இணைந்து சிந்தித்தல் வேண்டும். உங்கள் சிந்தனையின் ஒவ்வொரு படியிலும் அவனது சிந்தனையும் ஒன்றிக்கலத்தல் வேண்டும்.

மாணவர்களின் கிரகித்தலை ஊக்குவிக்கும் பல்வேறு ஏற்ற கருவிகளைக் கையாள்வதுடன் வெகுமதிகளையும், தண்டனைகளையும், புகழ்ச்சிகளையும் வெஞ்சொற்களையும் பிரயோகிக்க மறக்கக் கூடாது. மாணவரின் சிந்தனைத் திறனை என்றும் ஊக்குவித்துப் பாராட்டுவதில் தவறிவிடக் கூடாது.

கற்பித்தலின் குறிக்கோள் என்ன என்பது பற்றி, மாணவனுக்கும் ஆசிரியனுக்கும் தெளிவாக இருத்தல் வேண்டும், அல்லாமலும் அவற்றைத் தெளிவாக எடுத்துக் கூறுதலும் வேண்டும்.

வீட்டில் ஒரு விருந்தாளியை எவ்வாறு நடாத்துவமோ அவ்வாறே வகுப்பறையிலும் மாணவனை நடாத்துதல்வேண்டும். வகுப்பறையில்ஒரு மாணவனை மரியாதையீனமாக நடாத்தினால் அதுவொன்றே போதும், முழுவகுப்புச் சூழலிலும் பாரதூரமான விளைவுகளைத் தோற்றுவிப்பதற்கு

இன்னும் ஆசிரியர் ஒவ்வொரு மாணவனைப்பற்றியும் இயன்றவரை அறிந்திருத்தல் வேண்டும் குறைந்தது அவன் பெயரையும் ஊரையுமாதல் அறிந்திருத்தல் வேண்டும். மாணவனைப் பற்றிய விபரங்களை அல்லது தகவல்களை எந்தளவிற்கு தெரிந்திருக்கின்றோமோ அந்தளவிற்கு அவனை உயர்த்த அவை வழிகாட்டியாக அமையும். அவனும் தன் வாழ்க்கையில் குறிக்கோள்களையும், இலட்சியங்களையும் கொண்ட ஒருவன் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். அவன் எங்கிருந்தோ வந்தவன் உங்கள் உதவியுடன் வேறெங்கோ செல்லப் போகிறான் எனவே அவனை நல்வழிப்படுத்தல் ஆசிரியரின் கடமையாகும்.

## பெண்ணின் . . .

[11-ம் பக்கத் தொடர்]

லிலும்- வீட்டு நிர்வாகத்திலும் சம பங்கு கேட்கும்போதுதான் பிரச்சனைகளே உருவாகின்றன. வீணே பெண் அமைப்புகள் மேல் பழிகள் சுமத்தப்படுகின்றன

கட்டுரையில் குறிப்பிட்டது போல்... "ஆண்கள் எம்மை நசுக்குகின்றனர். அவர்களுடன் தொடர்ந்து வாழ முடியாது .." என்ற முரண்பட்ட கருத்துக்களை எச்சந்தர்ப்பத்திலும் பெண் அமைப்போ- அமைப்பாளர்களோ கூறியிருக்க முடியாது ஏனெனில் பெண் அமைப்போ-அல்லது வேறு எந்த அமைப்புமோ தனிப்பட்ட கருத்துக்களுடன் இயங்குவதில்லை அத்தோடு ஆண்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு தனியாக "அல்லிராஜ்யம்' நடத்தவேண்டும் என்ற நோக்கோடு எந்தப் பெண் அமைப்புகளும் தோன்றவில்லை அக் கருத்துக்கள் தனிநபர் கருத்துக்களாக இருக்கலாம்-பெண் அமைப்புகளின் அடிநாதம் அல்ல அவை!

### யார் பொம்மையாக?

"ஆண்களை வீட்டின் பொம்மைகளாகவும் குழந்தைகளைப் பெறத் தந்தைகளாகவும் .. கொண்ட நிலை உருவாக்க ஓர் அமைப்பா...? நல்லதொரு கற்பனை சொற்தொடர்." (பிள்ளைகள் பெறும் இயந்திரங்களாவும் விளையாட்டுப் பொம்மைகளாகவும் பெண்களை நினைத்திருப்பது ஆண்கள் அல்லவா?) கணவனுக்கு எதிராக ஆயுதம் ஏந்தவே! அல்லது ஆண்களை விளையாட்டு பொம்மைகளாக மேற்கூறிய வகையில் ஏதாவது பெண் அமைப்பு தூண்டியிருக்குமாயின்-அவ்வமைப்பை தயங்காது முன் நிறுத்துங்கள்! அவற்றை இனங்காட்டுங்கள்?

சமூகத்தை சீரழிக்கும் எந்த ஒரு மேடைப்பேச்சும் தவறானதே ஆனால் புத்திஜீவிகளும் ஆய்வாளர்களும் கூடும் கல்வி ஸ்தனத்தில் தவறான கருத்துக்களை எடுத்து சீரழியக் கூடிய 'சின்ன' (பெண்) குழந்தைகள் இருக்க மாட்டார்கள்' இருந்தாலும் அவர்கள் சிந்திக்கத் தெரிந்தவர்களே ! நல்லதும்-கெட்டதையும் உணரத்தெரிந்துகொண்டு உங்கள் ஆளுமையை-தனித்துவத்தை நிலைநிறுத்தத் தெரிந்த நீங்கள் மற்றவர்களின் வெறும் மேடைப் பேச்சுகளுக்கு செவி சாய்க்க வேண்டிய தேவையில்லை

சமூகம் நிலைநிறுத்தும் எந்த பாதிப்புக்கும் இருகரப்பினரும் காரணம்! சீதனப் பிரச்சனை தொட்டு .. இன்னும் பல சமூக வக்கிரங்களுக்கு இரு பாலாரும் ஒவ்வொரு வகையில் காரணமாகின்றனர் பெண்ணிற்கு பெண்ணே எதிரி என்ற நிலை இருப்பதும் உண்மையே!

சமூகத்தைச் சீரழிக்கும் விதத்திலே-கணவனுக்கு எதிராக ஆயுதம் ஏந்தவோ-தவறான பிரசாரங்களால் பெண்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்வோ-அவர்களிடையே தவறான கருத்துக்களை விதைக்கவோ நிச்சயமாக எந்த ஒரு நல்லஉண்மையான பெண் அமைப்பும் முன்வர மாட்டாது.

## இலக்கியத்தில்...

(5-ஆம் பக்கத் தொடர்)

இத்தெய்வமல்லது பொற்புடைத்தெய்வம்
யாம் கண்டிலமால்" என்று வியந்தார்.

வேட்டுவ குலத்துச்சாலினி என்பாள் தெய்வம் உற்ற நிலையில் ஒருமாமணியாய்.

உலகுக் கோங்கிய
திருமாமணி என்றாள். இவ்வுலகிற்கு ஒப்பற்ற முழு மாணிக்கம் போன்று உயர்ந்த அழகிய பெண்மணி என்று பின்வரும் நிகழ்வுகளைக் கூறியதும் வயங்கிய பெருங்குணத்தைக் கண்ணகி காதலித்தமையாலே தான்.

"மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்" என்னும் இவ் இனிய தொடர் மூலம் கண்ணகியின் முக்காலப் பெருமையையும் இளங்கோ அடிகள் அழகுறக் கூறி உள்ளார்.

## விழிப்புலன் . .

[11-ம் பக்கத் தொடர்]

இருந்தால் இவ கட்கு ஒரு நிரந்தர இடம் அமைக்க உதவலாம். நிலமாக,பொருளாக, பணமாக. படிப்பதற்கு பிரெயில் முதலிய உபகரணங்களை வழங்கி எம் உள்ளத்தை நிறைத்துக் கொள்ளலாம், பண்டிகை நாட்களில் பரிசுகள் தந்து பண்டிகைகளின் தத்துவங்களை புரிந்து கொள்ளலாம்-இப்படிப் பலப்பல.. அன்புடையர் எல்லாம் உடையர் உணர்ந்து கொண்டால் பேரின்பம் சிந்தையில் ஊற்றெடுத்து மணங்கமளப்பாயும்.


கம்பியூட்டர் கல்வி

d Base III +

2 MONTHS
ON
Tue. & Fri.

A Job Oriented Computer Course

Commencement 02-05 89 at 8 30

Lectures by Qualified & Experienced panel

தமிழிலும் விளக்கங்கள் தரப்படும்

Fees - Only 600/- per month

CIMA, IDPM, IAB, Book-Keeping, Shorthand/Typing, Basic வகுப்புகளும் நடைபெறுகின்றன

School of Business Administration
16, 3rd Cross Street Jaffna
(OLR தேவாலய மேற்குப்பக்கம்)

04462

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
**வீடியோ விகோன்ஸ்**
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டுவீதி

வார முரசொலி
VARAMURASOLI

ForQuality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

# வடகிழக்கு மாகாண எம். பிக்களுடன் ஜனாதிபதி பேசினார்

ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று முன்தினம் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் திருகோணமலை, வன்னி ஆகிய பகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாநாடு ஒன்றை நடாத்தினார்.

உறுப்பினர்கள் தமது பகுதிகளில் உதவி அரச அதிபர் பற்றாக்குறையை எடுத்துக் கூறிய போது இப்பகுதிகளில் உதவி அரச அதிபராக பதவியாற்ற விரும்பும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளின் விபரங்களை ஆராயும்படி ஜனாதிபதி பணித்தார்.

இச்சந்திப்பில் அ. அமிர்தலிங்கம், சாம்தம்பிமுத்து, பிறின்ஸ்காசிநாதர், ஆர் குகனேஸ்வரன், கருணசேகரம், திவ்வியநாதன் இமானுவல் சில்வா, ஜனுப் எம். எம். அஷ்ரப், எம். எம் புஹார்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் மகாநாட்டில் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

## இந்திய கலைஞர் நிகழ்ச்சிகள் நாளை கொழும்பில் இல்லை

இம்முறை கொழும்பில் நடைபெறும் ஐக்கிய தேசிய கட்சியின் மேதினக் கூட்டத்தில் இந்தி கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறமாட்டாது என அறிவிக்கபபட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக ஐக்கிய தேசியக்கட்சி மேதின மேடைகளில் இந்திய கலைஞர்களின் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது

இந்த வருடம் உள்ளூர் கலைஞர்கள் கலந்து கொள்ளும் கலை நிகழ்ச்சிகளை ஐ தே க. மேடையில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

## இடது கம்யூனிஸ்ட் கட்சியின் மேதின பொதுக் கூட்டங்கள்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) யாழ்ப்பாணத்திலும், மலையகத்திலும் தனது மேதினக் கூட்டங்களை நடத்துகின்றது.

யாழ் நகரில் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பட்டபபடிப்புக்கள் கல்லூரி மண்டபத்தில் காலை கட்சியின் பொதுச்செயலாளர் திரு.கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் மேற்படி மேதினக் கூட்டம் நடைபெறும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் சி கா. செந்திவேல், க. தணிகாசலம், சோ தேவராஜா, கா. கதிர்காமநாதன், கா. பஞ்சலிங்கம் உட்பட தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உரையாற்றுவார்கள்.

மலையகத்தில் பூண்டுலோயா நகரில் திரு. எஸ். இராஜேந்திரன் தலைமையில் மேதினக் கூட்டம் நடைபெறும் இ. தம்பையா, எஸ் செல்வராஜ், எம். பத்மநாதன், பி. இரவீந்திரன் ஆகியோர் உரையாற்றுவர்.

## கரவெட்டியில் இளைஞர் கொலை

(வடமராட்சி)

வெள்ளிக்கிழமை மாலை கரவெட்டி மேற்குப் பகுதியில் ம. மகாலிங்கம் (27 வயது) என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார் இவரது மரணத்திற்கு விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளனர்

## காலமானார்

### திரு. சந்திரராசா சண்முகநாதன் (சாமி)

திருநெல்வேலி கிழக்கு, செங்குந்தா வீதியில் வசிக்கும் சந்திரராசா சண்முகநாதன் (சாமி) 28-04-1989 ல் அகாலமரணமானார் அன்னார் காலஞ்சென்ற சந்திரராசா திருமதி சந்திரராசா இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், திருமதி பராசக்தி மகாலிங்கம்( அரசினர் வைத்தியசாலை, திருமலை), சிவசுப்பிரமணியம்( அரசினர் வைத்தியசாலை, மட்டுநகர்), புவனேஸ்வரி, கணேசலிங்கம், யோகலிங்கம் (அரசினர் நிலஅளவை பகுதி, கிளிநொச்சி), திலகராணி, சந்திரா, ஜெயலிங்கம் (பாலையபமன் சனசமூகநிலைய உபதலைவரும், அகதிகள் புனர்வாழ்வு நிதிய ஊழியரும் யாழ்நகர்) ஆகியோரின் அன்பு சகோதரனும், மகாலிங்கம் ( அரவிந் வைத்தியசாலை, திருமலை), நவம், செல்வரட்ணம், ஜெயராணி, காந்தரூபி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பவர்விழி, குகாயினி, செந்தூரன், சுபாயினி, சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனும், நவநீதன், துஷ்யந்தன், மயூரன், கர்மீஸ்வரன் ஆகியோரின் சித்தப்பாவும், நிரே ஜினியின் பெரியப்பாவும், சரசுவின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் இறுதி கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 01-05-89 காலை 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்து செல்லபபடும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

04469

### கலமுனையிலும் .

வெள்ளி ஆகிய தினங்களில் எந்த அரச அலுவலகமும் திறக்கக்கூடாதென்ற புலிகளின் உத்தரவு கடந்த வாரம் முதல் அமுல் செய்யப்படுகின்றது

### ஜவான்கள ..

ரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்: ஆர். முருகையா, ஓ. தங்கராசா, ஏ. சண்முகநாதன், பி நீலகண்டன், ரி தங்கசாமி, கே. சுபபிரமணியம், ஆர் இராமநாதன், எஸ். அந்தோனி, எம். இராசரத்தினம், ஏ இலங்கேஸ்வரன், எஸ். சிறீதரன், எம் மயில்வாகனம், எஸ். சகாதேவன், கே கிரிதரன், எம் சுப்பிரமணியம், எஸ் நாதன், பிரான்சிஸ் சவரி, எம் கதிரவேலு, கே. செல்வராசா, வி. சிவசுப்பிரமணியம், எஸ் சண்முகராசா, எம். கணேஸ், எஸ் முத்துக்குமாரு, எம் கிருஸ்ணமூர்த்தி, எம் இராசன்

துப்பாக்கி மோதலில் இரு அமைதிப்படையினர் மரணமானதாகவும் சொல்லப்படுகிறது

## பந்திகள் இடம்மாறின

23-4-89 வாரமுரசொலியின் 9-ம் பக்கத்தில் வெளியான இரண்டு கட்டுரைகளில் இடம்பெற்ற தவறுகளைக் கவனிக்கவும்:- 'தமிழ்ப்பெண்களும் இன்றைய நிலையும்' என்ற தலைப்பில் திரு. கா. குகபாலன் எழுதிய கட்டுரையின் நான்காம் ஐந்தாம் பந்திகள். வே ஜே. போஸ் எழுதியுள்ள "சீதனம் கேட்பது யார்? ஆணா, பெண்ணா?" என்ற கட்டுரையின் இறுதிப் பகுதியாகும் அதேபோல வே. ஜே போஸின் கட்டுரையில் இடம் பெற்றுள்ள ஏழாம், எட்டாம, ஒன்பதாம், பத்தாம் பந்திகள் திரு. குகபாலனின் கட்டுரையின் இறுதிப் பந்திகளாகும். பக்கம் கட்டும்போது, தற்செயலாக இந்தத்தவறு இடம்பெற்றதால் இரு கட்டுரையாளருக்கும் ஏற்பட்ட மனததாங்கல்களையிட்டு மிக மிக வருந்துவதுடன், இந்தத்தவறுக்காக மன்னிப்பும் கோருகின்றோம்.

பிரதம ஆசிரியர்

## நாகுவின் சடலம் மீட்கப்பட்டது

கடந்த மாதம் திருமலையில் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட திரு. குமாரவடிவேலு (நாகு) வின் சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது சுயேட்சைக் குழுவின் முதலாம் வேட்பாளராக நாகு போட்டியிட்டிருந்தார்.

## ஜி. சி. ஈ. பரீட்சை முடிவுகள் ஜூனில்

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் ஜூன் மாதத்தில் வெளிவரும்.

### நந்த நாள் ..

கிராமசேவகர் ஒருவர் தலை சீவப்பட்டு இரண்டு துண்டாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இச்சம்பவத்தில் காமினி ரஞ்சித் என்பவரும் ஸ்தலத்தில் பலியானார்.

புத்தளம் மாவட்டத்தில் குருவெடகஸ்வேவ என்ற இடத்தில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகமும், நான்கு

### வடகிழக்கில...

கல்வி அமைச்சு கோரியுள்ளது. யாழ் மாவட்டத்திலுள்ள விபரங்களை திரட்டும் வேலைகள் நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது

தனியாரின் வீடுகளும் குண்டு வைத்துத் தகர்க்கபபட்டு எரிக்கப்பட்டன.

கப்புறுப்பிட்டியவில் ரோந்து சென்ற ராணுவ வண்டிமீது நடத்தப்பட்ட தாக்குதலில் பண்டார என்ற சிப்பாய் கொல்லப்பட்டார். மற்றிரு சிப்பாய்கள் கடுங் காயத்துக்குள்ளானார்கள்.

## மூக்குக் கண்ணாடிகள்

வெளிநாட்டு பிறேம்களுடன் கூடிய றீடிங் கிளாஸ் வகைகள் + 1.00 தொடக்கம் + 4.00 வரையிலும் தற்போது பெற்றுக்கொள்ளலாம் விலை 62/- ல் இருந்து சகல விலைகளிலும்

மற்றும் சன்கிளாஸ் வகைகளும்
பெற்றுக்கொள்ள

**பென்ஸி ஹவுஸ்**

68, பெரியகடை (மின்சாரநிலைய வீதி)
யாழ்ப்பாணம்.

04668

## காலமானார்

### திரு. பொ. இராமநாதன்

(Fisheries Inspector யாழ்ப்பாணம்)

இல. 120, புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த பொ. இராமநாதன் அவர்கள் 26 04-89 அன்று காலமாகிவிட்டார் இவர் குணத்தின் அன்புக் கணவரும் ஜீவரேகா (Canada), ராஜமோகன் (Canada)' சந்திரலேகா (Canada), சாவித்திரி (Canada), ராம்மோகன் (யாழ் மத்திய கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வக்குமார் (Canada), வசந்தி (Canada), சாதனந்தன் (Canada), கிரிதரன் (Ganada) ஆகியோரின் அன்பு மாமனாரும், சேக்காவின் (Canada) அன்புப் பேரனும், நாகரெத்தினத்தின் அன்புச் சகோதரரும், தவமணி, தியாகராசா, செல்வராசா, பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கந்தையாவின் சகலனுமாவர் அன்னாரின் பூதவுடல் 01-05 89 திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

120. STATION ROAD,
JAFFNA.

தகவல்
மனைவி, மகன்

04470

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 30-04-89 அச்சிட்டு வெளியிடப்பெற்றது